மஞ்சரி

விஜய - சித்திரை

ஏப்ரல், 1953

தலை வெட்டும் ஜாதியார்

இரவிலே ஓட்டம்

நாகூர் மீரான்

சிந்து நீர் விவகாரம்

அவன் மனைவி (ருஷியக் கதை)

-6-

அணா

நியாயமா வேண்டும்?

ஒவ்வொரு மனிதனையும் அவனுடைய தகுதிக்கேற்றபடி நடத்துவதென்றால், எவன் கசையடிக்குத் தப்ப முடியும்?

— 'ஹாம்லட்', ஷேக்ஸ்பியர்.

மஞ்சரி

ஆசிரியர், பதிப்பாளர்: என். ராமரத்தினம்

நிர்வாக ஆசிரியர்: தி. ஜ. ரங்கநாதன்

பாஷை ஆசிரியர்கள்:

கி. வா. ஜகந்நாதன்
கா. ஸ்ரீ. ஸ்ரீ.
த. நா. ஸேனாபதி
கி. தாமோதரன்
வி. எச். சுப்பிரமணிய சாஸ்திரி
கி. சாவித்திரி அம்மாள்
சீதா தேவி
'ஆர்வி'
கௌரி அம்மாள்
மோ. ஸ்ரீ. செல்லம்

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு.

மஞ்சரி, தபாற் பெட்டி நெ. 604, மயிலாப்பூர், சென்னை 4. பிரதி மாதமும் முதல் தேதி வெளிவரும். தனிப் பிரதி விலை 6 அணா. வருஷ சந்தா ரூ. 4/8. கலைமகள் சந்தாதார்களுக்கு மட்டும் ரூ. 4/- சந்தாத் தொகையை 'ஸர்க்குலேஷன் மானேஜர்' என்ற விலாசமிட்டு அனுப்புக. விலாச மாற்றங்களைத் தங்கள் பழைய விலாசத்துடன் சந்தா எண்ணையும் குறிப்பிட்டுத் தெரிவியுங்கள்.

மஞ்சரியிலுள்ள எல்லாக் கட்டுரைகளும் கதைகளும் பதிப்புரிமை பெற்றவை.

ஆண்டு 6] விஜய-சித்திரை :: :: ஏப்ரல் 1953 [இதழ் 5

மஞ்சரி

மாதத்தின் சுவையான மலர்க்கதம்பம்

ஊரும் உலகமும்

★

அரிசி விற்பனைக் கண்ட்ரோலை ராஜாஜி எடுத்தபோது, என்னவோ ஏதோ குடி முழுகிப் போய்விடுமோ என்றெல்லாம் நம்மில் பலர் பயந்தோம். அப்படி ஒன்றும் விபரீதம் நேர்ந்துவிடவில்லை. இப்போது அமெரிக்காவில் ஜனாதிபதி பதவிக்கு வந்துள்ள ஐஸன்ஹோவரும் இதே போலப் பல பொருள்களின் விலைக் கண்ட்ரோலை எடுத்து வருகிறார். இரண்டு வாரத்துக்கு முன்பு, விலைக் கண்ட்ரோல்களின் ஆறுவது ரத்து உத்தரவை அவர் பிறப்பித்தார். காபி, பீர், ஸோயா பீன்ஸ் முதலிய அநேகம் பொருள்களின் விலைக் கண்ட்ரோலை அது நீக்கிவிட்டது. இரண்டாவது உலக யுத்தம் நடந்த காலத்தில், இனியும் கண்ட்ரோல் இல்லாத அந்தப் பழைய காலம் - யுத்தத்துக்கு முந்திய காலம் - எப்போதாவது திரும்புமோ என்று உலகெங்குமே மக்கள் ஏங்கினார்கள். இதோ அது திரும்பி வந்து கொண்டிருக்கிறது. சென்னையிலே உள்ள வீட்டுக் கண்ட்ரோல்கூடச் சமீபத்திலேயே நீங்கி, 'டு லெட்' போர்டுகளைப் பல இடங்களிலும் காணும் அதிருஷ்டம் நமக்குக் கிடைத்தாலும் கிடைக்கலாம்.

இந்த மார்ச் 16-ஆம் தேதி 'ராமன் விளைவு' என்ற விஞ்ஞான தத்துவத்தைக் கண்டு பிடித்ததற்கு 25-ஆவது ஆண்டு வெள்ளி விழா நாள். இந்த மகத்தான தத்துவத்தைக் கண்டுபிடித்த ஸர் சந்திரசேகர வேங்கடராமன், 1888-நவம்பர் 7-ஆம் தேதி திருச்சி எஸ். பி. ஜி. காலேஜ் உபாத்தியாயரான சந்திரசேகர ஐயர் என்பவரின் குமாரராகப் பிறந்தார். சென்னை பிரெஸிடென்ஸி காலேஜில் படித்துப் பட்டம் பெற்றார். விஞ்ஞானத் துறையில் ஆராய்ச்சிகள் புரிந்தார். பிரிட்டிஷ் ராயல் ஸொஸைட்டி மெடல்களும் நோபெல் பரிசும் பெற்றார். ராமன் ஒரு மேதை. அவருடைய ஆராய்ச்சிகள் நாட்டுக்கே-முக்கியமாகத் தமிழ் நாட்டுக்கு-உயர்வும் பெருமையும் தருவன. அவர் கண்டுபிடித்த தத்துவம் 'ராமன் எஃபெக்ட்' என்று விஞ்ஞான நூல்களிலெல்லாம் இடம் பெற்று, அவருக்கு அழியாப் புகழ் தந்துவிட்டது. ஐன்ஸ்டீன் போன்ற மேதைகளெல்லாம் அவரைக் கொண்டாடுகிறார்கள். ராமன் பல காலம் வாழ்ந்து மேலும் மேலும் கீர்த்தியும் செல்வமும் பெற வாழ்த்துகிறோம்.

வகுப்புவாத வெறி மீண்டும் மெல்ல மெல்லத் தலை தூக்கும் போல் இருக்கிறது. இந்த நிலையில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி, எங்கேயாவது வகுப்புவாதக் கட்சிகளுடன் சேர்ந்துவிடுமோ என்று நேரு அஞ்சுகிறாராம். ஆகவே, காங்கிரஸுடன் அந்தக் கட்சி ஒத்துழைக்க முடியுமா என்று கேட்டறிய விரும்பினாராம். அது எப்படியோ? ஜயப்பிரகாஷ் நாராயணனை அழைத்து, நேரு பேரம் பேசியது மட்டும் பகிரங்கமாய்த் தெரிந்த விஷயம். பேச்சுப் பலன் தரவில்லை. முக்கால்வாசி விஷயங்களில் ஜயப்பிரகாஷுடன் நேருவுக்குக் கருத்தொற்றுமை உண்டு. அப்படி இருந்தும் இருவரும் சமரச வழி காண முடியவில்லை. ஏன்? காரணத்தை 'ஹிந்து' தலையங்கம் அழகாய் விளக்கியிருக்கிறது: "நாட்டு நிலைமைக்கேற்ற கட்சிகள் வேண்டும். அவை கொள்கை வித்தியாசங்களை அடிப்படையாய்க் கொண்டிருக்க வேண்டும். காங்கிரஸே தேசம் என்று இனிச் சொல்லிக் கொண்டிருக்கக் கூடாது." ஆட்சி புரியும் காங்கிரஸ் பல கொள்கையினர் சேர்ந்த கதம்பக் கட்சியாக இருக்கும் வரையில், ஒழுங்கான ஜனநாயகக் கட்சிகள் நாட்டிலே தோன்றிச் செயல் புரிவது சாத்தியம் இல்லை. இந்த உண்மையை இனியும் நாம் பூசி மெழுகிக் கொண்டிருப்பதற்கில்லை.

* * *

பாகிஸ்தானிலே அயல் விவகார மந்திரியாகப் பதவி வகிக்கும் ஸர் ஜபருல்லா, பாகிஸ்தானுக்காகப் படாத பாடு படுகிறார். ஐ. நா. வில் காரசாரமாக இந்தியாவை அவர் தாக்கும் பேச்சுக்களைப் படிக்கும்போது, நமக்கு ஒரு புறம் எரிச்சல் வந்தாலும் வியப்பும் உண்டாகும். அப்படிப் பாகிஸ்தானுக்குச் சேவை செய்கிறவரைப் பல பாகிஸ்தானிகளுக்குப் பிடிக்கவில்லை. அஹமதியர் என்ற வகுப்பைச் சேர்ந்தவர் ஸர் ஜபருல்லா. அவர் மந்திரி பதவி வகிக்கக்கூடாதாம். முஸ்லிம்களுக்குள் அஹமதியர் ஒரு சிறு வகுப்பினர். அவர்களைச் சிறுபான்மை வகுப்பினராகவே நடத்த வேண்டுமாம். இதற்காகப் பாகிஸ்தானில் ஒரு பெருங்கிளர்ச்சியே நடந்து வருகிறது. இந்தக் கிளர்ச்சியும் வேறு சில குறைகளும் சேர்ந்து முற்றிக் கலகங்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும் பாகிஸ்தானில் சில வாரங்களுக்கு முன்பு நடந்தன. இந்தச் சந்தடி சாக்கில், இந்தியாவை வீண் வம்புக்கிழுக்கிறார் பாகிஸ்தான் பிரதமர் க்வாஜா நாஜிமுத்தீன். அஹ்ரார் என்ற முஸ்லிம் வகுப்பினரும் அவர்களுடன் சேர்ந்துகொண்ட வேறு சில கோஷ்டிகளுந்தான் இந்தக் கலவரங்களின் மூல கர்த்தாக்கள் என்கிறார். இப்படிச் சொல்லியதோடு விடவில்லை; அந்த அஹ்ரார்களுக்குப் பாகிஸ்தானின் எல்லைக்கு வெளியிலே சம்பந்தம் இருக்கிறதாம். அதாவது, யாரோ இந்தியர் இந்தக் கலவரங்களைத் தூண்டிவிடுவதாகக் குறிப்பாய்ச் சொல்லுகிறார். இதுதான் விஷமம்; சற்றும் நியாயமில்லாத பேச்சு.

* * *

ஸோவியத் யூனியனின் இணையில்லாத் தலைவரும் நவீன ருஷியாவின் சிற்பியும் உலக ராஜதந்திர-

ராணுவ தந்திர நிபுணர்களில் சிறந்த ஒருவருமான ஸ்டாலின் காலமாகிவிட்டார். ஸ்டாலின் கைக்கொண்ட முறைகள்பற்றியும் கம்யூனிஸ்ட் ஆட்சிபற்றியும் பல வித அபிப்பிராயங்கள் இருக்க லாம். ஆனால், ஸ்டாலின் ஓர் அபூர்வ புருஷர் என்பதை எவரும் மறுக்க முடியாது. செழிப்பற்றுச் சீர்குலைந்து கிடந்த பிரம் மாண்டமான ஒரு தேசத்தை, பயிர்வளமும் தொழில் செழுமை யும்கொண்ட ஓர் உலக வல்லரசு ராஜ்யமாக முப்பதே வருஷங்களில் புனர் நிர்மாணம் செய்த பெருமை அவரைச் சேரும். ருஷியாவில் மட்டும் அல்ல; உலகெங்கும் கம்யூ னிஸ்டுகள் அவரையே தங்கள் குரு வாகவும் தலைவராகவும் பாவித்துப் போற்றி வந்தார்கள். மற்றவருக் கும் அவரிடம் நல்ல மதிப்பு உண்டு. அவர் மரணத்தைப்பற்றி அமெ ரிக்க அயல் விவகார மந்திரி ஜான் ஃபாஸ்டர் டல்லஸ் குறிப்பிடும் போது, "ஸ்டாலின் சகாப்தம் முடிந்தது; ஐக் சகாப்தம் தொடங்கிவிட்டது" என்றார். தொடங்கிய சகாப்தம் எதுவானு லும் சரி; சென்ற முப்பது வருஷ காலத்தையும் ஸ்டாலின் சகாப் தம் என்றுகூடச் சொல்வது தகும். அவ்வளவு தூரம் ஸ்டாலினின் செல்வாக்கு நேரடியாகவோ, மறைமுகமாகவோ உலகெங்கும் பரவியிருந்தது. இப்படிப்பட்ட சிறந்த புருஷர் காலமானது ருஷியாவுக்கு மட்டும் அல்ல; உலகத்துக்கே ஒருவிதத்தில் நஷ்டந்தான்.

* * *

ஸ்டாலின் காலமானரோ, இல்லையோ; ருஷியாவில் பதவிப் போட்டிகளும் சூழ்ச்சிகளும் மிகக் கடுமையாய்த் தோன்றிவிடும் என்றும், ஸோவியத் யூனியனே அதனால் கலகலத்துக்கூடப் போய்விடலாம் என்றும் சிலர் கனவு கண்டுகொண்டிருந்தார்கள். அதெல்லாம் பகற்கனவாய்ப் போய் விட்டது. ஸ்டாலினின் ஸ்தானத் துக்கு வாலிப மாலன்காவ், வெகு சுலபமாக, விரைவாக, வயதில் மூத்த பழைய தலைவர் களின் சம்மதத்தோடு வந்துவிட் டார். அவரைப்பற்றி அதிகமாக எதுவும் தெரியவில்லை. ஒன்று மட்டும் சொல்கிறார்கள். யுத்த காலத்தில் போர் முனையை ஸ்டா லின் கவனித்துக்கொண்டாராம்; விமானங்கள் முதலிய தளவாட உற்பத்திகளைப் பெருக்கும் காரி யத்தை வெகு திறமையாகச் செய்து வந்தாராம் மாலன்காவ். ஆட்களைச் சேர்த்து ஒரு காரி யத்தை நிறைவேற்றுவதில் அவர் நிபுணர் என்கிறார்கள். தாம் பதவி யேற்றதும், "சமாதான ரீதியில் சகல நாடுகளும்- அமெரிக்காவுந் தான் - தீர்த்துக்கொள்ள முடி யாத விவகாரமே எதுவும் இருக்க முடியாது" என்று சமரசக் குறிப் புத் தோன்ற அவர் பேசியிருக் கிறார். இதை அமெரிக்கர் நம்பு கிறார்களோ, இல்லையோ; அது தெரியவில்லை. ஆனால், தங்கள்மீது யாரும் குற்றம் சொல் லாதபடி நடந்துகொள்ளுவதற் காக, மாலன்காவின் குறிப்புக்கு அவரையே அமெரிக்க அதிகாரி கள் விளக்கம் கேட்டிருக்கிறார் களாம். இதன் பலனாக, ருஷிய- அமெரிக்கப் பிரசாரப் போர் நின்று, சமரசம் ஏற்பட்டு அமை திக்கு வழி தோன்றுமானால் உல கத்துக்கே நல்லதுதான்.

ஆக்ரா நகரிலே அநாதையான ஓர் அகதிச் சிறுவன், கொஞ்ச காலத்துக்கு முன் தன் தகப்பனை இழந்தான். சில நாளைக்கு முன் அவன் தாயும் மாண்டுவிட்டாள். இந்தச் சாவை முனிசிபல் அதிகாரிகளுக்குத் தெரிவிக்க வேண்டும் என்ற சட்டம் எல்லாம் அவனுக்குத் தெரியாது; அவன் தெரிவிக்கவில்லை. உடனே முனிசிபல் அதிகாரிகள் அவன்மீது வழக்குத் தொடர்ந்துவிட்டார்கள். குற்றத்தைச் சிறுவன் ஒப்புக்கொண்டான். அவனுக்கு மாஜிஸ்திரேட் பத்துரூபாய் அபராதம் விதித்தார். அவனோ அநாதை; அகதி. அவனிடம் பணம் எது? அபராதத் தொகையைச் செலுத்த முடியவில்லை. ஜெயிலுக்குத்தான் அவனை அனுப்ப வேண்டும். மாஜிஸ்திரேட்டுக்கு அப்படிச் செய்ய மனமில்லை. தாம் அவனுக்கு விதித்த அபராதத் தொகையை, அவனுக்காகத் தாமே செலுத்தி அவனை விடுதலை செய்துவிட்டார். மாஜிஸ்திரேட்டின் தயாளச் செயல் பெரிதும் பாராட்டத் தக்கது. ஆனால், கருணையோ, கற்பனா சக்தியோ இல்லாமல், ஓர் அகதிச் சிறுவனைக் கோர்ட்டில் கொண்டுவந்து நிறுத்தினார்களே அந்த முனிசிபல் அதிகாரிகளைப்பற்றி என்ன சொல்வது? ஏதும் சொல்வதை விட ஒன்றும் சொல்லாதிருப்பதே மேல்.

நடிகரின் கண்

பிரெஞ்சு சினிமா நடிகர் ஒருவருக்கு ஒரு நாள் ஒரு பெண்ணிடம் இருந்து, "தங்கள் கண் நிறம் என்ன? தயவு செய்து தெரிவியுங்கள்" என்று ஒரு கடிதம் வந்தது.

நடிகருக்குப் பெருமை தாங்கவில்லை. "நீலம்" என்று உடனே பதிலளித்தார்.

சில நாளைக்கெல்லாம் அதே பெண்ணிடம் இருந்து அவருக்கு மற்றொரு கடிதம் வந்தது. "வந்தனம். தங்கள் கண் நிறம், எங்கள் நாயின் கண் நிறமே என்று நான் சொன்னேன்; இல்லை என்றார் என் கணவர். தங்கள் பதிலால் நான் வெற்றி பெற்றேன்."

—'பாரிஸ்-ப்ரஸ்-இன்ட்ரான்'

ரகஸ்யம் அம்பலமாயிற்று

ஒரு தாய் தன் மகனின் விஞ்ஞான அறிவுத் திறமையை விருந்தாளிகளுக்குக் காட்ட எண்ணினாள்.

"கண்ணு, தண்ணீர்க் கெட்டிலில் இருந்து ஆவி கிளம்பினால், அது எதைக் காட்டுகிறது? எங்கே, சொல் பார்க்கலாம்" என்று சிறுவனிடம் கேட்டாள்.

"அதுவா? சொல்கிறேன். அப்பாவுக்கு வந்த கடிதாசு எதையோ, உறையை உடைக்காமல் நீராவி பாய்ச்சி நீதிறந்து பார்க்கப் போகிறாய் என்பதைத்தான்" என்றான் சிறுவன்.

—'தி எக்சேஞ்ஜ்', ஐக்கிய அமெரிக்கா.

விஞ்ஞானி ராமன் நோபெல் பரிசு பெற்றது இதற்காகத்தான்.

ராமன் கண்டுபிடித்தது

ஜீ. என். ராமசந்திரன்

பெங்களூரில் தென்னிந்திய ஸயின்ஸ் அஸோஸியேஷன் முன்பு 1928 மார்ச் 16-ஆம் தேதி ஸர் ஸி. வி. ராமன் ஒரு பிரசங்கம் செய்தார். புதிய வகையான 'ரேடியேஷன்' (கிரண வெளியீடு) ஒன்றைப்பற்றி அதில் அவர் விளக்கினார். அதற்குச் சிறிது காலத்துக்கு முன்பு, கல்கத்தா 'லேபரெட்டரி' (சோதனைச்சாலை) ஆராய்ச்சிகளில் அவரே கண்டு பிடித்தது இந்த வகை 'ரேடியேஷன்'; இதைத்தான் பின்னால் 'ராமன் எஃபெக்ட்' (ராமன் விளைவு) என்று சொல்லி வருகிறார்கள். இதை அவர் கண்டுபிடித்ததற்காகவே, 1930-இல் ஸர் ஸி. வி. ராமனுக்கு நோபெல் பரிசு கிடைத்தது.

கட்டி (ஸாலிட்), திரவம் (லிக்விட்), வாயு (காஸ்) இப்படி எந்த உருவில் உள்ள வஸ்துவினாலாவது ஒளி சிதறினால், ராமன் எஃபெக்ட் ஏற்படுகிறது. 'ஒளிச் சிதறல்' (ஸ்கேட்டரிங் எஃபெக்ட் அவ் லைட்) என்பது தினந்தோறும் சாதாரணமாய் எத்தனையோ சமயங்களில் நம் கண் முன்னே நிகழ்ந்துகொண்டிருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் இதைப் பார்த்திருப்போம். உதாரணமாக, தூசி நிறைந்த ஓர் அறைக்குள் ஜன்னல் வழியாகச் சூரிய ஒளி பாயும்போது, அதில் தூசி பறப்பது தெரிகிறது. அந்தத் தூசித் துணுக்குகளின் ஒளி பல பக்கமும் சிதறுவதால்தான், அந்தத் துணுக்குகள் நம் கண்ணுக்குப் புலனாகின்றன.

வாயு உருவில் உள்ள பொருள்களில் ஒளிபட்டுச் சிதறுவதைச் சென்ற நூற்றாண்டிலேயே கண்டுபிடித்திருந்தார்கள். லார்டு ராலி என்ற பௌதிக சாஸ்திரி (ஃபிஸிஸிஸ்ட்), இந்த ஒளிச் சிதறல் பற்றிய விதிகளை நிர்ணயித்துவிட்டார். வெண்மையான ஒளியிலிருந்து நீலம், ஊதா இந்த இரண்டு நிறக் கதிர்களுமே, மஞ்சள், சிவப்பு இந்த இரண்டு நிறக் கதிர்களையும் விட அதிகமாய்ச் சிதறுகின்றன என்று அவர் நிரூபித்தார். சொல்லப் போனால், முதல் இரண்டும் பிந்திய இரண்டையும்விடப் பத்து அல்லது பதினைந்து மடங்குகூடச் சிதறுகின்றன. ஒளியைக் காற்றின் 'மாலெக்யூல்'கள் (மூலக்கூறுகள்) சிதறுவதால்தான் ஆகாசத்தில் நீல நிறம் தோன்றுகிறது. பூமியைக் காற்றுச் சூழ்ந்திராவிட்டால், ஆகாசம் ஒரே கறுப்பாகவே இருக்கும். நாற்பதாயிரம் அடி உயரத்தில் போய்ப் பார்க்கும்போது, ஆகாயம் இப்படித்தான் கறுப்பாய்த் தெரிகிறது. ஏனென்றால், அவ்வளவு உயரத்தில் காற்று மிகவும் சொற்பமாயிருக்கிறது.

மேலே சொன்ன ஒளிச் சிதறல் வகையை 'ராலி எஃபெக்ட்'

மூலம்: ஹிந்து (ஆங்கிலம்: 16-3-'58), சென்னை.

என்று சொல்லுகிறார்கள். அந்த ஒளிச் சிதறலில், பல நிறங்கள் சிதறும்போது பல தர அழுத்தம் (இண்டென்ஸிட்டி) உள்ளவையாகச் சிதறுகின்றன. ஆனால், ஒரே நிற ஒளியை உபயோகித்தால், சிதறும் ஒளியும் அந்த நிறமாகவே இருக்கும். உதாரணமாக, பச்சை நிற ஒளியின் சிதறலும் பச்சையாகத்தான் இருக்கும். இப்போது 1928 - இல் ராமனே மற்றொரு வகை ஒளிச் சிதறலைக் கண்டு பிடித்தார். சிதறும் ஒளியின் நிறமுங்கூட மாறுகிறது என்பதுதான் அவர் கண்டு பிடித்தது. இதற்கே 'ராமன் எஃபெக்ட்' என்று பெயர் வந்தது.

ஒரு பொருளின் 'மாலெக்யூல்' மீது விழும் ஒரு நிற ஒளி சிதறும்போது, அந்தச் சிதறலின் பெரும் பகுதி அந்த அசல் ஒளியின் நிறமாய்த்தான் இருக்கிறது. ஆனால், அந்தச் சிதறலின் ஒரு சிறு கூறு மட்டும் சற்று நிறம் மாறுகிறது. இதுதான் 'ராமன் எஃபெக்ட்.'

இந்த 'ராமன் எஃபெக்ட்' மூலம் நமக்கு என்ன பயன் என்று கேட்கலாம். ஒரு பொருளின் 'மாலெக்யூல்'களுக்கு இருக்கும் சக்தி நிலை (எனெர்ஜி லெவல்) என்ன என்பதை, கண்ணுக்குத் தெரியும் சாதாரண வெளிச்சத்தைக் கொண்டே, 'ராமன் எஃபெக்ட்' மூலம் நாம் அறிந்துகொள்ள முடிகிறது. 'ராமன் எஃபெக்ட்' கண்டு பிடிக்கப்பெறுவதற்கு முன்பும், 'மாலெக்யூல்'களின் 'சக்தி நிலை'யைக் கணக்கிட்டுத்தான் வந்தார்கள். ஆனால், அப்போதெல்லாம் சிக்கலான கருவிகளை உபயோகித்து 'இன்ஃப்ரா ரெட்' என்ற கண்ணுக்குத் தெரியாத ஒளிக்கதிர்களை வீசியே இப்படிக் கணக்கிட்டு வந்தார்கள். இப்போது வாயு, திரவம், படிகம் (க்ரிஸ்டல்) இவைகளின் சக்தி நிலையை அறிந்துகொள்ள, 'ராமன் எஃபெக்ட்'டைத்தான் மிகப் பெரும்பாலும் கையாளுகிறார்கள்.

ஆமாம், இவ்வளவு சிரமப்பட்டு எதற்காக 'மாலெக்யூல்'களின் சக்தி நிலையைக் கணக்கிடவேண்டும் என்று சிலர் கேட்கலாம். ஒரு பொருளின் ரசாயன (கெமிக்கல்) இயல்பையும் பௌதிக (ஃபிஸிக்கல்) இயல்பையும் அறிந்துகொள்ள இந்தச் சக்தி நிலை நிர்ணயம் உதவுவதால்தான், அப்படிக் கணக்கிட வேண்டியிருக்கிறது. ஆகவே, 'ராமன் எஃபெக்ட்' மூலம் 'மாலெக்யூ'லின் அமைப்பையே கண்டுபிடிக்க முடிகிறது. ரசாயன ரீதியில் செய்யும் ஆராய்ச்சிகளால் மட்டும் 'மாலெக்யூல்'களின் அமைப்பை நிர்ணயிப்பது பூர்த்தியானதல்ல.

படிகங்களில் வெவ்வேறு அணுக்கள் எவ்வளவு பலம் (ஃபோர்ஸ்) கொண்டு இணைந்திருக்கின்றன என்பதை 'ராமன் எஃபெக்ட்' மூலம் திட்டமாகக் கணக்கிட முடிகிறது. இதனால், ரசாயன ரீதியிலும் பௌதிக ரீதியிலும் படிகங்கள் ஒரு குறிப்பிட்ட நிலையில் எப்படி நடந்துகொள்ளும் என்பதை முன்னதாகவே சொல்ல முடிகிறது. படிகங்கள் சம்பந்தமான இந்த ஆராய்ச்சிகளை ராமனும் அவருடைய சகாக்களும் சமீப வருஷங்களில் நிறையச் செய்திருக்கிறார்கள்.

இவையெல்லாம் பௌதிக சாஸ்திர அறிஞர்களுக்கு மட்டுமே சிரத்தையுள்ளவையாகத் தோன்றும். ஆனால், இவற்றால், அநுபவத்திலும் பல காரியங்களில்

பயன் எற்பட்டிருக்கிறது. ரசாயன முறைகளைக் கொண்டு நடக்கும் பெரிய தொழிற்சாலைகளிலெல்லாம் ‘ராமன் எஃபெக்’டை இப்போதே கையாண்டு வருகிறார்கள். ஒரு பொருளை இன்னது என்று உணர்ந்துகொள்ள, ‘ராமன் எஃபெக்ட்’ உதவுகிறது. பெட்ரோலியம் எடுக்கும் தொழிலில்தான் முதல்முதலில் விரிவாக ‘ராமன் எஃபெக்’டைக் கையாண்டார்கள். எடுக்கும் பெட்ரோலியத்தில் பற்பல ‘ஹைட்ரோ - கார்பன் கம்போனண்ட்’ (நீர்க் கரிக் கூறுகள்) எவ்வளவு மடங்கு இருக்கின்றன என்பதை வெகு சுலபமாக ‘ராமன் எஃபெக்ட்’ மூலம் அறிந்துகொள்ளுகிறார்கள். பிறகு வேறு அநேகம் பொருள்களின் ரசாயனச் சேர்க்கையை அலசிப் பார்க்க ‘ராமன் எஃபெக்’டைப் பயன்படுத்தத் தொடங்கிவிட்டார்கள். இந்த ‘ராமன் எஃபெக்டி’ன்மீது சமீப வருஷங்களில் எவ்வளவு சிரத்தை எற்பட்டிருக்கிறது என்பதை, ஒரு ஜெர்மானியர் 1952-இல் எழுதி வெளியிட்டுள்ள ஒரு புஸ்தகத்தைக் கொண்டே அறிந்துகொள்ளலாம். ‘டெர் ராமன் எஃபெக்ட் அண்ட் ஸீன் அனலிட்சே அன்வெண்டஸ்’ (ராமன் எஃபெக்டும் அதன் ரசாயன அலசல் பிரயோகங்களும்) என்பது அந்தப் புஸ்தகத்தின் பெயர்.

இந்த ‘ராமன் எஃபெக்ட்’டின் உபயோகம் வரவர வளர்ந்துகொண்டே வருகிறது; ரசாயனத் தொழில் புரிவோருக்கு வலிமைமிக்க ஓர் ஆயுதமாக விளங்குகிறது. ஆயினும், அடிப்படையான ஆராய்ச்சிகளில் இதன் பிரயோகங்களையெல்லாம் பரிபூர்ணமாய்ப் பார்த்து யாரும் முடிவு கட்டி விடவில்லை. ஆகவே, பௌதிக சாஸ்திரிகளும் இன்னும் வெகு காலம் வரைக்கும் ‘ராமன் எஃபெக்’டைக் கையாண்டு, பொருள்களின் இயல்புபற்றிய மர்மங்களை ஆராய்ந்துகொண்டுதான் இருப்பார்கள்.

ஸினிமாவில் பாட்டு

பெர்ல் பக் எழுதியுள்ள ‘குட் எர்த்’ என்ற கதையை ஹாலிவுட் முதலாளிகள் படம் பிடிக்க எண்ணினார்கள். மிகச் சிறந்த சாகித்தியகர்த்தாவைக் கொண்டு, எற்ற மெட்டுக்கள் தயாரிக்கத் தீர்மானித்தார்கள். அர்னால்டு ஸ்கான்பெர்க் என்ற பிரபல சாகித்தியகர்த்தா அப்போது ஹாலிவுட்டுக்கு வந்திருந்தார். அவரை ஒரு முதலாளி அழைத்து, ‘குட் எர்த்’ கதையை அவருக்குச் சொன்னார். “கதையில் ஒரு புயல் வருகிறது. பிரமாதமான புயல்; கோதுமைப் பயிரெல்லாம் அப்படியும் இப்படியும் சாய்கின்றன. பூமியே திடீரென்று ஆட்டமெடுக்கிறது. பெரிய பூகம்பம்! அந்தப் பூகம்பத்துக்கு நடுவிலே, ஓ-லான் ஒரு குழந்தையைப் பிரசவிக்கிறாள். இந்தக் கட்டத்தை அப்படியே மனங் கவரும்படி செய்யப் பின்னணி சங்கீதம் வேண்டும்” என்றார்.

“சுற்றிலும் இத்தனை அமளிகள் நடக்கும்போது, சங்கீதம் வேறே வேண்டுமா? எதற்கு?” என்றார் சாகித்தியகர்த்தா.

—ஹெலென் காஃப்மான்

நாரதர் தோற்றம்

சௌனகர் முதலிய முனிவர்கள் ஒருசமயம் நைமிசாரணியத்தில் ஒரு பெரிய யாகம் செய்து முடித்தார்கள். ஆயிரம் வருஷங்களில் செய்து முடிக்கும் யாகம் அது. அதன் நடுவே ஒரு நாள் சூத முனிவரை வணங்கி, "உங்களைப் போல் கதை சொல்வதில் சிறந்தவர் யார் இருக்கிறார்கள்? சுக முனிவர் சொன்ன புண்ணியமான பாகவதக் கதையை எங்களுக்குத் தாங்கள் கூறவேண்டும். இது எந்த யுகத்தில், எந்த இடத்தில் எதற்காக உண்டாயிற்று? என் வேதவியாசர் இதை இயற்றினார்? அவர் மகனான சுகர், குரு ஜாங்கல தேசத்துக்கு வந்ததை மக்கள் எப்படி உணர்ந்தார்கள்? பரீக்ஷித்து மன்னனுக்கும் சுகருக்கும் சம்வாதம் நடந்தது எப்படி?" என்று கேட்டார்கள்.

சூத முனிவர் சொல்லலானார்: துவாபர யுகத்தில் ஒருநாள் வியாசர், ஸரஸ்வதி நதியில் ஸ்நானம் செய்தபின் சுத்தமாக அமர்ந்து, அதர்மம் நிறைந்த உலக நிலையை எண்ணிச் சிந்தையில் ஆழ்ந்திருந்தார். பிறகு உலக நன்மையை நாடி, வேதத்தை நான்காகப் பிரித்தார். அவைகளின் கருத்தை எல்லாரும் அறிவதற்காக இதிகாச புராணங்களையும் ஐந்தாவது வேதம் என்று சொல்லும் பாரதத்தையும் எழுதினார். இவ்வளவு செய்தும் அவர் மனத்தில் அமைதியும் மகிழ்ச்சியும் ஏற்படவில்லை. அப்போது நாரத முனிவர் அங்கே வந்தார். அவரை உடனே வியாசர் உபசரித்து அமரும்படி செய்தார்.

பிறகு, "முனி புங்கவரே, என் உடல், மனம் இரண்டும் சரியாகத்தான் இருக்கின்றன. மகாபாரதத்தையும் எழுதிவிட்டேன். பகவானைப்பற்றி ஆராய்ந்து ஓரளவு அவரை அறிந்துகொண்டேன். இவ்வளவு செய்தும் என் மனத்தில் ஏனோ மகிழ்ச்சி இல்லை? இது என் என்று எனக்குப் புரியவில்லை. தாங்கள்தான் இதைத் தெளிவுபடுத்த வேண்டும்" என்றார்.

அதற்கு நாரதர் சொன்னார்: "முனிவரே, நீங்கள் பகவானுடைய புகழையும் குணாதிசயங்களையும் பாரதம் முதலியவற்றில் முழுவதும் கூறவில்லை. குணங்களைக் கூறினால்தான் பகவான் திருப்தி அடைவார். அப்போதுதான் உங்கள் மனத்திலும் மகிழ்ச்சி ஏற்படும்.

கிருஷ்ண பகவானின் லீலைகளை மட்டும் அல்ல; இன்னும் எத்தனையோ அரிய கதைகளையும் சொல்வது பாகவதம். அதன் ஒரு பகுதி இது.

சாதுக்கள் பகவானுடைய புகழை எப்போதும் கேட்கிறார்கள்; பாடுகிறார்கள். உலகத்தில் மனிதன் செய்யும் நல்ல காரியங்களில் பகவானுடைய குணங்களைப் போற்றுவதே சிறந்தது; அந்தப் பாக்கியம் பெறுவதே வாழ்வின் முக்கியப் பயனாகும்."

"நான் முன் பிறவியில் ஒரு வேதியன் வீட்டில் வேலை செய்து வந்த அடிமைப் பெண்ணின் மகனாக இருந்தேன். அப்போது 'சாதுர் மாஸ்ய' விரதத்துக்காக ஓர் இடத்தில் கூடியிருந்த சாதுக்களுக்கு மிகவும் சிரத்தையுடன் பணிவிடை செய்துவந்தேன். அதனால் சாதுக்கள் மகிழ்ச்சி அடைந்து, பகவானைப்பற்றி எனக்கு உபதேசித்தார்கள். நான் அவர்கள் சொன்னபடி நடந்து அந்த உணர்ந்தேன். ஆனாலும், என் தாய்க்கு என்னைத் தவிர வேறு குழந்தை இராததால், என்மேல் அதிக அன்பு செலுத்தி வந்தாள். என்னை நன்றாக வளர்க்க ஆசை கொண்டாள். ஆயினும் பிறரிடம் அடிமையாக இருந்ததால் அவளால் எனக்கு ஒன்றும் செய்ய முடியவில்லை. அப்போது எனக்கு வயது ஐந்துதான்.

"ஒரு நாள் இரவு மாட்டைக் கறக்க என் தாய் வெளியே வந்தபோது அவளை ஒரு பாம்பு கடித்துவிட்டது. அவள் இறந்துபோனாள். பிறகு நான் வடக்கு நோக்கிப் புறப்பட்டு, பல நகரம், காடு, ஆறு, ஓடை இவைகளைத் தாண்டி ஒரு பெரிய காட்டுக்கு வந்து சேர்ந்தேன். அங்கே இருந்த ஆற்றில் குளித்து அதன் நீரைப் பருகிக் களை தீர்த்தேன். பிறகு ஓர் அரச மரத்தடியில் அமர்ந்து, பகவானுடைய உருவத்தைச் சாதுக்கள் உபதே

சித்த முறையில் தியானம் செய்தேன். பகவான் சிறிது சிறிதாக என் உள்ளத்தில் தோன்றினார். அந்தப் பேரானந்தத்தில் மூழ்கி நான் மெய்மறந்திருந்தேன். சிறிது நேரத்துக்கெல்லாம் அவருடைய உருவம் திடீரென்று மறைந்துவிட்டது. இதனால் என் மனத்தில் குழப்பம் ஏற்பட்டது; மறுபடி அவரைக் காண மனத்தை அடக்கிச் சமாதியில் ஈடுபட்டேன். ஆனால் அந்த உருவம் தெரியவேயில்லை. ஆகவே, பைத்தியம் பிடித்தவன் போல் அந்தக் காட்டில் சுற்றி அலைந்துகொண்டிருந்தேன். அப்போது என்னிடம் இரக்கம் கொண்டு அவர், 'குழந்தாய், காமம் குரோதம் முதலியவற்றை விடாதவர் என்னைக் காண முடியாது. உனக்கு அருள் புரிவதற்காக ஒரு தரம் என் உருவத்தைக் காட்டினேன். இனி இந்த உடல் போன பிறகே நீ என் உருவத்தைக் காண முடியும். சாதுக்களுக்குப் பணிவிடை செய்ததால் என்னிடம் உனக்கு உண்டான பக்தி ஒரு போதும் அழியாது' என்று என்னைத் தேற்றினார்.

"பிறகு நான் பகவானுடைய லீலைகளையும் குணங்களையும் பற்றித் தியானித்தபடி எதிலும் பற்றில்லாமல் உலகம் சுற்றிக் கொண்டே இருந்தேன். அந்த உடலை விட்டு அகலும் காலத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். பிறகு பகவானுடைய சக்தி என்னை இழுத்தது. நான் பழைய உடலை விட்டு, ஸ்ரீமந் நாராயணனின் உடலில் அடங்கியிருக்கும் பிரம்மாவிடம் உயிரோடு புகுந்தேன். பிரம்மா சிருஷ்டித் தொழிலை ஆரம்பித்தபோது, நானும் மரீசி முதலிய முனிவர்களும் அவரிடமிருந்து வெளிப்பட்டோம். அது முதல் பகவானுடைய அருளால் இந்த மூன்று உலகத்திலும் எங்கு வேண்டுமானாலும் தங்கு தடையின்றிச் சுற்றி வருகிறேன். ஏழு சுரம் அமைந்த வீணையைப் பகவான் எனக்கு அளித்திருக்கிறார். அதைக் கையில் ஏந்தி ஹரிகதையைப் பாடிக்கொண்டே வருகிறேன். பகவான் என் உள்ளத்தில் எப்போதும் காட்சியளித்து வருகிறார். ஆகவே, பகவானுடைய வரலாறுகளை விவரித்துச் சொல்வதுதான் இன்பத்தை அளிக்கும். யாகம் முதலியவற்றால்கூட அதை அநுபவிக்க இயலாது. இனித் தாங்களும் பகவானுடைய குணங்களைக் கொண்டாடிப் புகழுங்கள்."

இப்படிச் சொல்லிவிட்டு நாரதர் போய்விட்டார். பிறகு வியாசர் ஸரஸ்வதி நதிக்கரையில் இலந்தை மரம் அடர்ந்த 'சம்யாப்ராஸம்' என்ற தம் ஆசிரமத்தில் அமர்ந்து தீர்த்தத்தை ஆசமனம் செய்து, தியானத்தில் ஈடுபட்டார். பக்தியால் தூய்மையுற்ற அவர் மனம் பகவானுடைய உண்மை உருவத்தையும், ஜீவனுடைய உருவத்தையும், பந்தத்துக்குக் காரணமான மாயையையும் தேர்ந்து தெளிந்தது. உடனே அவர் கிருஷ்ணனிடம் பக்தியை ஊட்டும் 'பாகவத ஸம்ஹிதை' என்ற நூலை இயற்றினார். பிறகு உலகப் பற்றின்றி வாழ்ந்த தம் மகனான சுகருக்கு அதைக் கற்பித்தார். சுகர் பகவானிடம் எந்தப் பயனையும் எதிர்பாராமல் பக்தி செய்பவர். ஆகவே, அவர் பாகவதத்தை அத்தியயனம் செய்தார்.

தமிழ் நாட்டில் நிலக்கரி

'பரணி'

மின்சார சக்தி எத்தனையோ காரியங்களுக்குப் பயன்பட்டாலும், நிலக்கரிக்கும் பல உபயோகம் இருக்கிறது. நெய்வேலி நிலக்கரிச் சுரங்கப் பரீட்சார்த்தத் திட்டத்தைச் சென்னைத் தொழில் மந்திரி யு. கிருஷ்ணராவ் ஆரம்பித்து வைத்தார். அந்தச் சுரங்க வேலை பற்றியது இந்த விவரம்.

சென்னை ராஜ்யத்தில் கைத்தொழில் அபிவிருத்தி ஏற்பட்டதிலிருந்து மலிவான விலையில் ஏராளமான நிலக்கரி தேவையாயிற்று. வடக்கே ஆயிரம் மைலுக்கு அப்பாலிருந்து நிலக்கரி வர வேண்டியிருந்தது. இதனால் நிலக்கரிக்குச் சில இடங்களில் இரண்டு மடங்கும் சில இடங்களில் நான்கு மடங்கும் விலை கொடுத்து வாங்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாயிற்று. அதிக விலை கொடுத்து நிலக்கரி வாங்கியதால், சென்னை ராஜ்யத்தின் கைத்தொழில் அபிவிருத்தி பெரிதும் தடைப்பட்டது; உற்பத்தியான பொருள்களின் விலையும் அதிகரித்தது. இப்படிப்பட்ட நிலையில்தான் சென்னை ராஜயத்தில் நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி இருப்பதைக் கண்டுபிடித்தார்கள்.

நெய்வேலியில் 1937-ஆம் ஆண்டு ஊற்றுக் கிணறு ஒன்றைத் தோண்டும்போது, மிருதுவான பழுப்பு நிலக்கரி முதல் முதலாக அகப்பட்டது. 1943-இல் சர்க்காருக்குக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்தபோது, அதற்கு நெய்வேலியைப் பயன்படுத்தலாம் என்று தோன்றியது. மத்திய சர்க்கார், இந்தப் பிரதேசத்தைப் பூதத்துவ ஆராய்ச்சியாளர் (ஜியாலஜிஸ்ட்) வசம் ஒப்படைத்தார்கள். முதலில் இந்த இலாகாக்காரர் 33 இடங்களில் குழாய்கள் இறக்கிப் பரிசோதனை செய்தார்கள். 23 சதுர மைல் விஸ்தீரணத்தில் பழுப்பு நிலக்கரி இருப்பதாகக் கண்டு பிடித்தார்கள். பின்பு இது பற்றிய ஆராய்ச்சி நடத்தும் திட்டத்தைச் சென்னை ராஜ்ய சர்க்காரே மேற்கொண்டார்கள். பூமி பரிசோதகரும், சுரங்க இலாகா எஞ்சினீருமான ஸ்ரீ எச். கே. கோஷின் சேவையைப் பெற்றார்கள். இவருடைய கோஷ்டியார் தொடர்ந்து 75 இடங்களில் குழாய்க் கிணறுகளை உண்டாக்கிப் பரிசோதனை செய்ததில், மேலும் 77 சதுர மைல் விஸ்தீரணத்தில் பழுப்பு நிலக்கரி இருப்பது தெரிந்தது. இரண்டு சுரங்க வழிகளின் மூலம் நிலக்கரி இருக்கும் பாதாள இடத்துக்குச் செல்ல முயன்றார்கள். இவைகள் பயனற்றுப் போகவே, 1951-ஆம் ஆண்டு மூன்றாவது வழியை அமைக்க அமெரிக்கச் சுரங்கத் தொழில் நிபுணர் மிஸ்டர் ஆர். எஸ். ஸான்போர்ட் என்பவரின் உதவியைக் கோரினார்கள். அவருடைய சிபாரி

மூலம்: உலகம் (தமிழ்: 20-3-'53), திருச்சி.

சின் மேல் அமெரிக்கச் சுரங்க நிபுணர் மிஸ்டர் பால் எரிக் என்பவரின் சேவையை அமெரிக்க அரசாங்கத்தார் இந்தியாவுக்கு அளிக்க முன் வந்தார்கள்.

1951-ஆம் ஷு செப்டம்பர் மீ மிஸ்டர் பால் ஆர். எரிக் இந்தியாவுக்கு வருவதற்குள், மூன்றாவது சுரங்க வழி அமைப்பு வேலை வெற்றிகரமாக நிறைவேறவே, அப்போது கிடைத்த தகவல்களைக் கொண்டு எரிக் ஒரு பரீட்சார்த்தத் திட்டத்தைத் தயாரித்தார். ஸ்ரீ கோஷும் நிபுணர் கமிட்டியாரும் அந்த அமெரிக்க நிபுணருக்கு வேண்டிய உதவி புரிந்தார்கள்.

சுரங்க வேலைகளைப் பரிசோதிக்கும்போது கிடைத்த லிக்னைட் என்ற பழுப்பு நிலக்கரியை, ஜெர்மனியிலுள்ள மெஸர்ஸ் லூர்கி அண்டு கம்பெனி அவ் ஃப்ராங்ஃபர்ட், நார்வேயிலுள்ள மெஸ்ஸர்ஸ் எலக்ட்ரோ கெமிக்கல்ஸ் அவ் ஆஸ்லோ, அமெரிக்கச் சுரங்கக் கமிட்டி, தன்பாதிலுள்ள எரி பொருள் ஆராய்ச்சி ஸ்தாபனம், இவற்றைச் சேர்ந்தவர்களும், மற்றும் பல நிபுணர்களும் பரிசோதித்தார்கள். பலர் நெய்வேலிக்கு வந்தும் பார்வையிட்டார்கள். இங்கே கிடைக்கும் நிலக்கரி மிக நல்ல ரக நிலக்கரிக்குச் சமமாக இருக்கிறது. இதில் சாம்பல் 3 சதவிகிதமே விழுகிறது. கைத்தொழில் பாய்லர்களுக்கும், கண்ணடிக் கைத்தொழில், நைட்ரேட், சிமெண்ட் உற்பத்தி, செங்கற்சூளை முதலியவைகளுக்கும் இதை உபயோகிக்கலாம். மின்சார உற்பத்திக்கும் உபயோகிக்கலாம். இதைத் தூளாக்கி மில் பாய்லர், காஸ் டர்பைன் ஆகியவைகளுக்கு உபயோகிக்கலாம். கைத்தொழில் பாய்லர்களுக்கும், வீட்டுக் காரியங்களுக்கும் கட்டிகளாகவே உபயோகிக்கலாம். பிளாஸ்டிக் பொருள்கள் தயாரிக்கவும் இது உதவும். ரசாயன முறையில் இதைக் கொண்டு மோட்டார் ஸ்பிரிட்களும் மற்றும் பல திரவங்களும் வடிக்க முடியும். இதிலிருந்து கிடைக்கும் மோன்டன் என்ற மெழுகு பல காரியங்களுக்கு உபயோகப்படும். பொதுவாக, நெய்வேலியில் கிடைக்கும் தண்ணீர், களிமண், லிக்னைட் இந்த மூன்றும் சுரங்கத்திலிருந்து அகப்படும் ஆஸ்திகளாகும்.

இப்போதுள்ள ஆராய்ச்சிகளின் முடிவுப்படி இங்கே நிலக்கரி கிடைக்கக்கூடிய சுரங்கப் பகுதியின் கிழக்கெல்லை கடலூரிலிருந்து 27 மைல்வரையில் கிழக்குக் கடற்கரையை, அதாவது புதுச்சேரியை நோக்கிச் செல்கிறது. சுமார் 100 சதுர மைல்வரையில் பழுப்பு நிலக்கரி சுமார் இருநூறு கோடி டன் கிடைக்குமென்று மதிப்பிடுகிறார்கள். இந்தச் சுரங்கப்பகுதியின் வடகோடியில் இரண்டு சதுர மைலில் பரிசோதனை நடத்தியதில், கடினமான அடுக்குகளுடன் கூடிய பழுப்பு நிலக்கரி கிடைப்பதாகத் தெரிகிறது. ஒரு குழியில் மட்டும் சுமார் 100 டன் வெட்டி எடுத்திருக்கிறார்கள். சென்னை சர்க்கார் இந்த ஆரம்பத் திட்டத்துக்கு 70 லட்சம் ரூபாய் அநுமதித்திருக்கிறார்கள். மத்தியசர்க்கார், யந்திரங்கள் உதவ முன் வந்திருக்கிறார்கள். இந்த நெய்வேலி நிலக்கரிச்சுரங்கம் தமிழ் நாட்டின் தொழில் பெருக்கத்துக்குப் போதியதாக இருக்கும். இதைத் தமிழ் நாட்டுக்குக் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்றே சொல்ல வேண்டும்.

தலை வெட்டும் ஜாதியார்

★

அஸ்ஸாம் ராஜ்யத்தின் எல்லைப் பிரதேசத்தில் நாகர்கள் என்ற மலை ஜாதியார் தலை வேட்டையாடுகிறவர் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்களைப் போலவேயுள்ள மற்றொரு ஜாதியாரைப்பற்றிய இந்த விவரம் 'டூனிஸ் ஸாயிர்' என்ற பத்திரிகையில் அலெக்ஸ் அஸெக்ஸில் என்பவர் எழுதியதை ஆதாரமாகக் கொண்டது.

சுமத்திரா தீவுக்கு மேற்கே இந்து மகா சமுத்திரத்தில் நியாஸ் என்று ஒரு தீவு இருக்கிறது. அதில் 20 லட்சம் பழங்குடிகளுக்கு மேல் வாழ்ந்து வருகிறார்கள். சில வருஷங்களுக்கு முன்னால்கூட இவர்கள் எதற்கெடுத்தாலும் போரிடுவதும் வேட்டையாடுவதுமாகக் காலங் கழித்து வந்தார்கள்.

சில சமயம் வேட்டையாடும் நிலப் பகுதி தமக்குத்தான் சொந்தம் என்று ஒருவருக்கொருவர் போட்டி ஏற்பட்டுச் சண்டை மூளும். ஒரு கூட்டத்தைச் சேர்ந்த வாலிப வீரன் எவனாவது இன்னொரு கூட்டத்தில் புகுந்து அவர்களுடைய பெண்ணைத் தூக்கிச் சென்று விட்டாலும் இப்படிச் சண்டை நேரும். சில சமயம் எத்தனை தலைகளை இதுவரை வெட்டியிருக்கிறோம் என்று பெருமை பாராட்டிக்கொள்வதற்காகவும் சண்டை போடுவார்கள். அமைதி என்றாலே அங்குள்ள வீரர்களுக்குப் பிடிக்காது.

இப்போது இப்படித் தலையை யாராவது வெட்டினால், டச்சு அதிகாரிகள் கடுமையான தண்டனை விதிப்பதால் வேண்டா வெறுப்பாக இந்தப் பழைய வழக்கத்தை அந்தப் பழங்குடிகள் கைவிட்டு வருகிறார்கள்.

இப்போதெல்லாம் சண்டை



போடாவிட்டாலும் எப்போதாவது அப்படி வேஷம் போட்டு நடித்துப் பார்த்துக்கொள்கிறார்கள். அந்தச் சமயத்திலே, பட்டிலோ வெல்வெட்டிலோ பொன், வெள்ளி வேலைப்பாடுள்ள ஆடை உடுத்துக்கொள்கிறார்கள். மார்பு திறந்திருக்கும். ஒரு கூட்டத்தின் தலைவன் என்றால், தலையிலே ஜரிகையில் இலை போல் அலங்கரித்த ஒரு விதக் கிரீடம் அணிந்துகொள்வான்; உலோகத்திலோ மரத்திலோ செய்த உறையில் ஒரு கத்தி வைத்திருப்பான்.

விழாக்களின்போது நியாஸ் பழங் குடிகள் போலி யுத்தம் செய்வார்கள். உலோகத்தில் செய்த கழுத்துப் பட்டையும், தலையில் செம்பிலும் இரும்பிலும் செய்த கவசங்களும் அணிந்துகொள்வார்கள். அப்போது அதிகமாக உடுப்பு அணிந்துகொள்வதில்லை.

நீண்ட ஈட்டி ஒன்றை வலது கையிலும், படகு போன்ற விநோதமான மரக் கேடயம் ஒன்றை இடது கையிலும் ஏந்திக் கொண்டு பழைய பத்ததியில் போலி யுத்தம் செய்யத் தொடங்குவார்கள். யாராவது ஒருவர் தோல்வி அடைந்ததாக ஒப்புக் கொண்டாக வேண்டும்; அது வரையில் இந்தப் போர் மாளாது.

முன்னெல்லாம் பழங் குடிகளின் தலைவன் எவனாவது இறந்து விட்டால், அவன் சவத்தை அவன் உபயோகித்துவந்த ஆயுதங்களோடு ஊர்வலமாக எடுத்துச் செல்வார்கள். சவப் பெட்டியின் ஒரு பக்கம் மரத்தில் செய்த ஒரு பறவையைப் பொருத்தியிருப்பார்கள். சவப் பெட்டியைத் தாங்கும் கால்களின் மேல்புறம் தழைகளை அடர்த்தியாகக் கட்டியிருப்பார்கள். அதற்குள் தலைவனின் சுற்றத்தார் அந்த வழியில் மரம், புதர் இவைகளின் மறைவில் இருந்துகொண்டு, போவோர் வருவோரின் தலைகளை வெட்டி எடுத்துக்கொண்டு வருவார்கள்.

இதனால் ஒரு கூட்டத்தாருக்கு இன்னொரு கூட்டத்தாரைக் கண்டால் நடுக்கம். ஆகவே, அவர்கள் தங்கள் வீடுகளை நெருக்கமாகக் கட்டிக்கொண்டிருப்பார்கள். பொதுவாக, மலையுச்சியிலோ சுற்றிலும் சதுப்பு நிலம் சூழ்ந்த வறண்ட மேட்டிலோதான் அவர்களின் ஊர் இருக்கும். முட்டை வடிவமாக அமைந்த கூடைகளைப் போல் இருக்கும் அவர்களுடைய வீடுகள். மரப் பிளாச்சுகளின்மேல் அவை உயரத்தில் அமைந்திருப்பதால், கீழே பன்றி முதலியவற்றை வளர்க்கச் சௌகரியமாக இருக்கிறது. ஏணி மேல் ஏறித் திட்டி வாசலைத் திறந்துகொண்டு உள்ளே போக வேண்டும். கூரையிலும் கீழேயுள்ள மரப்பிளாச்சுகளிலும் பன்றிகளின் தாடை எலும்புகளைக் கோத்துக் கட்டியிருப்பார்கள். ஒருவன் இத்தனை பன்றிகளுக்கு உரியவன் என்றால், அங்கே அவனுக்கு நல்ல செல்வாக்கு இருக்கிறது என்று அர்த்தம்.

பூசாரிகளுக்கு விசேஷமான சக்தி உண்டு என்று நியாஸ் பழங் குடிகளுக்குள் ஒரு நம்பிக்கை. பூசாரியே வைத்தியனாகவும், மந்திரவாதியாகவும், தொழிலாளியாகவும், நீதிபதியாகவும் இருப்பான். இவர்களில் பூசாரிப் பெண்களும் இருக்கிறார்கள். இங்கே பெண்களுக்குச் சம உரிமை உண்டு. ஆகவே, ஒவ்வொரு கிராமத்திலும்

அந்த அந்தக் கூட்டத்தார் வழி படும் தெய்வ உருவமும் அம்ம ஞேடுதான் காட்சி அளிக்கும்.

இவ்வளவெல்லாம் இருந்தும், பெண்களைத் தூக்கிச் சென்று மணம் புரிந்துகொள்ளும் வழக்க மும் இங்கே சர்வசகஜம். ஏரான மான தொகை கொடுத்தும் பெண் கொள்கிருர்கள். இப்போதெல் லாம் பெண் கொள்வதென்ருல், வாலிபர்கள் கடன் வாங்கியாக வேண்டியிருக்கிறது. கடனை விரைவில் திருப்பிக் கொடுத்தாக வேண்டும். இல்லாவிட்டால் வருஷத்துக்கு வருஷம் கடன் தொகை இரட்டித்துக்கொண்டே போகும். ஒருவன் அதைச் செலுத்த முடியாவிட்டால், கடன் கொடுத்தவனுக்கு அவன் அடிமையாக வேண்டியதுதான்.

ஆனல் வர வர இந்தப் பழைய வழக்கங்கள் மறைந்து வருகின் றன. இப்போது நியாஸ் பழங் குடிகள் நெல் பயிர் இட்டு மிகவும் அமைதியாக ஜீவனம் நடத்தி வருகிருர்கள்.

கூர் வைத்தது சரியா?

ஞாபக மறதி உள்ள இரண்டு கிழப் பிரம்மசாரிகளிடம் யாரோ சில ஆணிகளையும் ஒரு சம்மட்டியையும் கொடுத்துச் சுவரில் அடிக்கச் சொன்ஞர்கள்.

ஓர் ஆணியை எடுத்து, அதன் தலேயைச் சுவரில் பதித்து, கூர்ப் பக்கத்தைச் சம்மட்டியால் அடித்தான், இருவரில் ஒருவன். ஆணி இறங்காததைக் கண்டு, "எந்த மூடனடா இந்த ஆணியைச் செய்தான்? கூரைச் சரியான பக்கத்தில் வைக்கவில்லேயே அவன்" என்ருன்.

உடனே மற்றப் பிரம்மசாரி, "அவன் அல்லடா மூடன்; நீதான். எதிர்ப்புறச் சுவரில் அடிக்க வேண்டிய ஆணியை இந்தச் சுவரில் அடித்தால் அது எப்படி இறங்கும்?" என்று விளக்கினன்.

—'ஹ்யூமர்', ஆஸ்திரேலியா.

எங்கே வெட்டுவான்?

பிரிட்டிஷ் குடும்பங்களின் வரவு-செலவு நிலே சம்பந்த மான புள்ளி விவரங்களேச் சேகரிப்பதற்காகச் சமீபத்தில் ஓர் ஆராய்ச்சி நடந்தது.

ஒரு குமாஸ்தாவை, "உம் சம்பளத்தில் பத்தில் ஒரு பங்கைக் குறைத்தால், நீர் எங்கே வெட்டுவீர்?" என்று புள்ளி விவர நிபுணர் ஒருவர் கேட்டார்.

"என் கழுத்திலே" என்று தயங்காமல் பதிலளித்தார் குமாஸ்தா.

—'ஸண்டே கிராஃபிக்', லண்டன்.

கப்பல் விடும் பிரபுவுக்குங்கூட ஒரு சமயம் இப்படித்தான் செய்யத் தோன்றும்.

இரவிலே ஓட்டம்

★

துருக்கியைச் சேர்ந்த கப்பல் முதலாளி ஹலீம் மர்தீன் என்பவர் சில மாதங்களுக்குமுன் ஜெர்மனிக்கு வந்தார். அவருடைய கப்பலைப் பழுது பார்க்க வேண்டியிருந்தது. பார்த்துக் கொண்டார். அதற்கும் மற்றச் செலவுகளுக்குமாகச் சேர்ந்து 4,75,000 டாலர் அவர் ஜெர்மானியருக்குத் தரவேண்டி வந்தது. அதைக் கொடுக்காமல் ப்ரீமன் துறைமுகத்தை விட்டுக் கப்பல் கிளம்பக் கூடாது என்று ஜெர்மானியர் கண்டிப்பாக அவரிடம் சொல்லிவிட்டார்கள். மர்தீனின் கப்பல் ஆறுமாத காலம் அங்கேயே கிடந்தது. கடைசியில் அவருக்குப் பொறுக்கவில்லை. பாங்கியிலிருந்த பணமோ கரைந்து வந்தது.

சில தினங்களுக்குமுன் அவர் இஸ்தாம்புல் நகரிலிருந்து திரும்பி வந்தார். அந்தக் கப்பலில் வேலை பார்க்கும் 40 துருக்கிய மாலுமிகள் அக்கம்பக்கம் சாராயக்கடைகளில் பொழுது போக்கி வந்தார்கள். அவர்களை அழைத்து அவர்களிடம் ஏதோ சொன்னார். அவருடைய கப்பலின் பெயர் 'ராமான்.' அது 'டாங்கர்' வகையைச் சேர்ந்தது. 1917-இல் அமெரிக்காவில் செய்தது. இரவு வந்ததும் அந்தத் துருக்கிய மாலுமிகளில் ஐந்துபேர் மெதுவாக அந்தக் கப்பலுக்கு வந்தார்கள். கப்பலோடு சேர்த்துக் கட்டி இருந்த ஜெர்மன் காவல் படகில் ஏறினார்கள். காவல்காரனிடம் துருக்கிய சிகரெட்களை ஏராளமாக இனும் கொடுத்து, அவனோடு தமாஷாகப் பேச்சுக் கொடுத்துக்கொண்டே இருந்தார்கள். மற்ற மாலுமிகள் அதற்குள் கப்பலில் ஏறி, தீ மூட்டி, எஞ்சின்களைக் கிளப்பிவிட்டு, கப்பலைத் துறைமுகத்திலிருந்து வெளியேற்றிவிட்டார்கள். காவல் படகையும் இழுத்துக்கொண்டு அது ஓடத் தொடங்கியது. அப்போதுதான் காவல்காரன் இதைக் கவனித்தான். "அடேடே!" என்று கூவினான்.

அவனோடு இருந்த துருக்கிய மாலுமிகளில் ஒருவன், "கவலைப் படாதே, அண்ணே! இனிமேல் என்ன பண்ணுவது?" என்று அவனைத் தாஜா செய்தான்.

விளக்குகளையெல்லாம் அணைத்துவிட்டு 'ராமான்' எப்படியோ மோதி அடித்துக்கொண்டு ஓடியது. நல்ல வேளையாக எதிரே நின்ற ஒரு சிறு கப்பல் முட்டாமல் தப்பியது. வீஸர் நதியில் 'ராமான்' போய்க்கொண்டிருந்தது. அதோடு கட்டியிருந்த காவல் படகும் அடிக்கடி அதன்மேல் இடிபட்டுக்கொண்டே பின்னால் வந்தது. கடலுக்கு 50 மைல் தொலைவில்

காப்பிரைட்; டைம் (ஆங்கிலம்; பஸிஃபிக் பதிப்பு; 2-3-'53), நியூ யார்க், ஐக்கிய அமெரிக்கா.

வந்ததும், அந்தக் காவல் படகின் கயிற்றை அறுத்து அதை அப்படியே மிதக்க விட்டுவிட்டார்கள். அதில் இருந்த மாலுமிகளும், 'ராமான்' கப்பலில் ஏறிக்கொண்டார்கள். கறுப்புப் புகையைக் கக்கிக்கொண்டு 'ராமான்' வெகு வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது. கப்பலை நிறுத்தச் சொல்லி எத்தனையோ தரம் சமிக்ஞை வந்தும், கப்பலின் தலைவன் அதைச் சட்டை செய்யாமல் உறுதியாக இருந்து அதைச் செலுத்திக்கொண்டே போனுன். வீஸர் நதியின் முகத்துவாரத்தில் உள்ள ப்ரீமர்ஹேவன் என்ற இடத்துக்கு இதற்குள் ப்ரீமன் துறைமுகத்திலிருந்து தந்திமூலம், "கடலை நோக்கி விளக்கில்லாமல் வரும் டாங்கரை நிறுத்துங்கள்" என்று போலீஸார் தகவல் அனுப்பிவிட்டார்கள்.

கடற்கரைப் போலீஸ் சார்ஜெண்டாக இருக்கும் மான்கோல்டு என்பவர் நீர்மூழ்கிக் கப்பலில் வேலை செய்து பழக்க முள்ளவர். அவர் தம் சின்ன லாஞ்சில் புறப்பட்டு 'ராமான்' அருகில் வந்து அதை நிறுத்தச் சொன்னுர். ஆனுல் அது நின்ருல் தானே? உடனே அவருடன் வந்த போலீஸ்காரர்கள் 'ஸர்ச் - லைட்' ஒளியை வீசி, சரமாரியாக வேட்டுகளையும் விட்டுப் பார்த்தார்கள். அப்படியும் 'ராமான்' நிற்காமல் போய்க்கொண்டேயிருந்தது. மான்கோல்டும் மற்றும் சில போலீஸ்காரர்களும் 'ராமான்' மேல் தொற்றி ஏறப்பார்த்தார்கள். ஆனுல், அதிலுள்ள தண்ணீர்க் குழாய்களிலிருந்து வெளியே பாயும் தண்ணீர் வெள்ளத்தை முதலில் சமாளிக்க முடியாமல் தவித்தார்கள். கடைசியில் எப்படியோ அதில் ஏறிவிட்டார்கள். அப்புறம் நடந்ததை மான்கோல்டே சொல்லுகிருர், கேளுங்கள்:

"துருக்கியர்களுக்கு ஜெர்மன் பாஷை புரியவில்லை. ஆனுல் ஒன்றுமட்டும் உடனே புரிந்தது. மர்தீனின் முதுகுப்பக்கம் பிஸ்தலை நீட்டி, 'நிறுத்துகிருயா, இல்லையா?' என்ருேம். இனிமேல் பலிக்காது என்று அவர்களுக்குத் தெரிந்துவிட்டது."

மீண்டும் ப்ரீமனுக்கு 'ராமானை'ச் செலுத்தி வந்து ஜெர்மானியர் அதன் எஞ்சின்களை ஓடாதபடி கழற்றி எடுத்துவிட்டார்கள். இப்போது மர்தீன்மீது, 'வேகமாய்ப் போனது; துறைமுகத்தில் ஒரு பகுதிமேல் உராய்ந்து சேதமாக்கியது; விளக்கில்லாமல் போனது; சமிக்ஞை காட்டாமலும் போக்குவரத்து விதிகளுக்கு அடங்காமலும் போனது; காவல் படகை அறுத்து அந்தரத்தில் விட்டது; ஜெர்மன் சுங்கவிதிகளை மீறியது; பிரயாணச் சீட்டு இல்லாமல் வெளியேறியது; கப்பல் கட்டணம் முதலியவை கொடுக்காமல் போனது' - இப்படிப் பல குற்றங்களைச் சாட்டி வழக்குத் தொடர்ந்திருக்கிருர்கள். ஆயினும், ஜெர்மன் போலீஸ் அதிகாரி, "எவ்வளவு லாகவமாய்க் கப்பலைச் செலுத்தினீர்கள்; அதை மெச்சுகிறேன்" என்று மர்தீனை வாயாரப் புகழ்ந்தார். உடனே மர்தீனும் தலைவணங்கிப் பணிவோடு, "உங்கள் போலீஸ் அதிகாரிகளும் வெகு சாமர்த்தியமாக எங்கள் கப்பலில் ஏறி நிறுத்திவிட்டார்களே; அதைச் சொல்லுங்கள்!" என்று ஜெர்மன் போலீஸைப் பாராட்டினுர்.

ரமணர்

வாழ்வும் வாக்கும்

ஆத்மஞானத்துக்கு முன் மற்ற ஞானமெல்லாம் அற்பம் என்பதைத் தம் வாழ்க்கையால் நிரூபித்துக் காட்டியவர் மகரிஷி ரமணர். இவர் வாக்கு ஸ்வாநுபவம் பொதிந்தது.

மோன நெறி: இரண்டாவது மகா யுத்தம் தொடங்கவில்லை. ஆனால் அதற்கு வேண்டிய கொந்தளிப்பு உலக முழுவதும் இருந்து வந்தது. அந்தச் சமயத்தில் வெள்ளைக்காரப் பக்தர் ஒருவர் ரமணாசிரமத்துக்கு வந்தார். அவர் ஞானிகள் எங்கெங்கே இருக்கிறார்களோ, அங்கெல்லாம் சென்று பலன் பெற வேண்டும் என்ற ஆசை உடையவர். ரமண பகவானுடைய பெருமையை அறிந்து அந்த முனிவரைப் பார்க்க வந்தார்.

ஆனால் அவருக்கு அந்த முனிவர்பிரானிடம் ஒரு பெரிய குறை இருந்தது. "உலகமெல்லாம் நாசமாகப் போய்க்கொண்டிருக்கிறது. மனிதனை மனிதன் அடித்துக் கொன்று வாழ்கிறான். இத்தகைய காலத்தில் உலக முழுவதுக்கும் சாந்தியை உபதேசிக்க வேண்டாமா? எதோ ஒரு மூலையில் ஒன்றும் செய்யாமல் சும்மா உட்கார்ந்துகொண்டிருப்பதால் யாருக்கு என்ன பிரயோசனம்? எத்தனைதான் ஞானம் இருந்தாலும் உலகில் உள்ள எல்லா மக்களுக்கும் அதைப் பயன்படுத்தாமல் இருப்பது நியாயமாகுமா?"— இப்படியெல்லாம் அவருக்குப் பல பல எண்ணங்கள் தோன்றின. நேரே ரமண முனிவரிடம் கேட்டுவிடவேண்டும் என்ற வேகமும் அவரிடம் இருந்தது.

ஆகவே, அவர் ஆசிரமத்துக்கு வந்து இந்த ஞானவள்ளல்முன் அமர்ந்தவுடன் ஒன்றன்பின் ஒன்றாகப் பல கேள்விகளைப் படபடவென்று வீசினார். அவர் கேட்ட தோரணையைக் கண்டு அருகில் இருந்த யாவரும் பிரமித்துப் போனார்கள். "இவற்றிற்கு விடை சொல்லவேண்டும்" என்றார் அந்த ஐரோப்பியர். பகவான் எல்லாவற்றையும் சாந்தமாகக் கேட்டார். பிறகு, "விடை கிடைக்கும்" என்றார்.

எல்லோரும் மிக்க ஆவலோடு என்ன விடைகள் வரப்போகின்றன என்று வாயில் ஈப் புகுவது தெரியாமல் காத்திருந்தனர். கேள்வி கேட்டவர்கூட அப்படித்தான் முதலில் இருந்திருக்க வேண்டும். ஐந்து நிமிஷங்கள் ஆயின. அந்த இடத்தில் மௌனமே நிலவியது. மேலும் நிமிஷங்கள் ஓடிக்கொண்டிருந்தன. யாரும் பேசவில்லை. கேள்வி கேட்டவரோ சற்றுப் பதற்றம் அடங்கினவராகத் தோன்றினார்.

கால் மணி ஆயிற்று; இருபது, இருபத்தைந்து நிமிஷங்கள்

ஆயின. கேள்வி கேட்டவரும் பேசவில்லை; ரமண முனிவரும் வாய் திறக்கவில்லை. யாவரும் ஏதோ ஓர் அற்புத நிகழ்ச்சியை எதிர்பார்ப்பவர்கள் போல ஆவலே மயமாக இருந்தனர்.

அரைமணி ஆயிற்று; திடீ ரென்று கேள்வி கேட்ட ஐரோப்பியர், "பதில் கிடைத்துவிட்டது" என்றார். யாவரும் வியப்பில் ஆழ்ந் தனர்.

"பதில் கிடைத்துவிட்டதா? அப்படியானால் கிடைத்த பதிலை எழுதிக் காட்ட முடியுமா?" என்று பகவான் கேட்டார்.

அவர் எழுதினார். என்ன எழுதினார்? "பகவான் தமக்கே உரிய மோன நெறியில் அமைதியாக மனிதர்களின் ஆத்ம சாந்தியின் பொருட்டு அற்புதமான காரியங் களைச் செய்துகொண்டிருக்கிறார். ஆத்திரமும் அறியாமையும் உடைய என்னால் இதனை முதலில் தெரிந்துகொள்ள முடியவில்லை. இத்தகைய மகாத்மாக் களின் மூலம் சைதன்ய வஸ்துவானது தன் கருணையைப் பரப்பிக்கொண்டே இருக்கிறது. அவர்களை அணுகி வாதம் செய்து கேள்வி கேட்டால் விடை கிடைக் காது. அமைதியை மேற்கொண்டு சரணாகதி அடைந்தால்தான் உண்மை விளங்கும்" என்ற கருத் துப்பட அவர் எழுதியிருந்தார்.

ஆம்; ரமண முனிவர் பெரிய பிரசங்கம் செய்யவில்லை. ஊர் ஊராகப் போய்ப் பிரசாரம் செய்ய வில்லை. ஆனாலும் அவர் தம் முடைய மௌனமான முறையிலே எத்தனையோ உள்ளங்களை ஆட்கொண்டார். பிணிக்கு மருந் தும், துன்பத்துக்கு ஆறுதலும், ஆசைக்கு நிறைவுமாக அவருடைய திருக் கண்பார்வையே உதவியது.

(வாழ்வு)

இருந்த இடத்திலே: ரமண மகரிஷியிடம் வரும் சில பக்தர்கள் அந்தப் பெருமானைத் தங்கள் தங் கள் ஊருக்கு வரவேண்டுமென்று அழைத்தார்கள். வேறு சிலர் இந்தியா முழுவதும் ஒரு முறை பிரயாணம் செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். சில குழந்தைகள் அவரை, "எங்கள் வீட்டுக்கு வாருங்கள்" என்று அழைக்கும். ஆனால் அவர் திருவண்ணாமலையை விட்டு எங்கும் சென்றதே இல்லை. திருவண்ணாமலையிலேயே வேறு இடத்துக்கும் போனதில்லை.

ஒருநாள் ஒரு குழந்தை அவரைத் தன் வீட்டுக்கு வரவேண்டு மென்று அழைத்தது. அப்போது அப்பெருமான் பின்வருமாறு கூறினார்: "நான் வேறு ஊருக்குப் போனால் இங்கே வந்து பார்ப்பவர் கள் ஏமாந்து போவார்களே. ஒருவருடைய ஊருக்குப் போனால் மற்றவர்களுடைய ஊருக்கும் போகவேண்டும். எல்லா ஊர்களுக் கும் போய் எல்லாரையும் பார்க்கிற தென்பது முடியாத காரியம். அது மாத்திரம் அல்ல: நான் புறப் பட்டால் இங்கே இருக்கிறவர்கள் எல்லோருமே என்னுடன் புறப்படு வார்கள். உன் வீட்டுக்கு வந்தால் திருவண்ணாமலையில் உள்ள எல் லோர் வீட்டுக்கும் போக வேண் டும். உன் வீட்டுக்குப் போகலாம் என்றெண்ணிப் புறப்பட்டால் நடுவிலே நாலுபேர் வந்து எங்கள் வீட்டுக்கு வரவேண்டுமென்று அழைப்பார்கள். அங்கும் போக வேண்டும். இப்படி இடையிலே வரும் அழைப்பை ஏற்றுக்கொண்டு அங்கங்கே போய்க்கொண்டே

இருந்தால், உன் வீட்டுக்கே வர முடியாமற் போனாலும் போகும். (வாழ்வு)

குருவின் திருவருள்:

கேள்வி: சற்குருவின் திருவருளால் ஒரு கணத்தில் மெய்ஞ்ஞானம் வரும் என்கிறார்களே; இது உண்மையா?

ரமணர்: ஆம். சிஷ்யன் அதற்கேற்ற பக்குவமுடையவனாக இருக்க வேண்டும். சற்குருவின் திருவருட் பார்வையினால்தான் அஞ்ஞானம் போகும்.

கே: ஒவ்வொருவருடைய தகுதிக்கு ஏற்றபடி அந்த அருள் சார்கிறதா?

ரம: பாத்திரம் சிறியதாக இருந்தால் அவன் அடையும் அருளும் சிறியதாக இருக்கும். பாத்திரம் பெரிதாக இருந்தால் அருளும் பெரிதாக இருக்கும்.

கே: சிறிய பாத்திரமாக இருந்தால் அதைப் பெரியதாகச் செய்வது எப்படி?

ரம: எல்லாப் பாத்திரங்களிலும் இருக்கும் தண்ணீர் ஒன்றுதான். சரணாகதி அடைந்தவர்களுக்கு அதிக அருள் என்றும், குறைந்த அருள் என்றும் வேறுபாடு இல்லை.

கே: சரணாகதி என்றால் என்ன?

ரம: சரணாகதி அடைந்தவனிடம் 'நான் செய்கிறேன்' என்ற கர்த்திருத்துவ பாவம் இராது. கர்மங்களைப்பற்றியும் அவற்றால் வரும் பலன்களைப்பற்றியும் அவன் கவலைப்படுவதில்லை. இந்த உதாசீன பாவமே அவனிடம் இருக்கும். அவன் தனக்காக எந்தச் செயலையும் தொடங்குவதில்லை. அவனுக்கு அகங்காரம் இல்லை. ஞான மார்க்கத்திலே சென்றாலும் சரணாகதி அடைந்தாலும் அகங்காரம் மறைந்து போகும்.

கே: நூல்கள் கடவுளைக் கருணைக் கடல் என்று கூறுகின்றனவே; அது உண்மைதானா?

ரம: கடலா? கடலுக்கும் எல்லை உண்டு; கரை உண்டு. ஆனால் கடவுளுடைய கருணைக்கு எந்த விதமான எல்லையும் இல்லை. அது எல்லையற்றது. எல்லைக்குள் அடங்காதது. (வாக்கு)

குற்றவாளியா? இல்லையா?

ஜட்ஜி: நீ குற்றவாளியா? இல்லையா?

எதிரி: குற்றவாளி இல்லை.

ஜட்ஜி: இதற்கு முன் நீ எப்போதாவது சிறை சென்றிருக்கிறாயா?

எதிரி: இல்லை. இதுவே என் முதல் திருட்டு.

—'லோன் ஸ்டார் ஸ்கான்னெர்,' டெக்ஸாஸ்.

திருடன் சொன்ன காரணம்

ஜட்ஜி: ஆகவே, பட்சணக் கடையில் பணம் திருடியதாக ஒப்புக்கொள்கிறாய். என் திருடினாய்?

எதிரி: பசியால்.

ஜட்ஜி: அப்படியானால் பட்சணத்தைத் திருடியிருக்கலாமே?

எதிரி: நான் மிகவும் கௌரவமான மனிதன். எதற்கும் காசு கொடுக்காமல் தின்னமாட்டேன்.

—'இல்லஸ்ட்ரியெர்ட்', ஆஸ்லோ.

க்விஸ்

[இதோ சில கேள்விகள். எங்கே, உங்களுக்கு விடை தெரிகிறதா பாருங்கள். பிறகு வேறு பக்கத்து விடையுடன் ஒப்பிட்டுக்கொள்ளுங்கள்.]

1. சூரியனைப் பூமி உள்படப் பல கிரகங்கள் சுற்றுகின்றன. சில பூமிக்கும் சூரியனுக்கும் நடுவில் சுற்றுகின்றன. சில பூமிக்கு அப்பால் இருந்துகொண்டு சுற்றுகின்றன. சூரியனுக்கும் பூமிக்கும் நடுவில் இருந்துகொண்டு சூரியனைச் சுற்றி வரும் கிரகங்கள் மட்டும் எவை?

2. வானவெளியில் எத்தனையோ நட்சத்திரங்கள் தென்படுகின்றன. அவைகளுக்குள்ளே மிகவும் பெரியது எது? அது எந்த ராசியில் இருக்கிறது?

3. ‘டைம்ஸ்’, ‘ப்ராவ்டா’, ‘இம்ரோஸ்’, ‘அல் மிஸ்ரி’ இந்தப் பத்திரிகைகளில் எது எது எந்த எந்த நாட்டைச் சேர்ந்தது?

4. “செங்கடலையும் மத்திய தரைக் கடலையும் இணைப்பது பனாமா கால்வாய்” என்று ஒரு மாணவன் பூகோளப் பரீட்சையில் எழுதினான். இது சரியா?

5. பாம்பு தூங்கும்போது தன் கண்ணை மூடிக்கொள்ளாமல் திறந்துகொண்டே தூங்கும்; ஏன் தெரியுமா?

6. சிங்கம், கரடி, கழுகு இந்த அடையாளங்களில் எது எதனால் எந்த எந்தத் தேசத்தைக் குறிக்கிறார்கள்?

7. ஸெண்ட் பீட்டர்ஸ்பர்க், கான்ஸ்டாண்டிநோபிள் என்ற பழைய நகரங்களை இன்று எந்தப் பெயர்களால் குறிப்பிடுகிறார்கள்?

8. “காதல், காதல், காதல்! காதல் போயிற் காதல் போயிற் சாதல், சாதல், சாதல்!” என்ற பாரதியாரின் பிரசித்தி பெற்ற பாடல் அவருடைய எந்த நூலில் வருகிறது?

9. இந்தியாவுக்குள்ளே, எல்லாருக்கும் ஒரே விதமான பஞ்சாங்கம் என்று நினைக்காதீர்கள். தமிழர்களாகிய நமக்கு இப்போது பங்குனி மாதம் நடக்கிறது. ஆனால் வேறு சிலருக்கு இப்போது சித்திரை மாதம் பிறந்து பாதிக்கு மேல் ஆகிவிட்டது! அவர்கள் யார் தெரியுமா?

10. வேப்பமரம் பூக்கத் தொடங்குவது எப்போது?

11. பூவாமல் காய்க்கும் மரங்கள் எவை?

12. “நயாகரா, கெர்ஸெப்பா நீர்வீழ்ச்சிகள் வட அமெரிக்காவில் உள்ளவை”— இது சரியா, இல்லையா?

13. கிரிக்கெட் ஆட்ட மைதானத்தில் எதிர் எதிராக நட்டுள்ள ‘ஸ்டம்பு’களுக்கு இடையே உள்ள தூரம் எவ்வளவு?

ஹிந்துக்களும் முஸ்லிம்களும் கூடிக் கொண்டாடும் பக்தர்

நாகூர் மீரான்

★

ஒவ்வொரு வருஷமும் பிப்ரவரி, மார்ச் மாதத்தில் ஏராளமான மக்கள் நாகூருக்கு யாத்திரை செல்வது வழக்கம். எஸ். ஐ. ஆர். வண்டியில் அந்தச் சமயத்தில் நெரிபடும் பிரயாணிகளைக் கேட்டால் நாகூர்க் 'கந்தூரி' என்றால் என்னவென்று தெரியும்.

நாகபட்டினம் துறைமுகத்திலிருந்து 4 மைல் தொலைவில் உள்ள ஊர் நாகூர். கி. பி. 18-ஆம் நூற்றாண்டில் ஒரு பக்கம் ஆங்கிலேயருக்கும், இன்னொரு பக்கம் டச்சுக்காரருடன் சேர்ந்த ஹைதருக்கும் பல தடவை போர் நடந்த இடம் இந்த நாகூர். 17-ஆம் நூற்றாண்டில் இங்கே ஹசரத் சையது ஷாஹூல் ஹமீது என்ற முஸ்லிம் யோகி சமாதியானார்.

ஒவ்வொரு வருஷமும் இங்கே 'ஜமாத்-உல்-ஆக்கிர்' என்ற முஸ்லிம் மாதத்தின் ஆரம்பத்தில்



மீரான் தர்கா

காப்பிரைட்: ஃப்ரீ இந்தியா (ஆங்கிலம்: 8-3-'53), ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை.

'ரோஸா ஷரீஃப்' என்னும் மீரான் சமாதி; அவருடைய வம்சத்தைச்சேர்ந்த ஒருவர் பிரார்த்தனை புரிகிறார்.

'மீரான் சாயபு' என்று சகஜமாக வழங்கும் இவர் தினத்தைக் கொண்டாட ஒரு விழா தொடங்கி, பதினன்கு நாள் நடைபெறுகிறது. இந்த வருஷம் மீரான் சாயபுவின் 'கந்தூரி' பிப்ரவரி 28-ஆம் தேதியன்று பூர்த்தியாயிற்று. இந்தியா, பர்மா, இலங்கை, அரேபியா முதலிய இடங்களிலிருந்து ஏராளமான முஸ்லிம்கள் இந்தக் 'கந்தூரி'யைப் பார்க்க வருகிறார்கள்; தென்னிந்தியாவில் உள்ள பல ஹிந்துக்களும் இதில் கலந்துகொள்கிறார்கள்.

மீரான் சாயபுவின் யோக மகிமையைப்பற்றிப் பல கதைகள் வழங்குகின்றன. முகம்மது நபிகளின் வம்சத்தில் 21-ஆம் தலைமுறையில் தோன்றியவர் மீரான் என்று அவரைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். வடக்கே உத்தரப் பிரதேசத்தில் அயோத்தி ஜில்லாவில் மாணிக்பூர் என்ற இடத்தில் சுமார் 400 வருஷங்களுக்கு முன் அவர் பிறந்தார். குவாலியரில் ஒரு மகானை அண்டி உபதேசம் பெற்றார். பிறகு மெக்காவுக்கு யாத்திரை செய்யப் புறப்பட்டார். வழியில் பல பேர் அவருக்குச் சிஷ்யர்கள் ஆனார்கள். கடைசியில் இலங்கை வழியாகத் திரும்பவும் தென்னிந்தியாவுக்கு வந்து சேர்ந்தார். அப்போது தஞ்சாவூரை ஆண்டுவந்த மன்னர், தீராத நோய் ஒன்று ஏற்பட்டு வருந்தி வந்தார். மீரான் சாயபு தம் யோக மகிமையால் அதைக் குணமாக்கிவிட்டார். இதனால் மன்னர் அவருக்குக் கொஞ்சம் நிலம் நன்கொடையாக வழங்கினார். பின்னால் அங்கேயே மீரான் சாயபு சமாதியானார். அப்போது அந்த மன்னரின் சந்ததியார் மீரான் சமாதியின் மேல் கட்டிடம் எழுப்பப் பணம் உதவினார்கள்.

கந்தூரியின்போது பிரார்த்தனை செலுத்த விரும்பும் இந்துக்களும் முஸ்லிம்களும் கொடி முதலிய உற்சவ விருதுகளை ஏந்தி வருவார்கள். மசூதிபோல் ஒரு தேர்ப் பீடத்தில் சிங்காரிப்பார்கள்; நாகபட்டினத்திலிருந்து அதை இழுத்துக் கொண்டு கூட்டமாகப் போவார்

கள். இந்தக் கூட்டம் தர்காவை நெருங்கியதும் இவர்களுடைய தேர்ப் பீட மகுதியின் மீதுள்ள பிறைச் சந்திரன் கொடியைப் பார்த்தவுடன், தர்காவின் உச்சியில் இருக்கும் பீர்சாயபு விழாவைத் தொடங்க உத்தரவிடுகிறார்.

ஒன்பதாம் நாள் அழகாக அலங்கரித்த ஒரு தேர்ப்பீடத்தில் பல வர்ணவிளக்குகள் அமைத்துச் 'சந்தனக் கூண்டு' புறப்படுகிறது. முக்கியமான தெருக்களின் வழியாக இப்படி ஊர்வலம் வருவார்கள். பக்தி சிரத்தையோடு அந்தக் கூண்டில் எடுத்து வந்த சந்தனத்தை, ரோஸா ஷரீஃப் என்ற அந்தச் சமாதியின் மேல் அப்பின பிறகு வந்தவர்களுக்குப் பிரசாதமாக வழங்குகிறார்கள். இதற்கு அற்புத சக்தி உண்டு என்று கேள்வி.

விழாப் பூர்த்தியாவதற்கு முன் மூன்று நாள் உபவாசம் இருப்பார்கள். கடைசி நாள் பீர் சாயபுவின் தலைமையில் கூட்டம் புறப்பட்டுக் கடற்கரைக்குப் போகிறது. அங்கே அந்தச் சந்தர்ப்பத்துக்கென்றே தோண்டி வைத்திருக்கும் ஒரு கிணற்றில் இறங்கிக் கையைக் கழுவியதும் பீர் சாயபு கடல்நீரில் மறுபடியும் கை கழுவிக் கொள்கிறார். இதோடு உபவாசம் முடிந்தது என்று அர்த்தம். பிறகு எல்லாரும் தர்காவுக்குத் திரும்புவார்கள்.

நாகூராரின் சமாதிக்கு ஏராளமான பூஸ்திதியும் சொத்தும் உண்டு. இதன் பரம்பரைத் தர்மகர்த்தர்களுக்கு 'நாட்டாண்மைக்காரர்' என்று பெயர். நாகூராரின் வம்சத்தைச் சேர்ந்த 640 குடும்பத்தாருக்கு இந்தச் சொத்திலிருந்து கிடைக்கும் வருமானத்தில் பங்கு.

எந்த ஐயர்?

"இந்த வீட்டில் இருந்தாரே, ஐயர்; அவர் இப்போது எங்கே?"

"எந்த ஐயர்? இரண்டு ஐயர்கள் இருந்தார்கள்; சகோதரர்கள்."

"ஆமாம்; ஆமாம். எனக்கு ஞாபகம் வருகிறது. நான் கேட்கிறவரின் அப்பா ஒரு லாயர். அவர் எங்கே?"

கேலி செய்யும் குணம்

கேலி செய்ய நம் எல்லாருக்கும் சக்தி இருக்கிறது. ஆனால், அதைச் செய்ய நமக்கு உரிமை உண்டா?

—ஜே. ரஸ்ஸல் க்வின்

சந்தர்ப்பம் கிடைக்குமா?

பெரும்பாலான ஜனங்கள் தங்களுக்குச் சந்தர்ப்பங்கள் கிடைக்கவில்லை என்றே எப்போதும் குறை கூறுகிறார்கள். எனக்குச் சந்தர்ப்பங்களில் நம்பிக்கையே இல்லை. இந்த உலகத்தில் முன்னுக்கு வருகிறவர்களெல்லாம், தங்களுக்கு வேண்டிய சந்தர்ப்பங்களைத் தேடிக் கண்டுகொண்டிருக்கிறார்கள்; அப்படிக் கிடைக்காவிட்டால், சந்தர்ப்பங்களைத் தாங்களே சிருஷ்டித்துக்கொண்டு விடுகிறார்கள்.

—ஜார்ஜ் பெர்னார்ட்ஷா.

கற்பனை உலகம்—18

உலக அரசாங்கம்

மூவர் கண்ட கனவு

உலகெலாம் சகல மக்களும் சுகமும் செல்வமும் பெற்று வாழ வழிகாட்டும் கற்பனை உலகங்களைப் பல சிந்தனையாளர்கள் சித்திரித்திருக்கிறார்கள். அவைகளை ‘மஞ்சரி’யில் தொடர்ந்து விளக்கி வருகிறவர் அன்பர் ரா. ஸ்ரீ. தேசிகன்.

உலகம் முன்னேறிக் கொண்டு வருகிறது என்ற கொள்கை சிதைந்து போய்விட்டது. அறிவு வளர்ந்தது; அதற்கேற்ப அன்பு தழைக்கவில்லை. ‘மனிதனிடத்தில் இனி நம்பிக்கை வைப்பதில் பயனில்லை’ என்ற பேருண்மையை இரண்டு உலக மகா யுத்தங்கள் முரசடித்து விட்டன. மனிதன் நல் உணர்ச்சியை இழந்துவிட்டான். உயர்ந்த எண்ணங்கள், லட்சியங்கள், கனவுகள் - இவை யாவற்றையும் மாய்த்து விட்டான். ‘உயிர் நுண்மையானதாக இருந்தாலும், அது புனிதமானது; தெய்வ ஒளி நிரம்பியது’ என்பதையும் மறந்து விட்டான். ஆதி காலத்தில் குகைகளில் வாழ்ந்து வந்த அநாகரிக மனிதனைக் காட்டிலும், தற்காலத்து மனிதன் படைப்புப் படியில் கீழே இறங்கிவிட்டான். நவீன நாகரிக முறையில் மனிதனை மனிதன் வதைத்துத் தின்கிற காலமாகிவிட்டது. ‘இந்த நிலையில் நாகரிகம் தழைக்காது’ என்று கவி ரவீந்திரர் கூறுகிறார். வெல்ஸ் யுத்த வெறியை மாய்க்க வழி தேடினார். ‘சர்வதேச அரசியல் ஸ்தாபனத்தின் மூலந்தான் உலகத்தில் அமைதி நிலவும்’ என்றார். அவருடைய அடிச் சுவட்டைப் பலர் பின்பற்றினார்கள். ரஸ்ஸல், ‘தேசிய உணர்ச்சி போதாது; உலக அரசாங்க உணர்ச்சியைப் பரப்ப வேண்டும்’ என்றார். கோல் (Cole) ‘பொருளாதாரத்தில் ஒற்றுமை வேண்டும்’ என்றார். இவர் 1889-ஆம் வருஷம் பிறந்தார். ஆக்ஸ்ஃபோர்டில் அரசியல் நூல் நிபுணராய்த் திகழ்கிறார். ‘உலகக் குழப்பத்தை அறிய வழி’ (Guide through World Chaos) ‘உலக மகா யுத்தத்துக்குப் பிறகு நிகழ்ந்த செய்திகளை அறிஞன் உணர்வதற்கு வழி காட்டுகிற நூல்’ (The Intelligent Man’s guide to the Post-War World) முதலிய புத்தகங்களை இவர் எழுதி வெளியிட்டார். அவற்றில் அருமையான விஷயங்களைத் திரட்டித் தந்திருக்கிறார். உலகத்தில் பொருளாதார விஷயத்தில் ஒற்றுமை ஏற்பட்டால்தான் அமைதி ஏற்படும் என்ற உண்மையைத் தக்க சான்றுகளைக் கொண்டு விளக்கிக் காட்டியிருக்கிறார்.

உலகம் வறுமையில் வாடுவதற்குக் காரணம் அறிவுக் குறைவு அல்ல. ஆனால் அறிவு எங்கும் பரவவில்லை என்பதும் உண்மையே. அறியாமையால் வறுமையா? வறுமையால் அறியாமையா? எது முன்பு, எது பின்பு என்பதை உணர முடியாத நிலையில் நிற்கிறோம். 'கலியாணமானால் பைத்தியம் தெளியும்; பைத்தியம் தெளிந்தால் கலியாணமாகும்' என்ற நிலையில் பொருளாதார உலகம் இருக்கிறது.

'சில நாட்டினர் அறிவுள்ளவர்; மற்ற நாட்டினர் அறிவு அற்றவர்' என்று சொல்வதற்கில்லை. சில நாட்டினருக்கு வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. மற்றவருக்கு அத்தகைய வாய்ப்பில்லை. அவர்களுக்கும் அறிவை ஊட்டினால், அவர்களும் அமெரிக்க நாட்டினர் போல் அறிவில் சிறந்து திகழ்வார்கள் என்பதில் சந்தேகமில்லை. உதாரணமாக: ருஷியாவை முன்பு எல்லாரும் நிந்தித்தார்கள்; இப்போதோ அந்த நாடு எல்லாத் துறைகளிலும் முன்னணியில் நிற்கிறது.

வியாபாரத்தில் ஒற்றுமை வேண்டும். 'ஏற்றுமதிதான் செய்வேன்; இறக்குமதி செய்ய மாட்டேன்' என்று ஒவ்வொரு நாடும் முயன்றால், குழப்பந்தான் தோன்றும். நம் நாட்டில் சிரமப்பட்டுப் பொருள்களை உண்டு பண்ணாமல், எந்த எந்த நாடுகளிலிருந்து, அந்தப் பொருள்களை வரவழைத்துக் கொண்டால், நமக்குச் சிரமமில்லாமல் இருக்குமோ அந்த அந்த நாடுகளிலிருந்து அவைகளை இறக்குமதி செய்துகொள்ளுவதுதான் அறிவுடைமை. பிற நாட்டை வறுமைச் சேற்றில் தள்ளிவிட்டு, நாம் மட்டும் இன்பமாக வாழ முடியாது. போட்டி போடுவதில் பயனில்லை. உலகத்தில் பொருளாதாரத் துறையில் தக்க திட்டம் ஒன்றில்லை; அதனால் உலகம் மயங்கி நிற்கிறது. பொருள்களை எப்படி மக்களுக்கு வழங்குவது என்ற தீர்மானத்துக்கு வந்தோமானால், எல்லாரும் இன்புற்று வாழ முடியும்.

ஸர் ரிச்சர்ட் க்ரிகோரி (Sir Richard Gregory) 'அணுக் குண்டும் மனிதனும்' என்ற விஷயத்தைப்பற்றிப் பேசுகிறார். இவர் 1864-ஆம் ஆண்டு இங்கிலாந்தில் பிறந்தார். இவர் விஞ்ஞான சாஸ்திர நிபுணர்; தத்துவ விசாரணையும் செய்திருக்கிறார். இங்கிலாந்தில் சிறவப் பெற்றுள்ள வேந்தர் கழகத்தில் ஓர் அங்கத்தினர் (F. R. S).

'மனிதன் இயற்கையின் அபாரமான சக்திகளை நன்கறிந்துகொண்டிருக்கிறான் என்பது உண்மையே; அவைகளை ஆளுகிற நிலையில்தான் அவன் நாகரிகம் தங்கி நிற்கும்' என்ற கருத்தைத் தெரிவிக்கிறார். அணுக்குண்டால் நாகசாகி பட்ட பாட்டைக் கேட்டால், நமக்கு உண்டாகும் அச்சத்தினால் நம் ரத்தம் சில்லிட்டுப் போய்விடும். ஆனால், மனிதனுடைய அழிவுக்கோ அல்லது அவனுடைய நன்மைக்கோ அணுச்சக்தியைப் பயன் படுத்திக்கொள்ள முடியும்.

'விடுதலை அடைந்த உலகம்' (The World Set Free) என்ற புத்தகத்தில் வெல்ஸ் அணுக் குண்டால் விளையும் கோரத் தீமையைத் தம் தீர்க்க தரிசனத்தால் கண்டுவிட்டார். அணுச்சக்தியை அடக்கி ஆளாமற் போனால், அது நம்மை அழித்துவிடும். விஞ்

ஞான அறிவை வளர்த்தோம். அதை அடக்கி ஆள நம் அகத்தில் தகுந்த கற்பனை வளரவில்லை. ஷெல்லியின் கருத்துப்படி, அத் தகைய கற்பனையைக் கவிதை தான் தரும்.

அருள் நெறியைப் பரப்ப வேண்டும். அன்பின் வடிவாய் நிற்கிற மதம் எல்லாருக்கும் சமம் இல்லையா? அத்தகைய உணர்ச்சிதான் உலகத்தை ஒன்று சேர்க்கும். எல்லாரும் ஓர் குலமாய், ஒரு சட்டத்தின் கீழ் இன்புற்றிருக்க வேண்டும் என்ற கனவை க்ரிகோரி காண்கிறார். விஞ்ஞானிகளின் சாஸ்திரப் பயிற்சிக்குத் தடை வகுப்பதில் பயனில்லை. அவர்கள் புதிது புதிதாய்க் கண்டுபிடிக்கும் அரிய விஷயங்களை உலகத்தின் நன்மைக்காகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அன்பு நிறைந்த சான்றோர்கள் தோன்றி, உலகத்தை ஓர் அமர நாடு ஆக்கவேண்டும் என்பது க்ரிகோரியின் கருத்து.

இதையேதான் ஆல்பர்ட் ஐன்ஸ்டீனும் (Albert Einstein) தருகிறார். இவர் 1879-ஆம் ஆண்டு ஜெர்மனியில் பிறந்தார். யூதர் குடும்பத்தைச் சேர்ந்தவர். உலகம் போற்றும் ஒரு விஞ்ஞானி. இப்போது இவர் அமெரிக்காவில் இருக்கிறார். நோபெல் பரிசு பெற்றவர். 'பரஸ்பரக் கவர்ச்சி' (Relativity) என்ற புதிய விஞ்ஞான தத்துவத்தை உலகத்துக்கு வழங்கினார். காலம், இடம் எல்லாவற்றிலும் தத்துவம் ஒரேவிதமான காட்சி அளிக்கும் என்று முன்னே ந்யூட்டன் சொன்னார். இடத்துக்கும் காலத்துக்கும் ஏற்றபடி தத்துவம் மாறும் என்பதைப் பல சான்றுகள் கொண்டு ஐன்ஸ்டீன் இப்போது விளக்கிக் காட்டியிருக்கிறார். ஆனால், அரசியல் துறையில் இவர் கண்ட தத்துவம் புதிதல்ல. ஆயினும் இவருடைய தூய உள்ளத்திலிருந்து இது எழுவதால், இவர் கண்ட அரசியல் தத்துவத்துக்கு ஒரு தனி மகிமை இருக்கிறது.

இப்போது இருக்கிற உலக நிலையைப் பார்த்தால், சர்வதேச அரசாங்கம் ஒன்று தோன்றினால் நலம் என்ற உணர்ச்சி நமக்கு வராமல் போகாது. நாம் உயிர் வாழ வேண்டுமானால், அதைக் கட்டாயம் நிறுவுவது நலமாகும். போராட்டத்தை ஒழிக்கவேண்டும்; சேர்ந்து வாழும் உணர்ச்சியைப் பெருக்குவதே அறம். பழைய போர் முறைகள் பயன் தரமாட்டா என்கிறார் ஐன்ஸ்டீன்.

ஜப்பானில் நிகழ்ந்த அணுக் குண்டுப் போர் உலகத்தைத் திகிலடையச் செய்துவிட்டது. இதை எதிர்த்து நிற்க முடியாது. தற்காப்பு என்பது விஞ்ஞானத்தில் இல்லை; போர்க் கருவிகளில் இல்லை. சட்டத்திலும் ஒழுங்கிலுந்தான் உலக சமாதானம் நிலைபெற்று நிற்க முடியும். உள்ளத்தைப் பண்படுத்த வேண்டும். அமெரிக்கா அணுக்குண்டை வைத்திருந்தால் என்ன? அந்தக் குண்டின் ரகசியம் மற்ற நாடுகளுக்கும் வெளியாகிவிடலாம். அப்போது உலகமே அழிந்து போய்விடும். விஞ்ஞானம் நம்மை இந்த நிலைக்குக் கொண்டுவந்து வைத்துவிட்டது. மனித உள்ளத்திலும் அறிவிலுந்தான் இந்த அபாய நிலைக்குப் பரிகாரம் ஏற்படும்.

அணுக்குண்டுச் சக்தியை ஒவ்வொருவரும் அறியவேண்டும். கிராமம் கிராமமாய்ப் போய் இதைத்

தெரிவிக்கவேண்டும். நாட்டின் ஜனத்தொகையைக் கொண்டு சர்வ தேச அமைப்புக்கு வோட்டுரிமை அளிக்காமல், சான்றோர்களும் அறிவாளிகளும் நிறைந்த நாடுகளுக்கு அதிகமான வோட்டுரிமை அளிப்பது நலம். அஞ்ஞானத்தில் ஆழ்ந்து கிடக்கும் ஜனங்களிடையே குடியரசை அமைப்போமானால், அபாயமே. அப்படிக் குடியரசை அமைத்தாலும், ஜனங்களுடைய அறியாமையை முதல் முதலில் அகற்றியே தீரவேண்டும். அஞ்ஞானத்தின்மீது அறிவின்மை ஆணை செலுத்தினுல் எப்படி இருக்கும் என்பதை உன்னிப் பாருங்கள். மனச்செம்மை, அருள், அன்பு, உண்மை இவைகளின்மீது உலக அரசியலை அமைக்கவேண்டும். தேசிய உணர்ச்சி பயனில்லை. சர்வதேச உணர்ச்சி வேண்டும். உணர்ச்சி அளவோடு நிற்காமல், அது செயலிலும் பரிணமிக்க வேண்டும். அப்படி உலக அரசாங்கம் ஒன்று உருவாகாமற் போனுல் உலக நாசம் நிச்சயம் என்று ஐன்ஸ்டீன் சொல்லுகிறுர்.

'உலகப் பொருளாதார நிலையில் ஓர் ஒற்றுமை வேண்டும். பிறரை ஏழையாக்கி ஒருவன் இன்புற முடியாது. போட்டியில் இன்பமில்லை. உலகம் முழுவதும் ஒரு குடும்பம் போலச் சண்டை சச்சரவில்லாமல் வாழ வேண்டும்' என்பதே இவர்கள் அனைவரும் கண்ட கனவு. அந்தக் கனவு நனவாக, உலகத்து மக்களுள் ஒவ்வொருவரும் பாடுபட வேண்டும். அப்படிப் பாடுபடாமற் போனுல், விஞ்ஞானம் எழுப்பிய மாபூத அணுக் குண்டுக்கு நாம் இரையாகிவிடுவோம். அதை எதிர்ப்பதற்கு ஒரே ஓர் ஆயுதம் உண்டு. அதுதான் அன்பு. அன்பின் வெற்றியே வெற்றி என்று நாம் அனைவரும் முரசடிக்க வேண்டும்.

ரேடியோவின் சக்தி

ஒருவர்: அமைதி நிலவத் தேசங்களுக்கிடையே சிறந்த சாதனம் ரேடியோ என்கிறுர் ஐன்ஸ்டீன்.

மற்றவர்: எங்கள் அடுத்த வீட்டு ரேடியோவைப் பார்த்தால், இது சரியல்ல என்று விளங்கும்.

—'பாலிடீடிக்கென்', கோபென்ஹேகன்.

மாற்றுக் கேள்வி

ஸ்விட்ஜர்லாந்து ஓட்டல் ஒன்றில் ஒரு கனவான் தங்க வந்தார். அவரிடம் ஓட்டல் குமாஸ்தா, "ஸார், தினம் காலையில் ஆறு மணிக்குக் காவல்காரன் வந்து உங்களை எழுப்பும்படி சொல்லலாமா?" என்று கேட்டான்.

"வேண்டாம்; அதற்கு முன்பே நான் எழுந்து விடுவேன்" என்ருர் கனவான்.

"அப்படியானுல், ஸார், நீங்கள் தயவு செய்து காவல்காரனை எழுப்புவீர்களா?"

—'நியூ யார்க் டைம்ஸ் மகஸின்.'



எண்ணெய்க் குளியல், சோப்புக் குளியல் இப்படியெல்லாம் நாம் செய்வதுபோல், பறவைகள் எறும்புக் குளியல் செய்கின்றன. காரணந்தான் புரியாத மர்மமாயிருக்கிறது!

எறும்புக் குளியல்

ஹ்யூ எம். ஹால்லிடே

எறும்புப் புற்றிலிருந்து மண்ணைத் தோண்டி எடுத்து வெளியில் போடும்போது அங்கே இருக்கும் காக்கையைப் பார்க்க வேண்டுமே; அதற்குக் குஷி கிளம்பி விடும். எறும்புகள் நாலு பக்கமும் தப்பி ஓடப் பார்க்கும்; காக்கை அவற்றைக் கொத்தி எடுத்துத் துள்ளி விளையாடும். எறும்பைத் தன் அலகினால் கொத்திச் சிறகுகளில் வைத்துத் தேய்த்துக் கொள்ளும். காக்கை மட்டுமே இப்படிச் செய்கிறது என்று எண்ணாதீர்கள்.

பறவைகளில் சுமார் 40 வகையைச் சேர்ந்தவை இந்த மாதிரி எறும்புக் குளியல் களியாட்டத்தில் ஈடுபடுகின்றன. எறும்புப் புற்றில் துழாவுவதென்றால், அவைகளுக்கு என்ன ஆனந்தம் தெரியுமா? சில பறவைகள் அசல் கோமாளிகளைப் போலவே எறும்புகளை வைத்துக் கொண்டு கூத்தாடும். பொதுவாக இந்த வகைப் பறவைகள் எல்லாமே எறும்பைப் பிடித்துச் சிறகிலும் வாலிலும் தேய்த்துக் கொள்கின்றன. இது ஏன் என்றுதான் தெரியவில்லை.

சாதாரணமாக வாலையும் சிறகையும் மூக்கால் தேய்த்துக் கொள்ளும்போது, இந்தப் பறவைகள் தட்டித் தடுமாறுவதில்லை. ஆனால் இப்படி மூக்கில் எறும்பை

காப்பிரைட்: அமிர்த பஜார் பத்திரிகா (ஆங்கிலம்; 1-3-'58), கல்கத்தா.

வைத்துக் கொண்டிருக்கும்போது, இவை நிலை தடுமாறிப் பின்னல் சாய்ந்து விடுகின்றன.

ஜெர்மனியில்தான் பறவைகளைப்பற்றி விசேஷமாக ஆராய்ந்து எழுதியிருக்கிறார்கள். பின்னல் அமெரிக்கா, இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, இந்தியா இந்த நாடுகளிலும் இந்த ஆராய்ச்சியில் பலர் ஈடுபட்டார்கள். இருந்தாலும் பறவைகள் இப்படி எறும்பை வைத்துக்கொண்டு கூத்தாடுவதைப்பற்றி, ஏதோ சில இடங்களில்தான் குறித்திருக்கிறார்கள். 76 வருஷங்களுக்கு முன் முதல் முதலாக இதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கும் ஒரு விவரத்தைக் காணலாம்: "சாதாரணக் காக்கை ஒன்று எறும்புப் புற்றைப் பார்த்தால் போதும். அதன் மேல் ஏறி உட்கார்ந்து கொள்கிறது. எறும்புகளைத் தன் மேல் ஏறவிட்டுக் கொள்கிறது. தன் உடம்பில் இருக்கும் பேனை எறும்பு எடுத்துக்கொண்டு போவதற்காகத்தான் அது இப்படிக் காத்திருக்கிறது."

இரண்டொரு வருஷத்துக்கு முன் எனக்கு ஓர் அன்பரிடமிருந்து கடிதம் ஒன்று வந்தது. "பறவைகள் எறும்பைத் தேடிப் போவதற்குக் காரணம் உடம்பை விட்டுப் பேன் தொலைய வேண்டும் என்பதுதான். இது கூடவா தெரியாது? 50 வருஷத்துக்கு முன்னல், அடிபட்ட ஒரு பறவையின் உடம்பிலிருந்து பேனை எறும்பு எடுத்துப் போவதை நானே நேரில் பார்த்திருக்கிறேன்" என்று அவர் எழுதியிருந்தார்.

இதில் ஒரு சங்கடம் என்னவென்றால், இப்படி எழுதுகிறவர்கள் வயதானவர்கள்; எப்போதோ பார்த்ததை ஞாபகத்தில் கொண்டு சொல்கிறார்கள். இந்த மாதிரி விஷயங்களை ஞாபகப்படுத்திக் கொள்ளும்போது, ஒன்றும் இல்லாததை மெருகிட்டு மிகைப்படுத்திச் சொல்வதுதான் மனித இயல்பு. ஆகவே, அது தவருகக் கூட இருக்கலாம். எனக்கே சில வருஷங்களுக்கு முன் நடந்த விஷயங்கள் தெளிவாக நினைவுக்கு வந்தாலும், அப்போது எழுதி வைத்த குறிப்புகளைப் புரட்டிப் பார்க்கும்போது, அவைகளுக்கும் நான் நினைத்ததற்கும் எவ்வளவு வித்தியாசம் இருந்தது தெரியுமா?

பறவைகள் இப்படி எறும்பு பிடிப்பது ஏன் என்று ஆராய்ச்சியாளர்களுக்கு இன்னுங்கூடப் புரியவில்லை. 'இது பறவைகளின் இயல்பு. ஒரு காலத்தில் இதற்கு ஏதுவோ காரணமாக இருந்திருக்கலாம். இப்போதும் பெயருக்குப் பழையபடி எறும்பு பிடிக்கின்றன' என்றுதான் நினைக்க வேண்டியிருக்கிறது.

பறவைகள் எறும்பைக் கொத்தி எடுக்கும்போது உற்றுக் கவனித்தால்தான் அவை என்ன செய்கின்றன, எறும்பை எந்த இடத்தில் வைத்துத் தேய்த்துக் கொள்கின்றன என்று தெரியும். முன்னெல்லாம் இப்படிக் கூர்ந்து கவனிக்காமல் இடத்தை ஏதோ அநுமானித்தே சொல்லி வந்தார்கள்.

அமெரிக்காவில் ஒண்டேரியோ மாகாணத்தில் எரின்டெல் என்ற இடத்தில் ராய் ஐவர் என்பவர் பறவைப் பண்ணை ஒன்று நடத்தி வருகிறார். அதில் உள்ள பறவைகள் எல்லாம் பழகியவை. அவை எறும்பைக் கொத்திக் கோமாளிக் கூத்தாடும்போது கவனித்தோம். அதனல் பல விஷயம் தெரிந்தன.

பறவைகள் மறுபடியும் மறுபடியும் புது எறும்புகளைக் கொத்தி எடுத்ததால் அவை எறும்பைத் தின்று விட்டன என்றுதான் தோன்றுகிறது. நடு நடுவே பறவைகளின் காலில் எறும்புகள் ஏறிக் கடிக்கவும் கடித்தன. இருந்தாலும் எறும்பெல்லாம் தீருகிறவரையில் இந்தக் களியாட்டம் ஓயவில்லை.

சில பறவைகள் இப்படி மயங்கிக் கோமாளிக் கூத்து ஆடினாலும் பல பறவைகள் எறும்பைக் கொத்தித் தின்னவே புற்றருகில் வருகின்றன. காக்கை இனத்தைச் சேர்ந்த பிரான்ஸ் கிராக்கிள் (Bronze Grackle) என்ற ஒரு பறவை, காட்டுச் செர்ரிப் பழத்தைக் கொத்தி இப்படி விளையாடும். அமெரிக்கப் பறவை ஆராய்ச்சிச் சங்கத்தார் 'ஆக்' என்று ஒரு பத்திரிகை நடத்தி வருகிறார்கள். சமீபத்தில் வெளியான அதன் இதழ் ஒன்றில், நீல நிறமுள்ள ஜே என்ற பறவை, எரியும் சிகரெட் துண்டை இப்படிக் கொத்தி எடுத்து விளையாடியதாகத் தகவல் வெளியாகியிருக்கிறது. இதில் ஒரு விசேஷம்: பற்ற வைக்காத சிகரெட்டை அது தொடுவதேயில்லை; எரியும் சிகரெட் துண்டைக் கண்டால்தான் இப்படி அதைக் கொத்த ஓடி வருகிறது. மிகவும் சின்னச் சிகரெட் துண்டாக இருந்தால் நீள வாட்டிலும், சற்று நீளமாக இருந்தால் அகல வாட்டிலும் அலகில் வைத்துக் கொண்டு, எறும்பைத் தேய்த்துக் கொள்வது போலவே சிறகில் சிகரெட்டை வைத்துத் தேய்த்துக் கொள்கிறது.

இதே மாதிரி படிகம், ஆரஞ்சுப் பழத் தோலி, ஆப்பிள் துண்டு முதலியவற்றைச் சில பறவைகள் எடுத்துத் தேய்த்துக்கொள்கின்றன. ஆனால் எறும்பைத் தேய்த்துக் கொள்ளும்போதுதான் இந்தப் பறவைகளுக்குக் கொண்டாட்டம்.

எறும்புகளின் உடம்பிலிருந்து வெளியாகும் ஒரு திரவத்துக்கு ஃபார்மிக் ஆஸிட் என்று பெயர். எறும்பு உடம்பில் படும்போது பறவைகளுக்கு ஒருகால் ஓர் உற்சாகம் ஏற்படலாம்; அல்லது ஃபார்மிக் ஆஸிட் என்ற திரவத்தினால் பறவைகள் தம் உடம்பில் பேன் வராதபடி பாதுகாத்துக்கொள்ளவும் எறும்பைத் தேய்த்துக் கொள்ளலாம். கூட்டில் போட்டு வளர்த்த பறவைகள் எலுமிச்சம்பழச் சாறு, காடி, பீர் இப்படி எதைக் கண்டாலும் அதில் தாவ வரும்.

உடம்பில் பேன் இருக்கும் காக்கைகள் எறும்புப் புற்றில் கொஞ்ச நேரம் இருந்த பிறகு, அவைகளைப் பரிசோதித்ததில் அவற்றின் உடம்பில் ஃபார்மிக் திரவம் படிந்திருப்பது தெரிந்தது.

ராய் ஐவர் நாலு வகை எறும்புகளையும் 31 வகைப் பறவைகளையும் வைத்துப் பரிசோதித்துப் பார்த்தார். சில சமயம் கையிலேயேகூட வைத்துக்கொண்டு கவனித்தார். அவை நொடியில் எறும்பை எடுத்து உடம்பில் தேய்த்துக் கொண்டுவிடுவதால், சில சமயம் எவ்வளவு உற்றுக் கவனித்தும் தொடர்ந்து என்ன செய்கின்றன என்று கண்டுபிடிக்க முடியாமல் போய்விடுகிறதாம். இருந்தாலும் ஒரு சமயம் பார்க்கத் தவறின விஷயத்தை இன்னொரு தரம் கவனித்து அவர் விவரமான இந்தத் தகவலை எழுதியிருக்கிறார்:

"எறும்பைப் பறவை கொத்தி எடுத்ததும் அலகு நுனியில் அதை வைத்துக்கொண்டு கண்ணைப் பாதி திறந்தபடி சிறகைச் சற்றே விரித்

துக்கொள்கிறது. பிறகு உடம்பை வளைத்து உள் சிறகை (ப்ரைமரி விங்) விரித்துத் தரையில் படும்படி கொண்டு வருகிறது. அப்போது வால் புறத்தையும் சேர்த்து வளைப்பதால் பறவையின் காலடியில் வால் மாட்டிக் கொள்கிறது. அது நிலை தடுமாறிக் கீழே விழுந்து விடுகிறது. இதற்குள் சடக்கென்று எப்படியோ உட்சிறகுக்குள் எறும்பை வைத்துத் தேய்த்து விடுகிறது. மேலே உள்ள இறகில் தேய்ப்பதில்லை. வெவ்வேறு வகைப் பறவைகளைக் கவனித்ததில் அவைகளும் இப்படித்தான் செய்தன. பரபர வென்று அவை தேய்க்கும்போது மாறுதல் இருந்தாலும், மொத்தத்தில் அவை எறும்பை ஒரே மாதிரி தான் தேய்த்துக்கொண்டன.''

இவைகளில் காக்கை ஒன்றுதான் இந்த ரீதியில் இல்லாமல் வேறு விதமாக எறும்போடு பழகுகிறது. எறும்புப் புற்றில் உட்கார்ந்ததும், காக்கை சற்று நேரம் கண்ணை மூடிக்கொண்டு ஏதோ இன்பம் அநுபவிப்பதுபோல் மெய் மறந்திருக்கிறது. அப்போது எறும்புகள் அதன் இறகுகளில் ஏறிக் கொள்கின்றன. காக்கை தன் உடம்பின் மேல் உள்ள இறகுகளில் எறும்பைத் தேய்த்துக் கொள்ளவில்லை; உள் சிறகிலும் வாலிலுந்தான் தேய்த்துக்கொள்கிறது. ஆகவே, காக்கையின் இந்தச் செயலைப் பார்க்கும்போது, பறவைகள் எறும்பிலிருந்து தெறிக்கும் ஃபார்மிக் திரவத்தைக்கொண்டு உடம்பெங்கும் பேன் வராது பாதுகாத்துக்கொள்கின்றன என்று அநுமானிப்பது சரியென்று படவில்லை.

'ப்ளூ-பர்டு' என்ற நீலக் குருவியும் 'ராபின்' என்ற குருவியும் ஒன்றோடொன்று நெருங்கிய இனத்தைச் சேர்ந்தவை. நீலக் குருவி பொந்துக்குள் கூடு கட்டி வாழ்வது. அதன் உடம்பில் பேன் இருப்பது இயல்புதான். இதனாலேயே கூட நீலக் குருவிகள் ஏராளமாக மாண்டு போகின்றன. ஆனால் அவை எறும்பைத் தேடிச் செல்வதில்லை. இதற்கு மாறாக வெளியே கூடு கட்டிப் பேன் பிடிக்காமல் சொஸ்தமாக வாழும் ராபின் குருவியோ எறும்பைப் பிடிக்கப் போகிறது. இதையெல்லாம் கவனிக்கும்போதும் பேனைப் போக்குவதற்குத்தான் பறவைகள் எறும்பைப் பிடித்துத் தேய்த்துக் கொள்கின்றன என்று சொல்வது சரி என்று படவில்லை.

பறவைகள் கூடு கட்டும்போதுதான் இப்படி எறும்பு பிடிப்பதில் அதிக உற்சாகம் காட்டுவதாகத் தெரிகிறது. கூடு கட்டுவதற்கும் முட்டை இடுவதற்கும் சம்பந்தம் உண்டு. அந்தச் சமயத்தில் பறவைகளின் உடம்பில் ஒருவித நீர் சுரப்பதால் அவைகளுக்குத் தெம்பு ஏற்படுகிறது. அதனால்தான் இப்படி எறும்பைத் தேடிக் கொண்டு போய்க் கோமாளிக் கூத்தாடுகின்றனவோ, என்னவோ! இதுவும் சாத்தியந்தான்.

நானும் மிஸ்டர் ராய் ஐவரும் இதைப்பற்றிப் பலமுறை கலந்து ஆலோசித்திருக்கிறோம். இருந்தாலும் இன்னதுதான் காரணம் என்று இன்னும் நிச்சயமாய்ப் புரியவில்லை.

அழகிய சிங்கர்

ஏ. டி. கிருஷ்ணமாச்சாரியார்

வடகலை வைஷ்ணவர்களுள் மிகப் பெரும்பாலோர் ஆச்ரயித்திருப்பது அகோபில மடத்து அழகிய சிங்கரை. செல்வத்திலும் யானை குதிரை முதலிய பரிவாரங்களிலும் ஒரு ராஜாவுக்குச் சமமான அந்தஸ்தைப் பெற்ற இந்தப் பீடத்தில் அமர்ந்திருந்த 42-ஆவது சுவாமி திருவள்ளூரில் சமீபத்தில் பரமபதத்துக்கு எழுந்தருளினார். 43-ஆவது சுவாமி பட்டத்துக்கு வரும் இந்தச் சமயத்தில் மடத்தின் இந்த வரலாறு ரசமாயிருக்கும்.

திருப்பதி மலையின் மேல் ஏறிச் செல்ல ஏழுமலைக்கும் ஏழு மைல் தூரம் எழுபத்தையாயிரம் கற்படிகளைக் கட்டுவித்தவர் யார்? பல்லவ ராஜதானியான காஞ்சிபுரம் வரதராஜசுவாமி கோயிலில் கடைந்தெடுத்த சிற்பச் சிறப்புக்களுடன் பொலியும் நூற்றுக்கால் மண்டபத்தைக் கட்டுவித்தவர் யார்? திருநாராயணபுரம் (மைசூர்) என்னும் மலை நாட்டுத் திருப்பதியில் ராயகோபுரம் கட்டுவித்தவர் யார்? தமிழ் நாட்டுச் சமயத் துறை இலக்கியச் செல்வங்களைத் தெலுங்கரும் கொண்டாடச் செய்தவர் யார்? திருநெல்வேலி முதல் திருவண்பரிசாரம் (பதரிகாசிரமம்) வரையில், ஸ்தலங்கள் தோறும் தமிழ் நாட்டு வழிபாட்டு முறைகளை ஏற்படுத்தியவர் யார்? இவை எல்லாவற்றையும் செய்தவர் 575 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த அழகியசிங்கரே.

இந்த மகான் கி. பி. 1378-ஆம் ஆண்டில் மைசூர் ராஜ்யத்தில் திருநாராயணபுரத்தில் ஏழுமலையான் திருவருளால் கடாம்பி கேசவாசாரியருக்குப் புதல்வராய் அவதரித்தார். ஸ்ரீநிவாசன் என்று இவருக்குப் பெயர் வைத்தார்கள். இளமையில் சகல சாஸ்திரங்களையும் கற்று, காஞ்சீபுரம் சென்று, வரத விஷ்ணு ஆசாரியரிடம் வேதாந்தம் வாசித்து வந்தார். சொப்பனத்தில் அகோபில லட்சுமி நரசிம்மன் தோன்றி, "அங்கே வா, ஆசிரமம் தருகிறோம்" என்றார். இளைஞரும் ஆசாரியரின் அநுமதி பெற்று அகோபிலம் சென்றார். அப்போது இவருக்கு வயது இருபது; பிரம்மசாரி.

அங்கே ஸ்ரீ லட்சுமி நரசிம்ம மூர்த்தியே ஒரு கிழத் துறவி உருவத்தில் எழுந்தருளித் துறவு மந்திரத்தை அருளி, கோயிலில் உடையவர் சாத்தியிருந்த திரிதண்ட காஷாயங்களை இவருக்கு வழங்கினார். சடகோபர் என்று பெயரும் இட்டார். இவர் அங்கிருந்து பால சந்நியாசியாய்ப் புறப்பட்டு, தென் பாண்டி நாட்டில் ஆழ்வார் திருநகரிக்குச் சென்றார். மறைந்திருந்த நம்மாழ்வார் சந்நிதியைத் தேடிப் புதுப்பித்துப் பிரதிஷ்டை

மூலம்: தினமணி (தமிழ்; 8-3-'53), சென்னை.

செய்தார். அங்கிருந்து வடநாட்டுக்குப் புறப்பட்டுத் திவ்விய தேசந் தோறும் சென்று ஆழ்வார், ஆசாரியர் சந்நிதிகளை அமைத்துப் பகவத் ராமாநுஜ சித்தாந்தம் விளங்கச் செய்தார். அறுபது ஆண்டுகள் யதிராஜராக வீற்றிருந்து அகோபில மடத்தை ஸ்தாபித்துவிட்டு, திருநாராயணபுரம் கல்யாணி திருக்குளக் கரையில் திருச்சோதிக்கு எழுந்தருளினர்.

ஆறு நூற்றாண்டுகளாக இவருடைய சிஷ்ய பரம்பரையில் நாற்பத்திரண்டு மகான்கள் வந்து இந்தப் பீடத்தை அலங்கரித்தார்கள்.

இந்த மடத்துக்குப் பெயர் கொடுத்த அகோபிலம், கர்னூல் ஜில்லாவில் மலையடிவாரத்தில் காடுகளுக்கு நடுவே இருக்கிறது. கடப்பையில் ரெயிலை விட்டு இறங்கி ஆள்ளகட்டா வரைக்கும் பஸ்ஸில் சென்று 15 மைல் தூரம் நடந்தோ கட்டை வண்டியிலோ போகவேண்டும். வட நாட்டிலிருந்து வருவோர் நந்தியாலில் ரெயிலை விட்டு இறங்கி ஆள்ளகட்டாவுக்குப் பஸ்ஸில் வந்து அகோபிலம் போகலாம்.

நரசிம்ம மூர்த்தி அவதரித்த ஸ்தலம் இதுவே. இதை ஆழ்வார்கள் சிங்கவேள் குன்றம் என்று குறிப்பிடுகிறார்கள்.

இங்கே நரசிம்ம சுவாமிக்கு வேறு ஒன்பது கோவில்கள் இருக்கின்றன. மூர்த்திகளின் பெயர்கள் முறையே: 1. பிரஹ்லாத வரதன்; 2. பார்க்கவ நரசிம்மன்; 3.சத்ரவட நரசிம்மன்; 4.யோக நரசிம்மன்; 5. காரஞ்ச நரசிம்மன்; 6. அகோபில நரசிம்மன்; 7. க்ரோட நரசிம்மன்; 8. மாலோலன்; 9. ஜ்வாலா நரசிம்மன்.

இந்த ஒன்பது நரசிம்மர்களும் ஸ்தலப்பெருமாளும் ஆகப் பத்துப் பேரின் திருவுருவங்களும் இங்கே உள்ள நூற்றுக்கால் மண்டபத்தின் நடுவே உள்ள பத்துத் தூண்களில் செதுக்கப் பெற்றிருக்கின்றன. தவிர இந்த மண்டபத்தின் நூறு கால்களில் ஒவ்வொன்றும் பதினறடி சுற்றளவு இருக்கிறது. எட்டுப் பட்டையாக அவற்றின் ஒவ்வொரு முகத்திலும் குதிரை வீரர், யாளி உருவங்களும், வேட்டைச் சித்திரங்களும் மழமழ என்று செதுக்கப் பெற்றிருக்கின்றன. காஞ்சிபுரத்து ஆயிரக்கால் மண்டபமும் இந்த மண்டபத்தைப்போலவே இருப்பதால், இரண்டையும் கட்டின சிற்பி ஒருவரே என்று தோன்றுகிறது.

கீழ் அகோபிலம் என்றும் மேல் அகோபிலம் என்றும் இரண்டு இடங்கள் உண்டு. கீழ் அகோபிலத்திலிருந்து $1\frac{1}{2}$ மைலில் வடகிழக்கே பார்க்கவ நரசிம்மர். $1\frac{1}{2}$ மைல் தெற்கே சத்ரவட நரசிம்மர். அதற்கு அரைமைல் கிழக்கே யோக நரசிம்மர். மேல் அகோபிலத்தில் அகோபில நரசிம்மர். தென் மேற்கே க்ரோட நரசிம்மர். ஒரு மைலில் மாலோலன். 3 மைல் வடகிழக்கே ஜ்வாலா நரசிம்மர். தெற்கே 4 மைலில் பாவன நரசிம்மர். மேல் அகோபிலத்திலுள்ள எஃகுத் தூண்தான் நரசிங்கம் அவதரித்த இடம். ஜ்வாலா நரசிம்மர் கோவில், இரணியனைப் பிடித்துக் கிழித்த இடம். மேல் அகோபில நரசிம்மருக்குப் பத்துக் கை; உக்கிர வடிவம். க்ரோட நரசிம்மர் வராக வடிவினராய்ப் பிராட்டியைத் தோளில் வைத்துக் கொண்டு கூத்தாடுகிற திருக்கோலம். மாலோலன் கோயிலில்

கழுத்தைத் திருப்பிக்கொண்டு ஊடின லட்சுமியும் செஞ்சு நாயகியும், நடுவில் நரசிம்மரும் சேவை அளிக்கிறார்கள். காரஞ்ச நரசிம்மருக்கு ஒரு கையில் சக்கரம்; ஒரு கையில் வில்; வலது கை வரதாபய முத்திரை தாங்குகிறது.

இங்கே உள்ள மலைவாசிகளுக்குச் 'செஞ்சு'க்கள் என்று பெயர். இவர்கள் வேட்டையில் வல்லவர்கள்; வனவிலங்குகளுக்கு அஞ்சாதவர்கள்; அவற்றுடன் பழகுபவர்கள். இவர்களில் ஒருவர், ஸ்ரீ மகாலட்சுமியின் அவதாரமான ஒரு பெண் குழந்தையைக் காட்டில் கண்டெடுத்து, லட்சுமி என்று பெயரிட்டு வளர்த்தார். அவள் மணப் பருவம் அடைந்ததும் நரசிம்மசுவாமி அவளைக் கண்டு காதல் கொண்டு, தம் பத்து அவதார வைபவங்களையும் விவரித்து மணம் புரிந்துகொள்ள வேண்டினார். அவள் உடன்படாமல், "வேட்டையாட உமக்கு வருமா?" என்று கேட்டாள். உடனே நரசிம்மர் வில்லும் அம்பும் கொண்டு வேட்டை ஆடிப் புலிப்பல் தாலி போட்டுச் செஞ்சுநாயகியை மணந்துகொண்டாராம். அதற்கு முன் இரணியவதம் முதல் உக்கிர நரசிம்மராக இருந்தவர் அது முதல் செஞ்சுலட்சுமி நரசிம்மராகி மாலோலராகவும் பிரஹ்லாதவரதராகவும் மாறிவிட்டாராம். இன்றும் மாசி மாதம் நிலாக்காலத்தில் பத்துநாள் நடக்கும் திருவிழாவில் செஞ்சுக்கள் இந்த வரலாற்றை நாடகமாக ஆடுகிறார்கள்.

கீழ் அகோபிலத்துக்குத் தெற்கே திருக்குளமும், வடகிழக்கில் லஞ்சகோனேரி என்னும் புஷ்கரணியும், மேற்கே விசுவேசுவர வாவியும் ஆழ்வார் கோனேரியும், வட கிழக்கே $1\frac{1}{2}$ மைலில் பார்க்கவ தீர்த்தமும் அட்சய தீர்த்தமும், மேல் அகோபிலத்துக்குச் செல்லும் வழியில் வராகக் குளமும் மார்கொண்ட லட்சுமி கோனேரியும், மேல் அகோபிலத்தில் பிரஹ்லாத குளமும் ரத்தக் குளமும், ஜ்வாலா நரசிம்மர் கோயிலில் பவநாசினியின் உற்பத்தி ஸ்தானமும், பாவன நரசிம்மர் கோயிலில் பாவன தீர்த்தமும் இருக்கின்றன. உக்கிர நரசிம்மர் கோயிலில் ரத்தக் குளம் மட்டும் ரத்தம்போலவே சிவந்திருக்கிறது. மற்றவை தூய நன்னீராய் ஸ்நானத்துக்கும் பானத்துக்கும் உதவுகின்றன.

கி. பி. 1076 முதல் 1106 வரையில் பம்பாயில் கல்யாண நகரில் ஆண்டு வந்த சாளுக்கிய மன்னன் விக்கிரமகேது இந்த அகோபிலத்துக்கு வந்து தரிசித்தபோது, மூல விக்கிரகங்கள் மட்டுமே இருந்ததாக அவனுடைய கல்வெட்டு ஒன்று கூறுகிறது. கி.பி. 1300 முதல் 1325 வரைக்கும் ஆண்ட காகதீய மன்னனான பிரதாபருத்திர தேவன் இங்கு வந்து தரிசித்தபோது உற்சவ விக்கிரகங்களை வார்த்து, பிரதிஷ்டை செய்து, பூஜை உற்சவாதிகளை ஏற்படுத்தினதாகப் 'பிரதாப ருத்திரீயம்' என்னும் தெலுங்குக் காவியம் கூறுகிறது. பிற்பட்ட 'வாஸந்திகா பரிணய' நாடகத்தில் செஞ்சு நாயகியை நரசிம்ம மூர்த்தி கண்டு காதலித்து வேடுவனாகி மணந்த கதை வருகிறது.

ஆதி வண் சடகோப யதீந்திர மகாதேசிகன் வடநாட்டில் உதயபானுமிச்ரன் என்னும் அரசனைக் கொண்டு அகோபிலத்திலும் காஞ்சிபுரத்திலும் நூற்றுக் கால்

மண்டபங்கள் கட்டுவித்தார். உத்கல தேச மன்னன் முகுந்த தேவ ராயனைக் கொண்டு திருநாராயண புரத்தில் கோபுரம் கட்டுவித்தார். தெலுங்குக் கவிச் சக்கரவர்த்தி அல்லஸானி பெத்தன்னவைக் கொண்டு ஆழ்வார்கள் அருளிச் செயல்களின் சாரத்தைத் தெலுங்குக்காவியங்களில் இயற்றுவித்தார். திவ்விய தேசந்தோறும் அகோபில மடங்களைக் கட்டுவித்தார். திருமலையில் படி கட்டுவித்தவரும் இவரே. இவரை அடியொற்றி வந்த மடாதிபதிகள் விஜயநகர அரசர்களைக் கொண்டு - முக்கியமாய்க் கிருஷ்ண தேவராயரைக் கொண்டு - பல கோயில்களில் கோபுரங்களைக் கட்டுவித்தார்கள். அகோபிலத்தில் ஒரு கோயிலான மாலோலன் சந்நிதி உற்சவ மூர்த்தியின் சொர்ணவிக்கிரகத்தை இந்த மடாதிபதிகள் அன்றாடம் அர்ச்சித்துப் பல்லக்கில் எழுந்தருளப் பண்ணிக்கொண்டு ஊர் ஊராய்ச் சென்று மக்களுக்கு மாலோலன் சேவை பண்ணி வைத்து வருவதால், இவர்களுக்கே நரசிம்ம சுவாமியின் மறு பெயரான அழகிய சிங்கர் என்னும் பெயர் வழங்கி வருகிறது.

ஜனாதிபதியின் யுக்தி

அமெரிக்க ஜனாதிபதியாயிருந்த ஃப்ராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் என்பவர், மனிதர்களின் இயல்பை அறிய ஒரு யுக்தியைக் கடைப்பிடிப்பது வழக்கம். அவர் ஆபீஸுக்குப் போகும்போது, வழியிலே ஓர் அறையில் அவரைப் பார்ப்பதற்காக ஏராளமான பேர் வந்து கூடியிருப்பார்கள். அந்தக் கூட்டத்தின் நடுவே நின்றுகொண்டு, ஆற அமர ஏதாவது ஒரு தமாஷ் கதையை அவர் சொல்லுவார். கூட்டத்தில் இருக்கும் சிலர் 'கொல்' என்று வாய்விட்டுச் சிரிப்பார்கள்; வேறு சிலர் மரியாதையாய்ப் புன்சிரிப்புச் சிரிப்பார்கள். இந்த இரண்டு கோஷ்டியினரையும் மனத்துக்குள்ளே ஜனாதிபதி ஞாபகம் வைத்துக்கொள்வார். இந்த இரு கோஷ்டிகளின் வித்தியாசத்தையும் ஜனாதிபதியே ஒரு நண்பரிடம் விளக்கியிருக்கிறார்: "கொல் என்று சிரிப்பவர் இச்சகம் புரிந்து தயவு சம்பாதிக்க வந்தவர்கள்; மற்றவர்தான் உண்மையான காரியமாய் வந்தவர்கள். அவர்களையே முதலில் கவனிக்க வேண்டும்."

—'கர்ரோனெட்'

உள்ளத்திலே இளமை

ஃப்ராங்க் லாய்டு வ்ரைட் என்ற கட்டிடச் சிற்பி ஒருவர் இருக்கிறார். அவருக்கு இப்போது வயது 83. "உங்கள் கட்டிடங்களுக்குள்ளே மிகச் சிறந்தது எது?" என்று யாரோ அவரைக் கேட்டார்கள்.

"அடுத்தாற்போல் நான் கட்டப் போவது" என்று அவர் பதிலளித்தார்.

—'ரீடர்ஸ் டைஜெஸ்ட்'

உலகத்திலேயே பெரிய வைடூரியம்
கிடைத்தது இந்த நாட்டிலேதான்.

இலங்கை ரத்தினங்கள்

எச். ஏ. ஜே. ஹூகல்லே

பல நூற்றாண்டுகளுக்கு முன் உலகப் பிரயாணம் செய்த மார்க்கோ போலோ என்ற இத்தாலியர் இலங்கையில் தாம் கண்ட ஒரு ரத்தினக் கல்லைப் பற்றித் தம் 'பிரயாண விவர'த்தில் இப்படி எழுதியிருக்கிறார்:

"களங்கம் எதுவும் இல்லாமல் ஒரு சாண் நீளத்துக்கு, வர்ணிக்க முடியாதபடி அவ்வளவு பளபளப்பாக அது விளங்கியது."

இதற்கு முன்பே கீழ்நாடுகளில் பிரயாணம் செய்து திரும்பிய அராபிய மாலுமிகள் 'செரந்தீப்' என்று குறிப்பிடும் சிலோன் தீவில் இருக்கும் ரத்தினக் கற்களைப் பிரமாதமாகப் பாராட்டிப் பல விவரங்களைத் தம் நாட்டினருக்குத் தெரிவித்திருந்தார்கள். அராபிக் கதைகளில் இவற்றைக் காணலாம்.

இலங்கையில் ஐரோப்பியர் கால் எடுத்து வைப்பதற்கு முன்பே இந்த மாதிரி கற்களுக்கு இங்கே கிராக்கி இருந்தது. ரத்தினபுரி, ரத்தினப் பரல் என்ற இடங்களே இதற்கு அத்தாட்சியாகும்.

நீலக் கல், பசுஞ்சிலை, பச்சைப் படிகம், மாணிக்கம், வைடூரியம், புஷ்பராகம், ரவ்வாக் கல், செவ்வந்திக் கல், பூனைக் கல், சேர்கன் முதலியவை இலங்கையில் கிடைக்கின்றன; வைரம், மரகதம் முதலியவை கிடைப்பதில்லை. இலங்கையிலிருந்து வருஷந்தோறும் 20 லட்சம் ரூபாய் மதிப்புள்ள ரத்தினக் கற்கள் ஏற்றுமதியாகின்றன என்று தெரிகிறது.

நீலக் கல்: இலங்கையில் கிடைக்கும் மிகவும் விலை மதிப்புள்ள கல் நீலக் கல். மிகக் கனமான நீலக் கல் ஒன்று ரத்தினபுரி ஜில்லாவில் உள்ள குருவிற்ற கோறளை என்ற இடத்தில் 1907-இல் கிடைத்தது. இப்போதும் 'கிழக்கத்திய நாட்டு நீல அரக்கன்' என்று பிரசித்தி பெற்ற ஒரு நீலக் கல் இலங்கை ரத்தின வியாபாரி ஒருவரிடம் இருக்கிறது. 'ஆசியா



நீலக் கல்

மூலம்: ஸ்ரீ லங்கா (தமிழ்: டிசம்பர் '52), அரசாங்கப் பிரசார நிலைய அதிபர், கொழும்பு-1.



ரத்தினத்தைப் பரீட்சிக்கிருர்

வின் நீல அழகி' என்று பெயர் பெற்ற ரத்தினக்கல் ஒன்றைப் பிரிட்டிஷ் கோடீசுவரர் ஒருவர் வாங்கிக்கொண்டு போய்விட்டார்.

இலங்கையில் மாணிக்கக் கற்களைவிட நீலக் கற்கள்தான் அதிகமாகக் கிடைக்கின்றன. நீலக்கல்லும் சிவப்பு மாணிக்கமும் சேர்ந்த குருவிந்தக் கல்லின் நிறம் இளஞ்சிவப்பு, மஞ்சள் அல்லது பச்சையாக இருந்தாலும், நீலக்கல் என்றே அதையும் அழைக்கிருர்கள். ஆயினும், நிறத்தைக் கொண்டே ரத்தினக் கற்களின் இனத்தைக் கண்டு கொள்ள முடியாது. அதற்கு நிற உணர்வோடு அநுபவமும் வேண்டும்.

மாணிக்கம்: நீலக் கல்லுக்கு அடுத்தபடியாக இலங்கையில் மாணிக்கம் பிரசித்தி பெற்று விளங்குகிறது. ஆனுல் பர்மாவில் கிடைப்பதைப்போல் இங்கே மாணிக்கம் அவ்வளவு சிறப்பாகவும் நிறத்தோடும் இருப்பதாகச் சொல்வதற்கில்லை. 'புரு ரத்த மாணிக்கம்' என்று பர்மாவின் மாணிக்கக் கல்லைப் பாராட்டுவார்கள்.

1934-இல் இலங்கையைச் சேர்ந்த தெல்கொடை என்ற கிராமத்தில் கண்டெடுத்த ஒரு பெரிய மாணிக்கத்தை 42,000 ரூபாய்க்கு ஒரு பிரெஞ்சுக்காரர் வாங்கிக்கொண்டு போனுர். சில மாணிக்கக் கற்களிலும் நீலக் கற்களிலும் காணும் வெண்மையான ஒளியைப் 'பிரபை' என்பார்கள். ஒரு கல்லைப் பல பக்கம் சுற்றினுல் சிலசமயம் இந்த ஒளியைக் காணலாம். இல்லாவிட்டால் நல்ல பூதக் கண்ணுடியைக் கொண்டு இதைப் பார்க்கலாம். முன்னெல்லாம் உயர்ந்த ரகக் கல்லை இப்படித்தான் சோதித்துத் தெரிந்துகொண்டார்கள். ஆனுல் செயற்கைக் கல் மலிந்து விட்ட இந்த நாளில் இந்தச் சோதனையினுல்கூடத் தெளிவாகத் தெரிந்துகொள்ள முடிவதில்லை.

இலங்கை பூனைக் கல்லின் பிறப்பிடம். இது மலிவாக இருப்பதால் இதற்கு அதிக மதிப்பில்லை. நீலசிறப் பூனைக் கற்களுக்கு மட்டுமே சற்றுக் கிராக்கி அதிகம். இந்த வகைக் கல் கண்டி ஜில்லாவிலும் அம்பலாங்கொடைக்கு அருகிலும் கிடைக்கிறது.

'மாத்தறை வைரக்கல்' என்பது மிகவும் பளபளப்பாக இருந்தாலும், அது நிறமற்ற சாதாரணச் சேர்கன் வகையைச் சேர்ந்த கல்லே. பழுப்பு அல்லது மஞ்சள் நிறமாகத் தோன்றும் சேர்கன் கல்லைச் சூட்டில் காட்டினுல், பச்சையாகவோ நல்ல நீலமாகவோ நிறமற்றோ போய்விடும்.

வைடூரியம்: ஹோப் என்பவர் சேகரித்து வைத்திருந்த கற்களில் ஒரு சிறந்த வைடூரியக் கல் இருந்தது. அது 1815-இல் கடைசியாக ஆண்டுவந்த கண்டி அரசனுக்குச் சொந்தமானது; பல நூற்றுண்டு

களாக இலங்கையில் பிரசித்தி பெற்று வந்தது.

உலகத்திலேயே மிகப் பெரிய வைடூரியக்கல் ஒன்றைக் குருவிற்ற என்னும் இடத்தில் கண்டெடுத்தார்கள். அது 70 வருஷத்துக்கு மேல் உள்ளூர் வியாபாரி ஒருவரிடம் இருந்தது. தீப் பசுஞ்சிலை என்ற வகையில் பெரிய கல் ஒன்று இதுவரை கிடைத்தவற்றுள் மிகக் கனமானது.

பச்சைப் படிகம்: நீலக் கல்லோடு பச்சைப் படிகக்கல்லும் ரத்தினப் பரல் என்ற இடத்தில் அதிகமாகக் கிடைக்கிறது. பிரேஸில், ஊரல் மலைத் தொடர், இந்தியா, தென்னுப்பிரிக்கா முதலிய இடங்களிலும் பச்சைப் படிகம் விசேஷமாகக் கிடைக்கிறது. அது கோமேதக வகையைச் சேர்ந்தது. மிகவும் விலை மதிப்புள்ள மரகதக் கல் இந்த இனத்தைச் சேர்ந்ததுதான். ஆனல் பொதுவாக வெளிறின பசுமை நிறமோ நீலநிறமோ கொண்டது.

செவ்வந்திக் கல்: இது நல்ல ஊதா நிறம் உள்ள பளிங்குக் கல். இதுவும் ரத்தினப் பரல் என்ற இடத்தில் கிடைப்பதுதான். ஊதா நிறமுள்ள குறிஞ்சிக்கல்லைச் சில சமயம் செவ்வந்தி என்று நினைக்க நேரிடும்.

புஷ்பராகம்: நகைகளில் உடயோகமாகும் புஷ்பராகம் பொதுவாக மஞ்சள் நிறமுள்ளதாக இருக்கும். ராஜ புஷ்பராகம் என்பது மஞ்சள் நிறக் குறிஞ்சிக் கல்லே. குறிஞ்சி வகையைச் சேர்ந்த இந்த மாதிரி பளிங்குக் கல்லைச் சில சமயம் புஷ்பராகம் என்று விற்றுவிடுகிருர்கள்.

மற்ற வகைக் கற்கள்: வெளிறிய சிவப்பு, ஊதா, செம்மஞ்சள், பச்சை, பழுப்பு, நல்ல நீலம் இப்படிப் பலவகைக் கிரிஞ்சிக் கற்களும் ரத்தினப்பரலில் கிடைக்கும்.

கல்லுக்குப் பட்டை தீர்க்கிருர்

பிரிட்டிஷ் ராணியின் மகுடத்தி லுள்ள 'கருங்குமாரனின் மாணிக்கம்' என்பது மாணிக்கம் அல்ல. கி. பி. 1346-இல் கிரெஸி யுத்தத்தில் வேல்ஸ் இளவரசனுக இருந்த எட்வர்டு அதை அணிந்திருந்ததாகச் சொல்கிருர்கள். 1803 - இல் ராபர்ட் ஹோனர் என்பவரின் சிறந்த சேவையைப் பாராட்டிக் கண்டி மன்னர் ஒருவர், ஒரு நகையை அவருக்குப் பரிசாக அளித்தார். அதில் பெரிய வெள்ளைக் கிரிஞ்சிக் கல் ஒன்றைச் சுற்றி மாணிக்கக் கற்கள் பொருந்தி இருந்தன. ஹோனர் லண்டன் திரும்பியதும் அதை விற்க முயன்ருர். ஆனல் அப்போது அதிலுள்ள கிரிஞ்சிக் கல் என்ன இனத்தைச் சேர்ந்தது என்று தெரியாததால் நகையிலுள்ள பொன்னையும் மாணிக்கக் கற்களையும் மட்டும் வியாபாரிகள் வாங்க விரும்பினர்கள். பின்னல் அந்த வெள்ளைக் கிரிஞ்சிக் கல்லின் மதிப்புத் தெரிந்தது. அது ஒன்றே 23,000 பவுன் பெறும் என்று மதிப்பிட்டார்கள்.

நீல நிறம் அதிகமாக உள்ள ரவ்வாக் கல்லைத் தவிர மற்றவற்றில் எல்லா நிறங்களும் அமைந்திருக்கின்றன. கோமேதகமும் இந்த வகையில் அடங்கும்.

அமெரிக்கத் திருமணத்தில்

அமெரிக்கக் கல்யாணம் ஒன்றைப்பற்றி 'அமெரிக்கன் ரிப்போர்ட்டர்'ரில் வந்த வர்ணனையின் ஒரு பகுதி இது:

விழா முடியுமுன் மணமகள் தன் ஆடையை மாற்றிக் கொண்டாள். மணமகனேடு புறப்பட்டுப் போகுமுன் அவள் தன் பூச்செண்டைத் தன் தோழிகள் முன்பு தூக்கி எறிய, அதை ஒருத்தி பிடித்தாள். யார் கையில் அது கிடைக்கிறதோ அவளுக்கு அடுத்தபடியாக மணம் நிகழும் என்பது ஒரு வேடிக்கை வழக்கம்.

விருந்துக்கு வந்திருந்தவர்கள், மணமக்கள் வெளியே செல்லும்போது, அவர்கள் மேல் அரிசியைப் பொழிந்தார்கள். திருமணம் பயனுற வேண்டும் என்பது அதன் பொருள்.

தப்பி ஓடிய சிங்கம்

ஒரு ஸர்க்கஸ் சிங்கம் தப்பி ஓடிவிட்டது. அதை மீண்டும் பிடித்து வரக் கிராமத்திலே ஒரு கோஷ்டி கிளம்பியது. அவர்களில் ஒரே ஒருவரைத் தவிர மற்றவரெல்லாம் இந்த வேலைக்காக ஓர் ஓட்டலிலிருந்து முஸ்தீப்புச் செய்து கொண்டு கிளம்பினர்கள்.

முஸ்தீப்பாகாதவரைப் பார்த்துக் கோஷ்டியின் தலைவர், "ஒரு புட்டி பிராந்தி போட்டுக் கொள்ளுங்கள். நல்ல தைரியம் வந்துவிடும்" என்ருர்.

"அதுதானே அஞ்சுகிறேன். என் தைரியம் அளவு மீறிப் போய்விடுமே!" என்ருர் அந்த ஆள்.

—'டப்ளின் ஒப்பீனியன்'

சாதாரணமான சில நோய்களுக்கும் குறைகளுக்கும்
சுலபமான சிகிச்சைகள் உண்டு.

வீட்டிலே சிகிச்சை

திருமர்த்தி சாம்பசிவ ராவ்

ஆயுர்வேதத்தில் நம் நாட்டுச் சரக்குகளைக் கொண்டே உடலுக்கு ஆரோக்கியத்தையும் அழகையும் பெற வழி சொல்லியிருக்கிறது. மேல் நாட்டு மருந்துகள் இப்போது உபயோகத்தில் இருப்பதால், இரண்டு முறைகளையும் கலந்து சில சிகிச்சைகளைச் சொல்கிறேன்.

வெயிலின் தாபத்தால் தோல் கன்றிப் போவதற்குச் (Freckles) சிகிச்சை: கசப்புப் பாதாமிப் பருப்பையும் பார்லியையும் வகைக்கு ஓர் அவுன்ஸ் எடுத்து ஒன்றாகச் சேர்த்து மைபோல் அரைக்க வேண்டும். அதைத் தேன் விட்டு மெழுகு போல் குழப்பிக்கொள்ள வேண்டும். இரவில் இந்த மெழுகை உடம்பு முழுவதும் தடவிக் கொண்டு ஒரு துணியைச் சுற்றிப் போர்த்தபடி படுத்திருந்து காலையில் உடம்பைச் சுத்தமாகத் தேய்த்துக் குளித்துவிட வேண்டும். பிறகு கீழே சொல்லியிருக்கும் மூன்று கலவைகளில் ஒன்றைப் பிரஷ்ஷால் உடம்பில் ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று தடவை தேய்த்துக்கொள்ள வேண்டும். கலவை 1: அரை பைன்ட் மழை ஜலம் அல்லது 'டிஸ்டில்டு வாட்ட'ரில் ஒரு ஸ்பூன் 'லேவெண்டர் வாட்டர்', ஒரு டிராம் 'ம்யூரியாட்டிக் ஆஸிட்' இவற்றைக் கலந்து வைத்துக் கொள்க. கலவை 2: ஓர் அவுன்ஸ் படிக்காரத் தண்ணீரோடு ஓர் அவுன்ஸ் எலுமிச்சம் பழ ரஸமும் 1 பைன்ட் (20 அவுன்ஸ்) பன்னீரும் கலந்து வைத்துக்கொள்க. கலவை 3: ஒரு கோப்பை புளித்த மோரில் முள்ளங்கித் துருவலைப் போட்டுப் பன்னிரண்டு மணி நேரம் ஊற வைத்துக்கொள்க.

தலை மயிர் உதிர்வதை நிறுத்த: காந்தரிடின் டிங்சர் அரை அவுன்ஸ், யூ டி கொலோன் ஓர் அவுன்ஸ், பன்னீர் ஓர் அவுன்ஸ் மூன்றையும் ஒன்றாகக் கலந்த திரவத்தை மண்டையில் தோல் சிவக்கும் வரையில் நன்றாகப் பிரஷ்ஷால் தேய்த்துவிட்டு, அதற்குப் பின் மயிர்க்காலில் நன்றாகப் படும்படி தேய்க்க வேண்டும். இப்படி ஒரு நாளைக்கு இரண்டு முறை செய்ய வேண்டும். பேன் அரிப்பதால் மண்டையில் வட்டம் வட்டமாக வழுக்கை விழுந்தால், வெங்காயத்தை இரண்டாக நறுக்கி, நறுக்கிய துண்டுகளை வழுக்கை விழுந்த பாகத்தில் சில நிமிஷம் அழுத்தித் தேய்க்க வேண்டும். இப்படி ஒரு நாளைக்கு இரண்டு தடவையாகப் பத்துப் பதினைந்து நாள் செய்து வந்தால், வழுக்கை மறைந்து மயிர் ளரும்.

மூலம்: சௌபாக்கியா (தெலுங்கு), சென்னை.

தலை மயிர் சுருட்டையாவதற்கு: வெள்ளைப் பூண்டுத் தோலைச் சுட்டுச் சாம்பலாக்கித் தேங்காய் எண்ணெயில் கலந்து தினந் தோறும் தடவி வாருங்கள்.

உடம்பின் தோல் பளபளவென்று ஆவதற்கு: நாலு கோழி முட்டைகளை உடைத்து வெண் கருவை எடுத்துப் பன்னீரில் வேக வைக்க வேண்டும். அதோடு அரை அவுன்ஸ் படிக்காரம், அரை அவுன்ஸ் தித்திப்பு வாதுமை இரண்டையும் எண்ணெயில் கலந்து நன்றாகக் குழைத்துக்கொள்ள வேண்டும். இரவில் இதை லேசாக உடம்பில் தடவி, துணியைச் சுற்றிகொண்டு படுத்துக்கொள்ள வேண்டும். காலையில் எழுந்து தேய்த்துக் குளித்துவிட வேண்டும். இப்படிச் சில நாள் செய்து வந்தால், உடம்பு பளபளவென்று ஆகி விடும். மற்றொரு முறையும் உண்டு. சாம்பிராணிக் கட்டிகளை கிகார்ஸ் சாராயத்தில் கலந்து டிங்சர் செய்துகொள்ள வேண்டும். ஒரு டம்ளர் ஜலத்தில் இந்த டிங்சரில் பதினைந்து சொட்டைக் கலந்து உடம்பெல்லாம் தடவிக் கொண்டு, துணியால் துடைக்காமல் தானாகவே உலரும்படி விட வேண்டும். இப்படிச் செய்தாலும் உடம்பு பளபளவென்றாகிவிடும்.

தோல் மிருதுவாக இருப்பதற்கு: தர்பூஷணி, பரங்கி, சுரை, வெள்ளரி இவற்றின் விதைகளைச் சம அளவு எடுத்து இடித்துப் பொடி செய்து கொள்ள வேண்டும். இதோடு புதிய பாலேட்டைக் கலந்து விழுதாகச் செய்துகொள்ள வேண்டும். இந்த விழுதோடு கொஞ்சம் பச்சைப் பாலைக் கலந்து குழம்பாகச் செய்துகொள்ள வேண்டும். இதனுடன் கொஞ்சம் கஸ்தூரியும் எலுமிச்சம் பழ ரஸமும் கலந்து முகத்திலும் உடம்பிலும் தடவிக்கொண்டு இரவு முழுவதுமோ, முடியாவிட்டால் அரை மணி நேரமோ வைத்திருந்து கழுவி விடவேண்டும். சில நாள் இப்படிச் செய்துவந்தால், உடம்புத் தோல் பட்டுப் போல் மிருதுவாகிவிடும்.

முகத்தில் உள்ள சுருக்கம் நீங்க: மிர் (Mirrh) என்னும் சாம்பிராணியைப் பொடி செய்து கொண்டு, அடுப்பில் வாணலியை வைத்து அதில் போட வேண்டும். புகை வரும். தலையை நன்றாகப் போர்த்துக்கொண்டு இந்தப் புகையை முகத்துக்குப் பிடிக்க வேண்டும். தலைவலி உண்டானால், இந்த முறையை நிறுத்திவிட்டுக் கீழே சொல்லும் 'கோல்டு கிரீமை' உபயோகிக்கலாம். கோல்டு கிரீம்: 2 அவுன்ஸ் வெள்ளைத் தேன் மெழுகு, ½ அவுன்ஸ் ஸ்பெர்மாஸெடி (Spermaceti) இவற்றை ஒரு பைன்ட் ஆலிவ், தேங்காய், அல்லது நல்லெண்ணெயில் போட்டு நன்றாகக் கலந்து நெருப்பில் வைத்து உருக்கிக்கொண்டு, இஷ்டப்பட்ட 'ஸென்ட்'டைக் கொஞ்சம் கலந்துகொண்டு முகத்தில் தடவி வருக.

தலை மயிர் நரைக்காமல் இருக்க: 4 அவுன்ஸ் பன்றிக் கொழுப்பையும் ½ அவுன்ஸ் ஸ்பெர்மாஸெட்டி (Spermaceti)யையும் கலந்து உருக்கிக்கொண்டு, அதோடு ½ அவுன்ஸ் பிஸ்மத் ஆக்ஸைடைக் கலந்து வைத்துக் கொண்டு தலைக்குத் தடவி வருக.

தலை மயிருக்குப் பளபளப்பைக் கொடுக்கும் ஷாம்பூ: நாலு கோழி முட்டைகளை உடைத்து, வெண் கருவை மட்டும் எடுத்து நுரை

வரும்படி கடைந்து, தலையில் மயிர்க் கால்களில் படும்படி நன்ருகத் தேய்த்து அப்படியே காய விடுக. பிறகு ஸ்நானம் செய்து விட்டுப் பன்னீரைத் தெளித்துத் துடைத்துக் கொள்க.

பாலுண்ணிகளுக்கு (Corns): ஒரு ஸ்பூன் தாரோடு, ஒரு ஸ்பூன் வெல்லத் தூளையும் ஒரு ஸ்பூன் பொட்டிலுப்பையும் நன்ருகத் தூள் செய்து கலந்து கொள்க. மெல்லிசான தோல் ஒன்றில் இதைத் தடவி, வேண்டிய அளவு கத்தரித்துக்கொண்டு உண்ணியின் மேல் தடவிக் கொள்க.

பல்லில் காரை பிடித்தால்: உப்பையும் டார்ட்டார் கிரீமையும் சமமாக வறுத்துப் பொடி செய்துகொண்டு அதனுல் பல் தேய்க்கவேண்டும்.

பல் வலிக்கு: கந்தகத்தை மெத்தென்று பொடி செய்து வைத்துக் கொண்டு இரவில் பிரஷ்ஷால் பல் தேய்த்துக்கொள்க. இப்படி, அடிக்கடி செய்து வந்தால், பல்வலி பறந்து விடும்.

பித்த வெடிக்கு: ஆலம் பாலையாவது மாம்பிசினையாவது வெடிப்புக்குத் தடவி வெடிப்பில் வெயில் படச் செய்ய வேண்டும்.

காது வலிக்கு: முள்ளங்கி இலையின் ரஸம் 3 பாகமும், நல்லெண்ணெய் ஒரு பாகமும் கலந்து ஈரம் வற்றும் வரையில் காய்ச்சி எண்ணெயை எடுத்து வைத்துக் கொண்டு அடிக்கடி சில சொட்டுக்கள் காதில் விட்டு வந்தால், காது வலி தீரும். முருங்கை வேரைத் தட்டி ரஸத்தை எடுத்துக் காதில் பிழிந்தாலும் காது வலி தீரும்.

கைவண்டி ரகஸ்யம்

ருஷியத் தொழிற்சாலை ஒன்றில், வேலைநேரம் முடிந்ததும் ஒருநாள் மாலையில் ஒரு கைவண்டியைத் தள்ளிக்கொண்டு வெளியேறினுன் ஒரு தொழிலாளி. இந்த வண்டியில் என்ன இருக்கிறது என்று காவல்காரன் பரிசோதித்துப் பார்த்தான். சிறிது வைக்கோலைத் தவிர வேறென்றுமில்லை. "சரி; போ" என்று தொழிலாளியைக் காவல்காரன் விட்டு விட்டான்.

ஆனுல், அடுத்த நாளும் தொழிலாளி இதேமாதிரி செய்தான். காவல்காரன் அன்றும் பரிசோதித்து வண்டியில் ஒன்றுமில்லை என்று கண்டு விட்டுவிட்டான்.

மூன்ரும் நாளும் இப்படியே நடந்தது. ஒரு மாதம் வரைக்கும் இவ்விதமே நடந்துகொண்டிருந்தது. காவல்காரனுக்கு இதன் ரகஸ்யம் என்னவென்றே புரியவில்லை. தொழிலாளியைத் தனியே அழைத்தான். "இதோ பார். உண்மையை என்னிடம் சொல். உன் செயல் எனக்குப் புரியாத ஆச்சரியமாக இருக்கிறது. உன்னை நான் சத்தியமாய்க் காட்டிக் கொடுக்கவில்லை. எனக்கு மாத்திரம் சொல்: நீ தினந்தோறும் என்ன திருடிச் செல்கிருய்?" என்று கேட்டான்.

"கைவண்டிகளை!" என்ருன் தொழிலாளி. —எச். எச்.

நடமாடும் கண் வைத்தியசாலை

★

'பல் போனால் சொல் போச்சு' என்பார்கள். 'கண் போனால் வாழ்வே போச்சு' என்று சொல்லிவிடலாம். பார்வையிழந்த வாழ்வு அவ்வளவு பரிதாபகரமானது. ஆனால், அசட்டுத்தனம், அறியாமை இவற்றினால் பார்வையிழப்பவர் பலர். 'கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம்' என்பது போல், காலங் கடந்து சிகிச்சை பெறுவதால், பயனற்றுத் துன்புறுவோரும் உண்டு. இவைகளுக்கு மாற்றாக, உத்தரப் பிரதேசத்தில் நடக்கிறது இந்த அரிய முயற்சி.



கண் பார்வை இல்லாதவர்களை நாம் பார்க்கும்போது பரிதாபப்படுகிறோம். பார்வை இல்லாதிருப்பது பெருங் குறைதான். பற்பல காரணங்களால் மக்கள் பார்வை இழக்கிறார்கள். பார்வை கெடாமல் பாதுகாக்கக்கூடிய சில முறைகள் இருக்கின்றன. இந்தியாவில் அந்த முறைகளைக் கைக்கொண்டால், கண் தெரியாதவர்களின் தொகையைக் குறைக்க முடியும்.

இது சம்பந்தமாக உத்தரப் பிரதேசத்தில் சிலர் ஒரு பெரிய முயற்சி தொடங்கியிருக்கிறார்கள். அதனால் பெரும் பயன் விளைந்து வருகிறது. பார்வைக் குறைவைப் போக்கவும், பார்வை இழப்பதைத் தடுக்கவும் அவர்கள் பாடுபட்டு வருகிறார்கள். மத்திய அரசாங்கத்தின் துணையையாவது ராஜ்ய அரசாங்கத்தின் உதவியையாவது பெறாமல், எந்த அரசர்ங்கத்தின் அதிகாரத்துக்கும் உட்படாமல், அந்த வேலை நடைபெறுகிறது.

அதைச் செய்வோர் ஒரு புது முறையைக் கையாண்டு நாட்டுப் புறங்களில் வேலை செய்கிறார்கள். ஒரு வருஷத்தில் 1,40,000 கிராமவாசிகளுக்கு உதவி செய்கிறார்கள்.

அவர்கள் கிராமங்களில் வைத்தியசாலைகள் அமைக்கிறார்கள். அந்த வைத்தியசாலையைச் செங்கல், சாந்து இவற்றால் கட்டுவதில்லை. அவர்களுடைய வைத்தியசாலை கூடாரமே. அத்தகைய நான்கு வைத்தியசாலைகள் இருக்கின்றன. ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் வைத்தியர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு உதவி செய்வோர் இருக்கிறார்கள்; வைத்தியக் கருவிகள் இருக்கின்றன. ஒவ்வொரு கூடார வைத்தியசாலையிலும் 100 நோயாளிகள் தங்கிச் சிகிச்சை பெறலாம். இந்த வேலை உத்தரப் பிரதேசத்து மேற்குப் பகுதியில் அக்டோபர் முதல் ஏப்ரல் வரையில் நடைபெறுகிறது. இந்தக் கூடார வைத்தியசாலைகளுக்குத் தலைமை இடம் அலீகட்டிலுள்ள காந்தி கண் வைத்தியசாலையே. இந்த வேலையை நடத்தும் பொறுப்பை அந்தக் கண்வைத்தியசாலை மேற்கொண்டிருக்கிறது.

ஒவ்வொரு பிரதேசத்திலுமுள்ள மக்கள் இந்த முயற்சிக்கு உதவியாக இருக்கிறார்கள். ஒவ்வொரு ஜில்லாவிலும் கண் தெரியாதவர்களுக்கு உதவி செய்வதற்குச் சங்கம் ஏற்படுத்தியிருக்கிறார்கள். கண்ணைப்பற்றிய நோயுள்ளவர்கள் இலவசமாக வைத்திய உதவி பெறுவதற்குத் தொண்டர்கள் சகாயம் செய்கிறார்கள். ஊர் ஊராய்ப் போகும் வைத்தியசாலைகள் தங்கள் வேலையைச் செய்வதற்குப் பொதுமக்கள் பல வகையிலும் உதவி செய்கிறார்கள்.

கந்த்லா என்னும் ஊரில் அந்த மாதிரி வைத்தியசாலைகளுள் ஒன்று சமீபத்தில் சேவை செய்தது. அந்த இடத்தில் வேலை நடக்க வேண்டுமென்று அலீகட் காந்தி வைத்தியசாலை தீர்மானம் செய்தது. எனவே, ஒரு வைத்தியசாலை அங்கே வேலை செய்தது.

வேலை தொடங்குவதற்குச் சில வாரங்களுக்கு முன்பே ஆரம்ப வேலைகள் நடைபெறும். கந்த்லாவில் கல்லூரி இருக்கும் இடத்தில் இதற்கு ஏற்பாடுகள் செய்தார்கள். ரண சிகிச்சைக் கூடாரத்துக்குக் கிராமவாசிகள் தளம் பாவினார்கள். சிலர் நோயாளிகளுக்கு உணவு கொடுப்பதற்கு இணங்கினார்கள். அந்தக் கிராமத்திலுள்ள சாரணச் சிறுவர்கள், நோயாளிகளைக் கவனிப்பதற்கு முன் வந்தார்கள்.

ஜனவரி 23-ஆம் தேதி கந்த்லாவுக்கு வைத்தியசாலை வந்து சேர்ந்து வேலை தொடங்கியது. ஒரே காலத்தில் 100 பேர் தங்கிச் சிகிச்சை பெறுவதற்கு வசதியான ஏற்பாடுகள் செய்தார்கள். கிராமவாசிகள் நன்றாய்த் தளம்போட்டுக் கொடுத்த இடத்தில் ரணசிகிச்சை நடைபெற்றது.

அமெரிக்கன் ரிப்போர்ட்டர் (தமிழ்: 6-3-'53), சென்னை.

வைத்தியசாலையில் டாக்டர் ஒருவரும், மூன்று கம்பவுண்டர்களும், நான்கு வார்ட் ஆட்களும் வேலை செய்தார்கள். கண்ணைப் பற்றிய நோய்களை ஆராய்ந்து சிலருக்கு ரண சிகிச்சை செய்ய வேண்டுமென்று தீர்மானித்தவுடன், ரண சிகிச்சை செய்வதற்கு அலீகட் காந்தி கண் வைத்தியசாலையிலிருந்து நிபுணர் ஒருவர் வந்தார். அலீகட் வைத்தியசாலையில் கண் வைத்தியத்தில் விசேஷப்பயிற்சி பெறும் சில வைத்திய மாணவர்களும் அவரோடு வந்தார்கள். கண் வைத்தியத்தில் அலீகட் வைத்தியசாலை மிகவும் நுட்பமான பயிற்சி அளிக்கிறது. அங்கே பயிற்சி பெறும் மாணவர் மூன்று வாரம் ஊர் ஊராய்ப் போகும் கண் வைத்தியசாலைகளுள் ஒன்றில் வேலை செய்து பழகவேண்டும்.

கந்த்லாவில் அந்த வைத்தியசாலை மூன்று வாரம் வேலை செய்து பிப்ரவரி 14-ஆம் தேதி வேலையை முடித்தது. கண்ணில் பூ விழுந்தோ மற்றக் காரணத்தாலோ பார்வை இழந்திருந்த 600 பேர் பார்வை பெற்றார்கள்; வேறு 400 பேர் பிற சிகிச்சைகள் பெற்றார்கள்.

நான்கு வைத்தியசாலைகளுக்குள் ஒவ்வொன்றும் இப்படியே வேலை செய்து வருகிறது. உத்தரப் பிரதேசத்திலுள்ள 18 ஜில்லாக்களிலும் வேலை நடைபெற்றிருக்கிறது. மே மாதம் 1-ஆம் தேதிக்குள் ரண சிகிச்சையின் மூலம் 9000 பேர் பார்வை பெற்றுவிடுவார்கள். 1,30,000 பேருக்குத் தடுப்பு (ப்ரிவெண்டிவ்) மருந்துகள் கொடுத்திருக்கிறார்கள். அந்த மருந்துகளைக் கொடுக்காவிட்டால் அவர்கள் பார்வை இழக்க நேரும்.

இந்த வைத்தியசாலைகள் பணம் ஒன்றும் வாங்காமல் இலவசமாக வைத்தியம் செய்கின்றன. அலீகட் வைத்தியசாலையின் தலைமை வைத்தியர் டாக்டர் மோகன்லால் இந்த வைத்தியசாலைத் திட்டத்தின் தலைவர். கிராமவாசிகளுக்குக் கண்ணைப் பாதுகாக்கும் முறைகளைச் சொல்லிக் கொடுப்பதும், ரண சிகிச்சையால் பெறக்கூடிய உதவியைத் தெரிவிப்பதும் இந்த முயற்சியின் நோக்கம் என்று அவர் சொல்கிறார்.

18 ஜில்லாக்களிலுமிருந்து இந்தத் திட்டத்துக்குப் பொருளாதார உதவி கிடைக்கிறது. வெளியாரிடமிருந்து வேறு நன்கொடைகளும் கிடைக்கின்றன.

இந்த இயக்கத்தின் தலைவரான டாக்டர் மோகன்லால் சென்னையிலுள்ள கண் வைத்தியசாலையிலும் வியன்னாவிலும் பயிற்சி பெற்றவர். நியூயார்க், இங்கிலாந்து, ஐரோப்பா, எகிப்து இவைகளில் விசேஷப் பயிற்சி பெற்றிருக்கிறார்.

கண்ணைப் பற்றிய நோய்கள் வந்தபின் அவற்றை ரண சிகிச்சை, மருந்து இவைகளின் மூலம் தீர்ப்பது மட்டுமே வைத்தியசாலைகள் செய்யவேண்டிய வேலை அல்ல. அங்கங்கே கண்ணைச் சோதித்துப் பார்ப்பதற்கும் ஏற்பாடுகள் செய்ய வேண்டும்; கண்ணைப்பற்றிய நோய்கள் வராதபடி தடுக்கவேண்டும்; வந்துவிட்டாலும், அவற்றால் பார்வை கெடாதபடி பாதுகாக்கச் சிகிச்சை செய்யவேண்டும் – இதுவே டாக்டர் மோகன்லாலின் கருத்து.

புகழ் பெற்றவரின் வாழ்க்கையே உலக சரித்திரத்தை ஆட்டி வைக்கிறது. அவர்களின் வரலாறு தெரிய வேண்டாமா?

ஜீவிய சரித்திர பலன்

'பி'

மனிதனுக்கு மனித இயல்பில் தான் முக்கியமாக அக்கறை இருக்கும். உலகத்தில் மற்ற மனிதர்களைப்பற்றி அறிய ஆவல் கொள்வதுதான் இயற்கை. பல பேர் என்னிடம் அவ்வப்போது வந்து பல பிரமுகர்களைப்பற்றி விசாரிப்பதுண்டு.

டில்லிவாசி ஒருவர் ஒருசமயம், "மந்திரி கோபாலசாமி ஐயங்கார் தென்னிந்தியாவைச் சேர்ந்தவராச்சே; உமக்குத் தெரிந்திருக்குமே அவரைப்பற்றி? மந்திரியாவதற்கு முன்னே அவர் என்னவாக இருந்தார்?" என்று கேட்டார். "ஸ்ரீமான் . ஐயங்கார் பழைய சென்னை மாகாண அரசாங்கத்தில் உத்தியோகம் பார்த்தவர். அப்போது அவருக்கு நல்ல பெயர் உண்டு. அந்த வேலையிலிருந்து 'ரிடயர்' ஆன பிறகு காஷ்மீர் திவான் பதவி ஏற்றார்" என்றேன். இன்னும் அவரைப்பற்றி எவ்வளவோ விஷயம் சொல்வேன் என்று அந்த நண்பர் எதிர்பார்த்தார். அப்போதுதான் எனக்கு ஐயங்காரைப்பற்றி விவரமாகத் தெரிந்திருக்கக் கூடாதா என்று பட்டது.

இன்னொரு சமயம் திராவிடக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் ஜஸ்டிஸ் கட்சியைத் தொடங்கிய டாக்டர் டி. எம். நாயரைப்பற்றி விசாரித்தார். நான் சுருக்கமாக, "அவர் கண், மூக்கு, தொண்டை சம்பந்தமான நோய்களைக் குணப்படுத்துவதில் சிறந்த வைத்தியர்; முதலில் லண்டனிலும் பின்னால் சென்னையிலும் 'பிராக்டிஸ்' செய்தார்" என்று சொன்னேன். இப்படி நம் பிரமுகர்களில் பல பேரைப்பற்றி நமக்கு எவ்வளவோ விஷயம் தெரியாமல் இருக்கிறது; இது சர்வசகஜம். அபாரமான சட்ட அறிவு படைத்தவர் தேஜ்பகதூர் சப்ரு; ரவி வர்மா பிரபல ஓவியர். இவர்களைப்பற்றி நல்லதாக வாழ்க்கை வரலாறு ஒன்றாவது இருக்கிறதா என்றால், அதுதான் இல்லை. சமீபத்தில் வாழ்ந்த நம் தலைவர்களைப்பற்றியும் அப்படி ஒன்றும் பிரமாதமாக யாரும் எழுதியிருப்பதாகத் தெரியவில்லை. தென்னாட்டில் ஸர் வி. பாஷ்யம் ஐயங்கார், ஜஸ்டிஸ் மணி ஐயர், ஸர் சங்கரன் நாயர், ஜி. சுப்பிரமணிய ஐயர், கஸ்தூரிரங்க ஐயங்கார் போன்ற அறிவாளிகளும் பிரபலஸ்தர்களும் தோன்றியிருக்கிறார்கள். இவர்களைப்பற்றிய விவரம் எங்கே கிடைக்கும் என்றுதான் தெரியவில்லை. சரியான தகவல் இராத குறையால், இந்தக் கால இளைஞருக்கும் வருங்கால இளைஞருக்கும்

மூலம்: பம்பாய்க் கிரானிக்கிள் வீக்லி (ஆங்கிலம்: 22-2-'58), பம்பாய்.

அந்தப் பிரமுகர்களைப்பற்றி எதாவது எழுதினால் ரசிக்காது.

ஆனால் ஸ்ரீ ஜி. ஏ. நடேசன் அவர்கள் அநேகம் பிரபலஸ்தர்களைப்பற்றிய சுருக்கமான வரலாறுகளைத் தொகுத்து வெளியிட்டிருப்பது ஓரளவுக்கு நமக்குத் திருப்தியே. "பெரியோர்களின் வரலாறுதான் உலக சரித்திரமாகி விடுகிறது" என்று கார்லைல் என்ற ஆங்கில அறிஞர் சொல்லியிருக்கிறார்.

பிரபலஸ்தர்களின் சரியான வாழ்க்கை வரலாறுகள் இராததால், நம் தேச சரித்திரமே அரைகுறையாக இருக்கிறதென்றுதான் சொல்லவேண்டும். மேல்நாட்டில் இந்த உண்மையை எப்போதோ உணர்ந்துவிட்டார்கள். அங்கே சரித்திர ஆசிரியர்களுக்கு உதவியாக இருப்பவை தனிப்பட்டவர்கள் எழுதிய ஜீவிய சரிதங்களே. இப்போது பம்பாயில் காந்தியடிகளைப்பற்றிய வரலாற்றைப் பல பாகங்களாக வெளியிட்டு வருகிறார்கள். இதை எல்லாரும் பாராட்ட வேண்டியதுதான்.

ஐரோப்பாவில் புளூடார்க் என்ற பழைய கிரேக்க அறிவாளியின் காலம்முதல் சமீபத்தில் எமில் லட்விக் என்பவரின் காலம்வரை வாழ்க்கை வரலாறுகளைத்தான் முக்கியமாகக் கருதி வருகிறார்கள். "பெரியோர்களின் வரலாறுகள் தெரியாமல் இருந்தால் நாம் சிறு பிள்ளைகளுக்குச் சமம் என்றுதான் சொல்லவேண்டும்" என்று புளூடார்க் ஓர் இடத்தில் சொல்லியிருக்கிறார்.

அதுமுதல், தொடர்ந்து ஐரோப்பாவிலும் பின்னால் அமெரிக்காவிலும் பெரியோர்களின் வரலாறுகளை எழுதி வந்திருக்கிறார்கள். இன்றைய உலக இலக்கியத்திலேயே இந்தமாதிரி வரலாறுதான் நாட்டை உருவாக்குவதில் ஒரு முக்கிய அம்சமாக விளங்குகிறது. நாமும் இதை உணரவேண்டியது அவசியமாகும்.

இன்று அரசியல் துறையில் முன்னணியில் விளங்கும் பண்டித நேரு நாற்பத்தைந்து வயசு ஆவதற்கு முன்பே தம் சுயசரிதத்தை எழுதினார். இளவயதில் அவர் இந்திய அரசியலில் ஈடுபட்டதால், அந்தக் காலத்துச் சரித்திரமும் நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. அந்த நூல உலகில் பல பாஷைகளில் மொழிபெயர்த்திருக்கிறார்கள்; நன்றாகவும் விற்பனையாகிறது. காந்தியடிகளின் சுயசரிதமான, 'சத்திய சோதனை' நன்றாக விற்றாலும் ஜவாஹரின் சுயசரிதத்துக்கு அடுத்தபடி என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். இதற்குக் காரணம், இந்தியாவுக்கு வெளியே ஆங்கிலம் பேசும் மக்களுக்குக் கவர்ச்சி ஏற்படக்கூடிய நடையில் இலக்கிய மெருகுடன் அவர் எழுதாததுதான். ஆயினும் தீனபந்து ஆண்ட்ரூஸ் அதைச் சரிவரப் பதிப்பித்து, "மகாத்மா காந்தி: அவர் கருத்துக்கள்" என்று பெயரையும் மாற்றி, லண்டன் பிரசுரகர்த்தரைக் கொண்டு வெளியிட்டதும், உலகமே அதைப் பாராட்டியது.

இவைகளுக்கு முன் ஸர் சுரேந்திரநாத் பானர்ஜி எழுதிய சுயசரிதமான 'ஒரு நாடு தோன்றிய வரலாறு' என்ற நூல் பிரபலமாக இருந்தது. இந்த மூன்றையும் தவிர அப்படி நன்றாக விற்பனையான சுயசரிதம் எதுவும் இந்த நூற்றாண்டில் இந்தியாவில் வெளியானதாக எனக்குத்

தெரியவில்லை. ஸி. ராஜகோபாலாசாரியார் சுயசரிதை எழுதினால் உலகத்திலே பிரபலமாக விளங்கும் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. அதேமாதிரி பாபு ராஜேந்திர பிரசாத் இந்தியில் எழுதியுள்ள 'ஆத்மகதை'யை இப்போதைக்குத் தக்கபடி பதிப்பித்து மொழி பெயர்த்து வெளியிடலாம்.

நாலைந்து வருஷங்களுக்கு முன் ராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றை எழுதினேன். அதிலுள்ள குறைகளை அவரே தெரிந்துகொண்டு, "இதற்குக் காரணம் முழுத் தகவலும் கிடைக்க உங்களுக்குச் சந்தர்ப்பம் இல்லை" என்று சொன்னார். அப்போது அவர் கவர்னர்-ஜெனரல் பதவி ஏற்ற சமயம். அநேகம் பேருக்கு அவரைப்பற்றித் தெரிந்துகொள்ள வேண்டுமென்று ஆவல். வேறு யாரும் எழுத முன் வராததால், எனக்குத் தெரிந்த பிரசுரகர்த்தர் ஒருவர் என்னை வற்புறுத்தவே ஏதோ எழுதினேன். லக்னோவில் வெளியாகும் 'நேஷனல் ஹெரால்டு' என்ற பத்திரிகையில் அதைப்பற்றி விமரிசனம் எழுதியவர், என்னைப் பாராட்டியிருந்தாலும், எனக்கென்னவோ நான் எழுதியது திருப்தியாகப் படவில்லை. பின்னால் லண்டன் பிரசுரகர்த்தர் ஒருவர் இதை இங்கிலாந்தில் வெளியிட அநுமதி கேட்டபோது நான், 'இது அரைகுறையான வரலாறு' என்று சொல்லிக் கை விரித்துவிட்டேன். பிரபல தென்னிந்தியப் பிரமுகரான ராஜாஜியின் வரலாற்றைத் தக்க விதத்தில் எழுதி வெளியிட வாய்ப்பு எனக்கு ஏற்படாதது பெருங்குறைதான்.

அரசியல் துறையில் பிரசித்தி பெற்று விளங்கிய ஸர் பஸ்லி ஹுஸேன் என்பவருடைய வாழ்க்கை வரலாற்றுக்கு முகவுரை எழுதியிருக்கிறார் ராஜாஜி. அதில், "நம் நாட்டுப் பெரியோர்களின் வரலாறுபற்றிய அரிய தகவல் யாரிடத்தில் இருந்தாலும் சரி, நாட்டின் நலனைக் கருதி அதை வெளியிட வேண்டியது அவசியம்" என்று குறிப்பிட்டிருக்கிறார். அந்த முறையில் தான் நான் உலகில் தோன்றியுள்ள பல பெரியோர்களின் வரலாறுகளையும் எழுதினேன். ஆயினும் ராஜாஜியே இன்னொரு சமயத்தில், "வாழ்க்கை வரலாறுகளில் சின்ன விஷயங்கள் பிரமாதமாகிப் பெரிய விஷயங்கள் முக்கியமில்லாமல் போய் விடுகின்றன. ஆகவே, நம் முன்னோர்கள் அவைகளை எழுதாமல் விட்டது நல்லதே" என்று சொல்லியிருக்கிறார். ஆனால் நம் இலக்கியமே பலருடைய வாழ்க்கை வரலாறு தானே? பின்னே ராமாயணமும் மகாபாரதமும் இவைபோன்ற பழைய நூல்களும் என்னவாம்? அவைகளைப் படிக்கும்போது நமக்கே ஒரு பெருமை ஏற்படவில்லையா?

முன் காலத்தில் தூய்மையாக வாழ்ந்து அரிய செயல்களைச் செய்த பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றை எழுதி வந்தது இயல்பே; எந்த யுகத்திலும் அவர்கள் பெயர் நிலைத்திருக்கும்படி செய்து விட்டோம். அது சரியான காரியந்தான். ஆனால் இப்போது ஏன் அப்படிச் செய்வதில்லை? பட்சபாதமில்லாமல் எழுத முடியாதிருப்பது தான் காரணமா? இல்லாவிட்டால், இந்தக் காலத்துப் பிரமுகர்கள் நேர்மையுடன் வாழவில்லை என்று சொல்வதா? மனிதன்

என்றால் குணமும் இருக்கும், குறையும் இருக்கும். ஆகவே, சரித்திர ஆசிரியனுடைய நோக்கில் கவனித்து இரண்டையும் எழுதித் தான் ஆகவேண்டும்.

என்னவோபோல் இருக்குமே என்று தோன்றும் பட்சத்தில் பழைய ரீதியிலேயே எழுதினால் போகிறது. ஆகஸ்டைன் என்ற மகான் தாம் வாழ்வில் இழைத்த குற்றங்குறைகளை எழுதவில்லையா? மனிதன் என்றால் தவறு செய்வது இயல்புதானே? பிறந்ததுமுதல் சாகும்வரையில் மனிதன் ஒரேவிதமாகவா இருக்கிறான்? அப்படி இருக்கும்போது, குணங்களோடு குறைகளையும் எழுதத் தயங்குவானேன்?

இந்தியாவில் இதுவரை வெளி வந்துள்ள வாழ்க்கை வரலாறுகள் பெரும்பாலும் ஒரு விஷயத்தைக் குறித்த துண்டு துண்டான தகவல்கள் என்றுதான் சொல்லவேண்டும். ஆகவே, அவைகளைப் பிரமாதம் என்று பாராட்டுவதற்கில்லை. அதோடு நியாயமோ வரையறையோ இல்லாமல், ஒரேயடியாகப் புகழ்ந்தோ அடியோடு மட்டந் தட்டியோ எழுதிவிடுகிறார்கள்; தகுந்த முறையில் நல்லதாக வாழ்க்கை வரலாறு ஒன்று எழுதுவதென்றால், பல மாதங்கள் பிடிக்கும்; சற்றுச் சிரமமும் எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கும். இந்தக் காலத்து வாசகர்களுக்கு ஏற்றபடி அதில் பல சம்பவங்களை வேறு குறிப்பிட்டாக வேண்டும்; இது கஷ்டமான வேலைதான். அமெரிக்கத் தத்துவஞானியான சானிங் என்பவர், "ஒரு மனிதனைப்பற்றி ஒரே ஒரு சம்பவம் இருந்தாலும் போதும். அதுவே ஒரு வாழ்க்கை வரலாற்றுக்குச் சமானம்" என்று சொல்லியிருக்கிறார். ஆகவே, கூடியவரைக்கும் பல சம்பவங்கள் இருக்கும்படி பார்க்க வேண்டும். அப்போதுதான் அந்த மனிதரின் குணசித்திரம் தெளிவாக இருக்கும். அவருடைய பிரசங்கங்களைக் கூர்ந்து படிக்க வேண்டும். பல நண்பர்களுக்கு அவர் எழுதிய கடிதங்களைச் சேகரிக்கவேண்டும். அவருடன் பழகியவர்களையெல்லாம் போய்ப் பார்த்து விஷயங்களை விசாரித்தறிந்து கொள்ளவேண்டும். முக்கியமாக, நகைச்சுவை ததும்ப எழுதத் தெரிய வேண்டும். இவைகளையெல்லாம் ஆய்ந்தோய்ந்து பார்க்கும்போது, நல்லதாக ஒரு ஜீவிய சரிதம் எழுத இரண்டு அல்லது மூன்று வருஷம் ஆனாலும், ஒன்றும் முழுகிவிடாது. ஒன்றோடொன்று சம்பந்தம் இராத பல துணுக்கு விவரங்களை இணைத்து அவசரம் அவசரமாக எழுதுவதை விட, இது மிகவும் சிறந்து விளங்கும்.

அதனால்தான், "பெரியோர் வாழ்ந்த விதத்தைக் கொண்டு நாமும் பல விஷயங்களை அறிந்து முன்னேறலாம். அதனால் காலமென்னும் பெருமணல் வெளியில் நம் அடிச்சுவடு தங்கி நிற்கும்" என்று லாங்ஃபெல்லோ என்ற அமெரிக்கக் கவி பாடியிருக்கிறார்.

காலை நெருக்கும் ஜோடு

காலை நெருக்கும் ஜோடு உலகத்திலேயே நமக்குப் பெரிய பாக்கியமாகும். அது நம்முடைய மற்றக் கவலைகளையெல்லாம் மறக்கச் செய்கிறது.

—ஜே. பி.

பாபுராவ் பதில் சொல்லுகிறார்

கேட்பவரின் கேள்விகளுக்கு, 'ஃபிலிமிண்டியா' ஆசிரியர் பாபுராவ் அளிக்கும் பதில்கள் பிரசித்தம். இவைகளில் விறுவிறுப்பும் கேலியும் நிறைந்திருக்கும். இவை 'ஃபில்மிண்டியா' பிப்ரவரி '53 இதழில் வெளியானவை.

கேள்வி: கொரியா யுத்தம் எப்படி முடியும்?

பதில்: டாக்டர் ஸிங்மன் ரீ ஜப்பானுக்குப் போய்க் குடியேறுவார்.

* * *

கே: உங்கள் நண்பரைப் புதைத்திருக்கும் இடத்துக்கு நீங்கள் போனால் எப்படி இருக்கும்?

ப: புதைத்த இடத்தில் நண்பர்கள் இருப்பதில்லை. புழுக்களே இருக்கும்.

* * *

கே: நீங்கள் லட்சுமியை வணங்குவதுண்டா?

ப: வெறும் வணக்கத்தால் பிரயோஜனம் இல்லை. அவளை நினைந்து நெற்றி வேர்வை நிலத்தில் விழப் பாடுபட வேண்டும்.

* * *

கே: எல்லாத் துறைகளிலும் போதுமான அளவுக்கு வளம் பெற்ற நாடு எது?

ப: ஸ்விட்ஜர்லாந்து. அது இரண்டு மகாயுத்தங்களிலும் லாபத்தை அடைந்தது.

* * *

கே: ராஜ கட்டத்தில் அத்தனை மரங்களை நடுகிறார்களே; எதற்காக?

ப: காந்தியடிகளின் சமாதி அவருடைய வாரிசுகளைப் பார்க்காமல் இருப்பதற்காக. காட்டை வளர்த்து அவர் ஞாபகத்தையே அமிழ்த்திவிடப் பார்க்கிறார்கள்.

கே: எப்போது கடவுள் செத்துப் போவார்?

ப: மனிதனுக்குப் பிறகு.

* * *

கே: அமெரிக்காவில் தீண்டாமை இருக்கிறதா?

ப: பணத்தையும் நிறத்தையும் அடிப்படையாகக் கொண்ட பயங்கரமான ஜாதித் துவேஷம் அங்கே இருக்கிறது.

* * *

கே: படிக்காதவர்கள் காதலுக்கும் படித்தவர்கள் காதலுக்கும் என்ன வித்தியாசம்?

ப: படிக்காதவர்கள் காண்கிறார்கள்; களிக்கிறார்கள். படித்தவர்களோ கண்டதும் கவி எழுதுகிறார்கள்.

* * *

கே: உலகத்தில் பெரிய ஆசாமிகளெல்லாம் கொலையுண்டு இறக்கிறார்களே; ஏன்?

ப: அரசியல் தலைவர்கள் நெடுங்காலம் வாழ்ந்து நாட்டின் வளர்ச்சியைத் தடைப்படுத்துகிறார்கள்; அதனால்தான்.





கே: இஸ்ரேலின் ஜனாதிபதிப் பதவியைப் பேராசிரியர் ஐன்ஸ்டீன் மறுத்ததைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: புத்திசாலியான யூதர்! பதவி சிந்தனையைக் கெடுத்து விடும். ஐன்ஸ்டீன் சிந்தனா சக்தியை விரும்புகிறவர்.

* * *

கே: சர்தார் படேல் நமக்கு என்ன கற்றுக்கொடுத்திருக்கிறார்?

ப: நம் நாட்டின் புண்களையெல்லாம் போலீஸ் நடவடிக்கைகளால் போக்கிவிடலாம் என்பதை.

* * *

கே: ஒரு நாய் தன் எஜமானனுடைய குழந்தையைப் பாம்பினின்றும் காப்பாற்றப் போய்த் தன் உயிரையே விட்டுவிட்டது.

ப: ஒரு மனிதன் அப்படிச் செய்ததாக எப்போதாவது கேட்டிருக்கிறீர்களா?

* * *

கே: பனித்துளியில் என்ன காண்கிறீர்கள்?

ப: உலகை மூடிய இருளைக் கண்டு அமரருலகம் விட்ட கண்ணீர்த் துளி அது.

* * *

கே: இந்தியாவைக் காட்டிலும் வறிய நாடு எது?

ப: துருக்கியைத் தவிர மற்ற இஸ்லாமிய நாடுகள் யாவும்.

கே: தென்னிந்தியர்கள் கடிப்பார்களா என்ன?

ப: அதெல்லாம் இல்லை. அரிசி தின்னும் பல் கடிக்காது; கோபத்தில் சீறும்.

* * *

கே: நம்பிக்கையும் பகுத்தறிவும் ஒன்றுபடுமா?

ப: நம்பிக்கை குருடாக இருக்க வேண்டும் என்பதில்லை; பகுத்தறிவு அவ்வளவு தூரம் சந்தேகப் பிராணியாக இருக்கவேண்டும் என்பதும் இல்லை. கடவுள் விஷயத்தில் இந்த இரண்டும் ஒன்றுபடுவதில்லையா?

* * *

கே: நேரு குண்டுக்குப் பயப்படுவாரா?

ப: இல்லை. அவருக்குத் தம் உயிரைப்பற்றிப் பயம் இல்லை. யுத்தத்தைக் கண்டுதான் அவர் அஞ்சுகிறார்.

* * *

கே: கொஞ்சம் முன் கோபம் உடைய பெண்மணியை உங்களுக்குப் பிடிக்குமா?

ப: மிகவும் கொஞ்சம்! அவள் அழகை அதிகப்படுத்துமளவுக்கு மாத்திரம் இருக்க வேண்டும்.

* * *

கே: அயல் நாட்டிலிருந்து வருகிறவர்கள் எல்லாரும் ஏன் ராஜ கட்டத்துக்குப் போகிறார்கள்?

ப: சொர்க்கத்துக்குப் போக அநுமதிச் சீட்டு வாங்குவதற்காக. அந்த இலாகா காந்தியடிகளிடம் இருக்கிறது.

உலகில் புதிய இயக்கம்

ஜான் கால்ஃபீல்டு

இந்த எம். ஆர். ஏ. (மாரல் ரீ-ஆர்மமெண்ட்) என்று ஒரு கோஷ்டியார் கிளம்பியிருக்கிறார்களே, இவர்கள் யார்? என்ன செய்கிறார்கள்?

டாக்டர் ஃப்ராங்க் புச்மன்

சென்ற மூன்றுமாத காலமாக டாக்டர் ஃப்ராங்க் புச்மன் என்பவர், பல நாடுகளைச் சேர்ந்த சுமார் இருநூறு பேரோடு இந்தியாவில் சுற்றுப் பிரயாணம் செய்து வருகிறார். அவர்களில் பலர் வாழ்க்கையில் வெவ்வேறு துறைகளில் பெயர் எடுத்தவர்கள். பம்பாய், புது டில்லி, லக்னோ, ஹைதராபாது, சென்னை இங்கெல்லாம் நாலு நாடகங்களை அவர்கள் நடத்திக் காட்டினார்கள். சர்க்காரிலும், தொழில் துறையிலும், வியாபாரத்திலும் ஈடுபட்டுள்ள பதினெட்டு இந்தியப் பிரமுகர்களின் அழைப்பின் பேரில் அவர்கள் இங்கே வந்திருக்கிறார்கள். அவர்களில் வாலிபர் முதல் வயதானவர்கள் வரை எல்லா வகையாரும் இருக்கிறார்கள். (நாடக மேடைக்குரிய மூட்டை முடிச்சு, சாமான்களுடன் அவர்களெல்லாரும் எப்படித்தான் ஊர் ஊராய்ப் பிரயாணம் செய்கிறார்களோ, ஆச்சரியமாகத்தான் இருக்கிறது!) அவர்கள் கடைப்பிடிக்கும் எம். ஆர். ஏ. (மாரல் ரீ-ஆர்மமெண்ட்) என்ற தார்மிக வாழ்வு முறையைப் பற்றிக் கீழ்க்கண்ட கேள்வி பதில்களின் மூலம் பல விவரங்களை நாம் நன்றாகத் தெரிந்துகொள்ள முடியும்.

காப்பிரைட்: இண்டியன் ரெவ்யூ (ஆங்கிலம்: பிப்ரவரி, '53), சென்னை.

1. தார்மிக மறுமலர்ச்சி ஏன், எப்போது, எப்படித்தோடங்கியது?

இந்த நூற்றாண்டின் முதல் பகுதியில் தொடங்கியது. வாழ்க்கையில் மாறுதல் தேவை என்ற ஒரு சந்தர்ப்பத்தில் இது ஏற்பட்டது. கொள்கை வேறுபாடு, கட்சிச் சச்சரவு, ஒழுக்கக் கேடு இவைகளைப் போக்கி மனித சமூகம் முன்னேறவே தார்மிக மறுமலர்ச்சி தோன்றியது. சீர்திருத்தம் பற்றிப் பேசி அலுத்துப்போன ஃப்ராங்க் புச்மன் தாமே ஓர் ஒழுங்கான வாழ்க்கை முறையை வகுத்துக்கொண்டு அதன்படி வாழலானார். பதின்மூன்று ஆண்டுகள் இந்தியா, சீனா முதலிய இடங்களில் சுற்றுப்பிரயாணம் செய்து பல மக்களோடு பழகி அவர்களின் முக்கியமான தேவைகளை அநுபவ மூலம் அறிந்துகொண்டார். பிறகு ஆக்ஸ்ஃபோர்டில் சிலரைத் தேர்ந்தெடுத்து இந்த வாழ்க்கை முறையில் அவர்களுக்குப் பயிற்சி அளித்தார். பின்னால் உலகில் சுற்றுப்பிரயாணம் செய்யும்போது அவர்கள் இவருடன் வந்தார்கள்.

1938-இல் லண்டனில் ஈஸ்ட் எண்டு என்ற இடத்தில் தொழிலாளர் வாழும் பகுதியில், தார்மிக மறு மலர்ச்சியைப்பற்றி முதல் முதலாக ஒரு பிரசங்கம் செய்தார். அதற்கு முன்பே அவர் பெயர் பிரபலமாகிவிட்டது. அவர் காட்டிய வழியைப் பின்பற்றி அதில் அநுபவப்பட்ட பலர் பல நாடுகளில் அவர் தொண்டுக்கு ஆக்கந் தரும் வகையில் உழைத்து வந்தார்கள். அவருடைய பிரசங்கத்தைக் கேட்டபின் ஆயிரக்கணக்கில் மக்கள் அதில் ஈடுபட்டார்கள். அது முதல் தார்மிக மறுமலர்ச்சி முன்னேறி வருகிறது.

2. தார்மிக மறுமலர்ச்சி என்பது ஓர் இயக்கமா? அரசியல் கட்சியா? வாழ்க்கைத் தத்துவமா?

அது ஒரு ஸ்தாபனமுமல்ல; குறிப்பிட்ட ஒரு லட்சியமுமல்ல; நம் உள்ளத்தில் கிளர்ச்சி மூட்டி மகத்தான புரட்சியை ஏற்படுத்துகிறது.

தார்மிக மறுமலர்ச்சியில் அங்கத்தினர்கள் என்றோ, பொதுக்காரியதரிசி என்றோ தலைவர் என்றோ யாரும் இல்லை. சந்தாவும் செலுத்த வேண்டாம். உலகப் பிரச்னையைத் தீர்க்க வந்த மாபெரும் உலகசக்தி என்றுதான் அதைச் சொல்லவேண்டும். "அனைவரும் ஒன்று சேர்ந்து செல்லக்கூடிய மார்க்கம். கடவுள் அருளிய ஒரு கருத்து" என்று டாக்டர் புச்மன் சொல்லி யிருக்கிறார். மக்கள் மனத்தில் ஊன்றி, உலகில் நன்மை தலைதூக்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுவது தார்மிக மறு மலர்ச்சி; உலகச் சிக்கல்களின் மூலகாரணத்தை ஆராய்வது; மனித இயல்பு மாறினால் உலகிலும் மாறுதல் ஏற்படும் என்பதை வலியுறுத்துவது.

'தார்மிக மறுமலர்ச்சி என்றால் தனி மனிதனின் மறுமலர்ச்சி; தேசீய மறுமலர்ச்சி என்றே கொள்ளவேண்டும்'- இது புச்மன் கருத்து.

விருப்பு வெறுப்பற்ற முறையில் ஆலோசிக்க வேண்டும். பொதுவாக எல்லாருமே உடனடியாகக் கட்சி, வகுப்பு, கொள்கை இப்படி எந்த விதமான வேறுபாடும் இன்றிச் செயலில் இறங்குவதும், நேர்மை, தூய்மை, தன்னலமற்ற நோக்கு, பரந்த அன்பு இவற்றைக் கடைப்பிடித்து வாழ்வதுந்தான் தார்மிக மறுமலர்ச்சியின் லட்சியம்.



ஸ்விட்ஜர்லாந்தில் காக்ஸ் (Caux) என்னும் இடத்தில் உள்ள எம். ஆர். ஏ. இயக்கத்தின் தலைமைக் காரியாலயம்.

படும்போது அவை இரண்டையும் இணையவைக்கும் மகத்தான சக்தி தார்மிக மறுமலர்ச்சிக்கு உண்டு. பொருளாதாரம், சமூகம், நாடு, சர்வதேசம் இப்படி எல்லா விஷயங்களிலும் மாறுதல் ஏற்படுத்துவதே அதன் நோக்கம். இது நிறைவேறுவதற்குத் தனி மனித இயல்பு மாறியாக வேண்டும்'' என்று மீண்டும் இவர் வலியுறுத்தினார்.

இந்தியாவின் திட்ட மந்திரியான குல்ஜாரிலால் நந்தாவும் இந்த மறுமலர்ச்சி ஏற்பட வேண்டுமென்று வாழ்த்தியிருக்கிறார். அடுத்த ஐந்து ஆண்டுகளில் என்ன நிகழ வேண்டுமென்பதைப்பற்றி இவர் பேசும்போது, ''வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, தேவை இவைகளை அகற்ற நாம் ஒன்றுபட்டு உழைக்க வேண்டும். இல்லாவிட்டால் நமக்கு வெற்றி கிட்டாது. தார்மிக மறுமலர்ச்சி நம் கண்ணெதிரே இந்த ஒற்றுமைக்கு வழி காட்டி வருகிறது'' என்றார்.

3. அதனால் என்ன என்ன சாதிக்க முடியும்?

புச்மன் முதலில் கொண்ட லட்சியம் மாறவேயில்லை. ''கடவுளின் ஆணைக்குக் கட்டுப்பட்டு நடக்கும் ஒரு விதப் புதிய சமுதாயம் தோன்ற வேண்டும் என்பதே என் நோக்கம். மக்களுக்குள் பரஸ்பர நல்லுறவும் கூட்டுறவும் ஏற்படவேண்டும். வியாபாரத்திலும் சரி, அரசியலிலும் சரி, நேர்மை வேண்டும். அரசியல், தொழில், இனத்துவேஷங்கள் ஒழிய வேண்டும்'' என்று இதை 1934-இல் விளக்கியிருக்கிறார் புச்மன்.

1949-இல், ''கீழ்நாடு மேல்நாடு இரண்டிலும் மாறுதல்கள் ஏற்

4. இதுவரை அது என்ன செய்திருக்கிறது?

வெகு காலமாகப் பிரான்ஸுக்கும் ஜெர்மனிக்கும் இருந்த பரஸ்பர மனக்கசப்பு, தார்மிக மறுமலர்ச்சியினால் தணிந்திருக்கிறது.

இரண்டு நாடுகளுமே புச்மனேக் கௌரவித்திருக்கின்றன.

தார்மிக மறுமலர்ச்சியினுல் பிரிட்டிஷ் கப்பற்படைத் தளத் தொழிலாளரும் நிர்வாகிகளும் பரஸ்பரம் ஒத்துப் போக வழி ஏற்பட்டது. 1949-இல் அங்கே நடந்த வேலை நிறுத்தத்தால் பிரிட்டனுக்குச் சுமார் 20,00,00,000 பவுன் நஷ்டம் ஏற்பட்டது. இப்படி வேலை நிறுத்தம் செய்யத் தூண்டிய மக்கள் பின்னுல் தார்மிக மறுமலர்ச்சி லட்சியத்தை ஏற்ருர்கள்; 1951-இல் மீண்டும் வேலை நிறுத்தம் ஏற்பட்டு வீண் நஷ்டம் விளையாதபடி பார்த்துக்கொண்டார்கள்.

இனவெறியும் அநீதியும் தலைவிரித்தாடும் ஆப்பிரிக்காவில், தார்மிக மறுமலர்ச்சிக்காகப் பாடுபடும் பிரமுகர்களின் ஆதரவில் எம். ஆர். ஏ. மகாநாடு ஒன்று சமீபத்தில் கூடியது. நைஜீரியாவிலுள்ள இபோ அரசாங்கத்தில் உதவிக் காரியதரிசியாக இருக்கும் எலுவா என்பவர் அங்கே நடந்த தேசியப் போரில் ஈடுபட்டவர்; எவ்வளவோ தியாகம் புரிந்தவர். அவர் இந்த மகாநாட்டின் நடவடிக்கைகளை நேரில் கண்டு வியந்தார். மகாத்மா காந்தியின் மகனும் தென்னுப்பிரிக்க இந்தியர்களின் தலைவருமான மணிலால் காந்தி, "இதனுல் எங்களுக்கெல்லாம் புது நம்பிக்கையும் பலமும் ஏற்பட்டிருக்கின்றன" என்று பாராட்டியிருக்கிருர்.

நிலக்கரிச் சுரங்கம், எஃகுத் தொழிற்சாலை, பஞ்சாலை முதலிய பல இடங்களில் தொழிலாளர், தொழில் நிர்வாகிகள் இவர்களுக்குள்ளிருந்த சச்சரவைப் போக்கும் ஒரு சாதனமாக இது விளங்குகிறது. தொழிலாளர் தலைவர் ஒருவர் ஓர் இடத்தில் தொழில் நிர்வாகிகளின் மன மாறுதலைக் கண்டு, "சோஷலிஸ்ட் புரட்சிக்குப் பின் வெகுநாள் கழித்து நான் எதிர்பார்த்ததைவிட இதனுல் அதிக நன்மை விளைந்திருக்கிறது" என்று சொல்லியிருக்கிருர்.

நார்வேயில் கம்யூனிஸ்ட் கட்சியை ஸ்தாபித்த ஒரு பிரமுகர், "தார்மிக மறுமலர்ச்சியினுல் வர்க்கப் போரை நீடிக்கவேண்டிய தேவையே இராமல் போய்விடுகிறது. தொழிலாளர்களின் முன்னேற்றத்தில் இதை முக்கியமான கட்டம் என்றே சொல்ல வேண்டும்" என்ருர்.

5. இதை நடத்த மூலதனம் எங்கிருந்து கிடைக்கிறது?

யார் வேண்டுமானுலும் இதற்கு எந்த விதத்திலும் துணைபுரியலாம். இதனுல் நன்மை அடைந்தவர்கள், பொருளாகவே நன்கொடை அளிக்க முன் வருவார்கள். அணுக்குண்டு யுத்தமும் ரத்தக் களரியும் ஏற்படாமல் உலகத்தைப் பாதுகாப்பதற்குத் தம்மால் இயன்றதையெல்லாம் மக்கள் தார்மிக மறுமலர்ச்சிக்குத் தாராளமாக வழங்க வேண்டும். தியாகமும் ஆத்ம சமர்ப்பணமுந்தான் இந்த லட்சியம் நிலைத்து நிற்க ஊக்கம் அளிக்கின்றன. தார்மிக மறுமலர்ச்சியில் முழு நேரமும் ஈடுபட்ட தொண்டர்கள் இப்படி எல்லாவற்றையும் அர்ப்பணம் செய்தவர்களே. இன்னும் பல ஆயிரம் பேர் அவ்வப்போது பொருள் உதவி செய்து வருகிருர்கள்.

6. தனி மனிதன் செய்ய வேண்டியது என்ன?

மனிதன் சொந்த வாழ்க்கையில் கடவுளுக்குப் பணிந்து நடக்க வேண்டும். பொழுது புலருவதற்கு முன் அரை மணி நேரமோ ஒரு மணி நேரமோ அமைதியாகத் தியானிப்பது அவசியம். அப்போது தோன்றும் எண்ணங்களைக் குறித்து வைத்துக்கொள்ள வேண்டும். தார்மிக மறுமலர்ச்சியில் ஈடுபட்ட ஆண் பெண்கள் இப்படித்தான் தினந்தோறும் செய்து வருகிறார்கள். எந்த விதமான தொண்டுக்கும் தயாராக இருக்க வேண்டும். பணத்தையோ பொருளையோ யாரும் யாசிக்கவேண்டியதில்லை. தம்மிடம் இருப்பதையெல்லாம் கடவுளுக்கு அர்ப்பணம் செய்வதே தார்மிக மறுமலர்ச்சியின் நோக்கம்.

7. இந்தக் காலத்தில் இதனால் என்ன நன்மை ஏற்படும்?

உலகத்தில் பெரும் புரட்சி நிகழ்ந்து வரும் சமயம் இது. புதிய புதிய நாடுகள் தலையெடுத்திருக்கின்றன. மனித சமுதாயத்தை உருவாக்கப் புதிய சக்திகளும் வேறு தோன்றியிருக்கின்றன. தொழில் துறையில் புதிய விஷயங்களைக் கண்டுபிடித்திருப்பதால், அது மிகவும் முன்னேறிவிட்டது. இதனால் சமுதாய அமைப்பே மாறிவிட்டது. ஒழுக்கத்தைப் பிரமாதமாக யாரும் பாராட்டுவதில்லை. ஆகவே, பிரிவும் சச்சரவும் மலிந்து நம்மைப் பலவீனமாக்கி வருகின்றன.

உயர்ந்த லட்சியங்களைக் கடைப்பிடித்து வாழ்வதே தார்மிக மறுமலர்ச்சியாகும். உலகில் எல்லாருக்கும் பொதுவாக அமைந்த நல்ல ஒழுக்கங்களைத் தன்னடக்கத்துடன் ஒவ்வொருவரும் கடைப்பிடித்தால் போதும். சொந்தச் சொத்து என்பதற்கே இதில் இடமில்லை. எல்லாம் ஆண்டவன் உடைமை என்ற உணர்வு வேண்டும். இனி இந்த எளிய வாழ்வு முறையினாலேயே எங்கும் ஒற்றுமை தோன்றி உலகம் உய்ய வேண்டும்.

ரோல்ஸ் - ராய்ஸ்

ஏழாம் எட்வர்ட் சக்கரவர்த்தியின் காலத்தில் கட்டிய ஒரு ரோல்ஸ்-ராய்ஸ் கார் வெகு வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தது. வழியிலே அதை ஒரு போலீஸ் அதிகாரி நிறுத்தினார்.

"இது ரொம்பப் பழைய கார் என்று தோன்றுகிறது. இதன் ப்ரேக் சரியாய் இருக்கிறதா என்று பார்க்க வேண்டும். சாலையில் நீங்கள் இதை ஓட்டிச் செல்லுங்கள். நாங்கள் ஹார்ன் சப்தம் கொடுக்கும்போது ப்ரேக் போடுங்கள். என்ன, தெரிந்ததா?" என்று அதன் டிரைவரிடம் சொன்னார்.

அப்படியே ரோல்ஸ்-ராய்ஸ் ஓடிற்று; அதன் பின்னால் ஓடி வந்த போலீஸ் கார், திடீரென்று ஹார்ன் சப்தம் கொடுத்தது. ரோல்ஸ்-ராய்ஸ் அப்படியே சட்டென்று நின்றுவிட்டது. அதன் பின்புறம் வந்து மோதி நொறுங்கியது போலீஸ் கார்.

—'டெய்லி டெலிகிராஃப்'

ஐஸ் செய்ய, ஈயப் பற்று வைக்க, உரம் செய்ய
இவைகளுக்கெல்லாம் உதவும் இயற்கைச் செல்வம்—

மூக்கைத் துளைக்கும் வாயு

எஸ். மகாலிங்கம்

இதை நீங்கள் பார்த்திருப்பீர்கள்: தங்கள் சட்டைப் பைகளில் சிலர் அழகான சிறு பிளாஸ்டிக் குப்பிகளை எடுத்துச் செல்வார்கள். அந்தக் குப்பியை அதுவும் நான்கு பேர்கள் இருக்கும் சமயமாகப் பார்த்து, வெளியே எடுத்து, அதன் மூடியை மெதுவாகக் கழற்றி, குப்பியை மூக்குக்கு அருகில் கொண்டுபோய், நாசுக்காக மோந்து பார்ப்பார்கள். நமக்கும் 'அந்த அழகான குப்பியில் என்ன இருக்கிறது; நாமும் மோந்து பார்க்க வேண்டும்' என்ற ஓர் ஆசை எழும். இயற்கைதானே; அவரிடம் அந்தக் குப்பியை நைச்சியமாக வாங்கி நாமும் மூக்குக்கு அருகே வைத்து ஓர் இழுப்பு இழுக்கிறோம். அப்படி இழுத்தவுடனே ஒரு தும்மல் வருகிறது. அந்தக் குப்பியிலிருந்து காரசாரமான நெடியுள்ள ஒரு வாயு மூக்கைக் துளைத்துக் கொண்டு விர் என்று உள்ளே செல்கிறது. அவரை நாம், 'என்ன வாயு? எதற்காக இது?' என்று கேட்டால், "வாயுவின் பேர் தெரியாது. ஜலதோஷத்துக்கும் தலைவலிக்கும் ரொம்ப நல்லது" என்று சொல்லுவார். ஆனால், அது என்ன வாயு, அதன் குணம் என்ன என்பதை, அணு சகாப்தத்தில் இருக்கும் நாம் தெரிந்துகொள்ள வேண்டாமா? அதுதான் அம்மோனியா வாயு.

இந்த அம்மோனியாவின் வாசனையை, சிறுநீர் கழிக்கும் இடங்களிலோ, மாட்டுக் கொட்டில்களிலோ, குதிரை லாயங்களிலோ கண்டுகொள்ளலாம். தாவர வஸ்துக்கள் அல்லது செத்த பிராணிகள் அழுகும்போதும் இந்த வாயு உண்டாகிறது. தோல், குளம்பு, எலும்பு, கொம்பு இவைகளுடன் சுண்ணும்பைக் கலந்து இந்த வாயுவை உற்பத்தி செய்யலாம். பரிசோதனைச் சாலையில் நவச்சாரத்துடன் சுண்ணும்பைக் கலந்து உஷ்ணப்படுத்தினுல், அம்மோனியா வாயு வெளிவருகிறது. ஆனுல், வியாபார முறையில் அதிகமான அளவில் இந்த வாயுவைத் தயாரிக்க வேண்டுமானுல், இந்த முறைகளைக் கையாளுவதில்லை.

நிலக்கரியிலிருந்து நிலக்கரி வாயுவைத் தயாரிக்கும்போது அம்மோனியா உடன் விளைவாகக் கிடைக்கிறது. நிலக்கரியைக் காற்றுப் படாமல் உஷ்ணம் தாங்கக் கூடிய கொப்பரைகளில் சிதைத்து வடித்தால், நிலக்கரி வாயு, அம்மோனியா திரவம், தார், கோக் என்ற நான்கு பொருள்கள் கிடைக்கின்றன. நிலக்கரி வாயு வெளியே சென்றுவிடுகிறது. கொப்பரைகளின் அடிப்பாகத்தில் கோக் தங்கி விடுகிறது. தாரிலிருந்து தனியாக அம்மோனியா திரவத்தைப் பிரித்து எடுக்கிறூர்கள்.

காப்பிரைட்: அகில இந்திய ரேடியோ நிலையம் (தமிழ்ப் பேச்சு), திருச்சி.

அம்மோனியா திரவத்தில் அம்மோனியா வாயுவும், அம்மோனியா உப்புக்களும் இருக்கின்றன. இந்தத் திரவத்தைச் சுண்ணாம்புடன் சேர்த்து உஷ்ணப்படுத்தினால், அம்மோனியா வாயு வெளி வருகிறது. ஒரு டன் நிலக்கரியிலிருந்து சுமார் 5 முதல் 7 பவுண்டு வரை அம்மோனியாவைப் பெறலாம்.

நைட்ரஜனும், ஹைட்ரஜனும் சேர்ந்து ஐக்கியப்பட்ட ஒரு ரசாயனச் சேர்க்கைப் பொருளே அம்மோனியா வாயு. இது நிறமற்ற வாயு; காற்றைவிட லேசானது; தண்ணீரில் சுலபமாகக் கரையும். வாயுவுக்கு உள்ள குணங்களெல்லாம் இந்தக் கரைசலுக்கும் உண்டு. அம்மோனியா வாயுவுக்கு நெடி அதிகம். மூக்கைத் துளைக்கும் காரசாரமான வாயு இது. குறைந்த அளவில் சுவாசித்தால், இந்த வாயுவால் கெடுதி விளையாது; அதிகமாகச் சுவாசித்தால், மூக்கிலிருந்து ரத்தம் வரும். இது கண்களில் பட்டால், எரிச்சல் உண்டாகிக் கண்ணீர் வரும்.

இந்த வாயு அநேக விதங்களில் உபயோகமாகிறது. சிறிதளவு இந்த வாயுவைச் சுவாசித்தால், ஜலதோஷம் மாயமாய் மறைந்துவிடுகிறது; தலைவலி சொல்லிக் கொள்ளாமல் போய்விடுகிறது; எண்ணெய்க் கறைகளைக் கழுவிவிட அம்மோனியா மிகவும் ஏற்ற பொருள். அம்மோனியாவையும் கரியமில வாயுவையும் உபயோகித்து, சாதாரண உப்பிலிருந்து சலவைச் சோடாவையும், ரொட்டிச்சோடாவையும் தயாரிக்கலாம். வெடி மருந்துகள் செய்ய அதிகமாய் உபயோகப்படுவது நைட்ரிக் அமிலம். அம்மோனியா வாயுவையும் பிராணவாயுவையும் தக்க முறையில் சேர்த்து அந்த அமிலத்தை இப்போது தயாரிக்கிறார்கள். அம்மோனியாவுக்கு மற்றொரு பெரிய உபயோகம் இருக்கிறது. கோடைக் காலத்தில் வறட்சியாக இருக்கும் போது ஒரு டம்ளர் ஐஸ் வாட்டர் சாப்பிட்டால் எப்படி இருக்கிறது! ஐஸ் ஃப்ரூட் என்றால் ஒரே குஷி! என்ன ஆனந்தத்துடன் சுவைத்துச் சாப்பிடுகிறீர்கள்! ஆமாம்; அம்மோனியாவுக்கும் ஐஸ் ஃப்ரூட்டுக்கும் என்ன சம்பந்தம் என்று நீங்கள் ஆச்சரியப்படுகிறீர்கள்; இல்லையா? ஐஸ் க்ரீம், ஐஸ் ஃப்ரூட், குளிர்ந்த பானம் இவைகளையெல்லாம் தயாரிப்பதற்கு ஐஸ் மெஷின்களில் அம்மோனியா வாயுவையே உபயோகிக்கிறார்கள்.

ஐஸ் மெஷின்களில் குளிர்ச்சி எப்படி உண்டாகிறது தெரியுமா? எந்தத் திரவமாயினும் ஆவியாகும் போது குளிர்ச்சி உண்டாகிறது. அம்மோனியா திரவம் வாயு ரூபமாக மாறும்போதும் இப்படித்தான் குளிர்ச்சி உண்டாகிறது. அம்மோனியா திரவத்தை வாயு ரூபமாக மாற்றி, ஜலத்தைக் குளிரச்செய்து பனிக்கட்டி செய்கிறார்கள். அவ்வளவேதான். பனிக்கட்டிசெய்யும் கருவிகளில் சுத்த ஜலம் நிறைந்த பாத்திரங்களை, உப்பு ஜலமுள்ள பெரிய தொட்டியில் வைக்கிறார்கள். இந்த உப்பு ஜலத்தின் வழியாக ஒரு குழாய் வளைந்து வளைந்து செல்லுகிறது. திரவரூபத்திலிருந்து வாயுரூபமாக மாறுகிற அம்மோனியா வாயு இந்தக் குழாய் வழியாகச் செல்கிறது. அப்போது உப்பு ஜலம் குளிர்ச்சி அடைகிறது. சுத்தஜலம் நிறைந்த பாத்திரங்களுக்கு அந்தக் குளிர்ச்சி

பரவுகிறது. சுத்த ஜலத்துக்குப் பதிலாகப் பால் ஏடு, பழச்சாறு, சர்க்கரை முதலியவற்றைக் கலந்து வைத்தால், ஐஸ் க்ரீம் கிடைக்கிறது.

இந்த விதமாகக் குளிரச் செய்யும் பெட்டிகளை மற்றொரு காரியத்துக்கும் உபயோகிக்கலாம். பழம், காய்கறி, வெண்ணெய், முட்டை இவைகள் அழுகிப் போகாதபடி நீடித்த காலம் அந்தப் பெட்டிகளில் வைத்துக் காப்பாற்றலாம். பனிக்கட்டியின் உஷ்ண நிலையில் பாக்டீரியாக்கள் ஜீவித்திருக்கமாட்டா.

அம்மோனியா வாயுவைப் போலவே அம்மோனியா உப்புகளும் அநேக விதங்களில் உபயோகப்படுகின்றன. செப்புப் பாத்திரங்களுக்கு ஈயம் பூசுவதற்கு முன்னால் ஒரு வெள்ளைப்பொடியைப் பாத்திரங்களின் மேல் தூவுகிறார்களே, கவனித்திருக்கிறீர்களா? அதுதான் நவச்சாரம். நவச்சாரத்தைத் தூவினவுடன் குப்பென்று ஒரு வெள்ளை ஆவி கிளம்புகிறது. அந்த ஆவியில் ஹைட்ரோக்ளோரிக் அமில வாயு இருக்கிறது. அந்த வாயு உலோக பாகத்தின் மேல் உள்ள துருவையும் அசுத்தத்தையும் நீக்கிச் சுத்தப்படுத்துகிறது. சுத்தப்படுத்தினால் தானே, ஈயம் பூசும்போது ஈயம் நன்றாகவும் சீராகவும் பாத்திரத்தில் ஒட்டிக்கொள்ளும்? ஈயப் பற்று வைக்கும்போதும் இந்த உப்பை இதே காரணத்துக்காகத்தான் உபயோகிக்கிறார்கள். அப்போதுதான் ஈயப்பற்று நன்றாகப் பிடித்துக்கொள்ளும். சாய வேலைகளிலும், காலிகோ ப்ரிண்டிங்கிலும் நவச்சாரம் உபயோகப்படுகிறது. நீங்கள் இருட்டு வேளையில் வெளியே செல்லும்போது டார்ச் லைட் உபயோகிக்கிறீர்களே, அந்த டார்ச் லைட் பாட்டரியில் மின்சாரத்தை உண்டாக்குவதும் இந்த நவச்சாரந்தான். தேள் கொட்டிவிட்டாலோ அல்லது விஷ ஜந்துக்கள் கடித்துவிட்டாலோ, நவச்சாரத்தையும் சுண்ணாம்பையும் கலந்து நன்றாகத் தேயுங்கள். கடுகடுப்பும் நிற்கிறது; வலியும் போய்விடுகிறது. இந்த நவச்சாரத்துக்கு ரசாயனப் பெயர் அம்மோனியம் குளோரைடு என்பதுதான். லிபியா பாலைவனத்துக்கு அருகில் உள்ள ஜூபிடர் அம்மான் என்ற கோவிலுக்குப் பக்கத்தில், ஒரு வித ஸோடிய உப்பு இயற்கையில் கிடைக்கிறது. நவச்சாரம் இந்த உப்பை ஒத்திருந்ததால், 'ஸால் அம்மோனியக்' என்ற பெயரை நவச்சாரத்துக்குக் கொடுத்தார்கள். ஸால் அம்மோனியத்திலிருந்து அம்மோனியா தயாரிக்க முடியுமாகையால், அம்மோனியா என்ற பெயர் இந்த வாயுவுக்கு வந்தது.

வாணங்களும் வெடி மருந்துகளும் செய்வதில் அம்மோனியம் நைட்ரேட் உபயோகமாகிறது. அமடால், அமோனால் போன்ற அபாயகரமான வெடிமருந்துகளை இந்த உப்பிலிருந்துதான் தயாரிக்கிறார்கள். அம்மோனியம் நைட்ரேட் என்ற உப்புடன் பனிக்கட்டியைச் சேர்ப்பதன் மூலம் தண்ணீரின் உறை நிலையைவிட அதிகமான குளிர்ச்சியை உண்டாக்கலாம். ஜலதோஷம், தலைவலி இவைகளைப் போக்க உதவும் மோப்பக் குப்பிகளில் அம்மோனியம் கார்பனேட் என்ற உப்பை உபயோகிக்கிறார்கள். நாம் இந்தக் குப்பிகளை மோந்து பார்க்கும்போது சுவாசிக்

கும் காற்றில் உள்ள உஷ்ணம் பட்டு அம்மோனியம் கார்பனேட் சிதைகிறது; அம்மோனிய வாயு உண்டாகிறது. அம்மோனியம் ஃபாஸ்ஃபேட் என்ற உப்பை உரமாகவும், பல்பொடி, பல்பசை இவைகளைத் தயார் செய்வதிலும் உபயோகிக்கிறார்கள்.

ஆனால், இந்த எல்லாவற்றையும் விட மிகவும் உபயோகமான முக்கிய உப்பு, அம்மோனியம் ஸல்ஃபேட்தான். இதிலிருந்தே மற்ற எல்லா அம்மோனிய உப்புகளையும் தயாரிக்கிறார்கள். தீப் பற்றாத துணிகளைத் தயார் செய்யவும் அம்மோனியம் ஸல்ஃபேட் உபயோகப்படுகிறது. ஏராளமான அளவில் நிலங்களுக்கு உரமாகப் பயன் படுகிறது. ஏனென்றால், தாவரங்கள் வளர்வதற்கு வேண்டிய நைட்ரஜன் அந்த உப்பில் இருக்கிறது. ஆகையால்தான் லட்சக்கணக்கான டன் அந்த உப்பை உரத்துக்காகத் தயாரிக்கிறார்கள். நம் நாடு ஒரு விவசாய நாடு. இந்த நாடு செழித்துச் சுபிட்சமாக இருக்க வேண்டுமானால், உணவு உற்பத்தியைப் பெருக்க வேண்டும். தரிசாக உள்ள நிலங்களைச் சாகுபடிக்குக் கொண்டு வர வேண்டும். இப்போது சாகுபடியாகும் நிலங்களின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும். நிலங்கள் செழிப்படைய, ஊட்டம் பெற, நன்றாய் விளைய, அவைகளுக்கு நல்ல உரங்களைப் போட வேண்டும். அப்படிப்பட்ட உரங்களில் அம்மோனியம் ஸல்ஃபேட் ஒன்று. பூமியில் உள்ள சாரத்தைப் பயிர்களுக்கு இழுத்துக் கொடுக்க அம்மோனியம் ஸல்ஃபேட் உதவுகிறது. அம்மோனியம் ஸல்ஃபேட்டை மாத்திரம் தனியாக உபயோகிக்காமல், பிண்ணாக்கு, பச்சிலை, சாணம், குப்பை இவைகளோடு தகுந்த அளவு சேர்த்துப் போட்டால், விளைச்சலைப்பற்றிக் கேட்க வேண்டுமா? இந்த முறையைக் கையாண்டுதான் சமீபத்தில் நடந்த விளைச்சல் போட்டியில் ஒரே எக்கரிலிருந்து 12,000 பவுண்டு எடையுள்ள நெல்லை விளைவித்து, வெற்றியடைந்து பரிசைத் தட்டிக் கொண்டு போனார் ஒருவர். ஒவ்வொருவரும் இது மாதிரியாகப் போட்டி போட்டுக்கொண்டு தங்கள் நிலங்களின் விளைச்சலைப் பெருக்கினால், உணவுப் பஞ்சம் வருமா? வெளிநாட்டாரின் தயவைத்தான் எதிர்பார்க்க வேண்டிவருமா?

கவிஞரின் பதில்

“நீங்கள் மகாகாவியம் எதுவும் எழுதாமலே எப்படி மகாகவி ஆகிவிட்டீர்கள்?” என்று ஒருவர் ரவீந்திரரைக் கேட்டார்.

அதற்கு அவர் கவிதையிலேயே பதில் சொன்னார். அந்தக் கவிதையின் கருத்து இது: “நான் மகா காவியம் எழுத விரும்பினேன். ஆனால் நான் அதை எழுத முயன்றபோது அது கலைமகளின் சிலம்பில் மோதிச் சுக்கு நூறாகி, ஆயிரக் கணக்கான கவிதைகளாகச் சிதறியது.”

—‘ஜீவன் ஸாஹித்ய’

கார்ட்டூன் கதம்பம்



இந்தியப் பார்லிமெண்ட் கட்டிடத்தின்மேல் கொடிக் கம்பத்தில் உள்ள சக்கரம் சுழன்ருல், சபை நடக்கிறது என்று அர்த்தமாம்.

—'சங்கர்ஸ் வீக்லி.'

பாகிஸ்தானில் - அல்லாவின் தோட்டத்தில் - சமீபத்தில் நிகழ்ந்த காட்சி.

—'ஃபில்மிண்டியா.'

நாட்டுக்கே புகழ் தந்த இந்தத் தொழிலின் நிலை என்ன இன்று?

கம்பள நெசவு

விசுவநாதன் டேகுமல்லா

எத்தனையோ காலமாகக் கம்பளத் தொழிலுக்குப் பிரசித்தி பெற்றது இந்தியா. அதில் இரண்டு வகை உண்டு. ஒன்று, சால்வை; இன்னொன்று, ரத்தினக் கம்பளம். பழங் காலத்திலேயே காஷ்மீர்ச் சால்வை என்றால் மிகவும் பிரசித்தம். ரத்தினக்கம்பளம் செய்வது சமீப காலத்தில் ஏற்பட்டதுதான். துருக்கி, காகேஷியப் பிரதேசம், பாரசீகம் இந்த இடங்களில்தான் முதல் முதல் இந்தத் தொழில் ஏற்பட்டது. அங்கே பிரார்த்தனைக்காக அமரும் பாய்களையும் தரையில் விரிக்கும் ரத்தினக் கம்பளங்களையும் தயாரித்து வந்தார்கள். பிறகு அராபியர் மூலம் நம் நாட்டில் ரத்தினக் கம்பளம் தயாரிக்கும் தொழில் பரவியது. மொகல் சக்கரவர்த்தியான அக்பர், பாரசீக நெசவாளிகளைத் தருவித்து இந்தத் தொழிலுக்கு ஊக்க மூட்டினார். ஆனால் அவர் பேரரான ஷாஜஹான் சக்கரவர்த்தி இறந்தபின், இது மங்கத் தொடங்கியது. பழைய மவுசு இப்போது இராவிட்டாலும் இன்னும் காஷ்மீர், முல்தான், ஆக்ரா, அமிர்தசரஸ், அலகாபாது இந்த ஊர்களில் ரத்தினக் கம்பளம் தயாரித்துத்தான் வருகிறார்கள். கி. பி. 1500 வாக்கில் அராபியர் தென்னிந்தியாவில் வியாபாரம் செய்யும்போது, இந்தத் தொழில் இங்கும் பரவியது. அப்போது மொகல் சக்கரவர்த்திகளின் கீழ்ப் பிரதேச அதிகாரிகளாக இருந்தவர்கள் இதை ஆதரித்து வந்ததே, இந்தத் தொழில் வளர்ச்சி அடைந்ததற்குக் காரணம்.

கி. பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் மசூலிப்பட்டணத்திலும் ஏலூரிலும் தயாரித்து வந்த கம்பள விரிப்புக்களைப் பார்த்துவிட்டுக் கிழக்கிந்தியக் கம்பெனியார் அந்தத் தொழிலை ஆதரிக்க முன் வந்தார்கள்.

1851-இல் லண்டனில் நடந்த சர்வதேசப் பொருட் காட்சியில் தென்னிந்தியாவிலிருந்து தருவித்த ரத்தினக் கம்பளங்களைப் பார்த்துவிட்டு, மேல் நாட்டாரில் அநேகம் பேர் வியந்தார்கள். இந்தியாவிலே அந்தக் காலத்தில் மசூலிப்பட்டணத்திலும் ஏலூரிலும் தயாரான ரத்தினக் கம்பளங்கள் மிகவும் சிறந்தவை என்று பெயர் எடுத்தன.

மலையாளத்தில் தயாரான ரத்தினக் கம்பளங்கள் அசல் இந்து ரீதியில் அமைந்தவை. இவற்றைப்பற்றி ஸர் ஜார்ஜ் பேர்டுவுட் என்பவர், "இத்தனை வர்ண விசித்திரம், வேலைத் திறமையோடு அரண்மனைகளில் விரிப்ப

மூலம்: கிராம ராஜ்யம் (தமிழ்: மார்ச் '53), தேனாம்பேட்டை, சென்னை.

தற்கேற்றபடி மிகவும் அகலமும் நீளமும் பொருந்திய ரத்தினக் கம்பளத்தை நான் பார்த்ததில்லை'' என்று புகழ்ந்து எழுதியிருக்கிறார்.

ஆயினும் 19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலிருந்து இந்தத் தொழில் மிகவும் க்ஷீணித்து வர ஆரம்பித்தது. மலையாளக் கரையில் அடியோடு இது நசித்துவிட்டது. ஏலூரிலோ மட்ட ரகக் கம்பளம் தயாரித்து வந்தார்கள்.

இதற்குப் பல காரணங்கள் உண்டு. பழைய ராஜ குடும்பங்கள் ஒவ்வொன்றாகச் சீரழிந்து வரவே, இந்த வகை நெசவாளிகளை ஆதரிப்பார் இல்லை. கிழக்கிந்தியக் கம்பெனி ஏற்பட்ட பிறகு, பழைய உயர்தரமான ரத்தினக் கம்பள வகைகளை, முக்கியமாக இங்கிலாந்திலும் பிற மேல் நாடுகளிலும் பலர் வாங்கிச் சென்றுவிட்டார்கள். அவற்றுக்குப் பதிலாக ஆங்கிலேயர் அமைத்துக் கொடுத்த ரீதியில் ஒரே தினுசில் ரத்தினக் கம்பளம் தயாரிக்க வேண்டியிருந்ததால், அவரவர் தனித்திறமையைக் காட்ட முடியாமல் அந்தத் தொழில் அழிந்துவிட்டது. 1851-இல் நடந்த கண்காட்சிச் சாலை காரணமாக ஐரோப்பாவில் யந்திர மூலம் அதிக அளவில் கம்பளங்கள் தயாரிக்கலானார்கள். அதோடு உள்நாட்டில் தாவரச் சாயத்துக்குப் பதில் சீமை ரசாயனச் சாயம் தலையெடுத்துவிட்டதால், வர்ண அமைப்பு மட்டமாகிவிட்டது. நம்மை ஆண்டு வந்த சர்க்காரோ இந்தத் தொழில் சிறைவாசம் செய்பவர்களுக்கு ஏற்றதாக இருக்கிறது என்று கைதிகளைக் கொண்டு மட்டுமே இந்தத் தொழிலை நடத்தி வந்தார்கள். முன்பின் இதில் பழக்கம் இராத கைதிகள் தயாரித்த கம்பளங்கள் மிகவும் மட்டமாயிருந்தன. இவர்கள் விடுதலையானதும், இந்த ரீதியில் ஜமக்காளம் நெய்து விற்றால் தொழில் மங்குவதற்குக் கேட்பானேன்?

இருந்தாலும் எப்படியோ ஒரு விதமாக இந்த நெசவாளிகள் கொஞ்ச நாள் வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்து சமாளித்து வந்தார்கள். ஆனால் முதல் உலக யுத்தம் தொடங்கியதும் ஏற்றுமதி தடைப்படவே மிகவும் கஷ்ட தசைக்கு உள்ளானார்கள்.

முதல் உலக யுத்தத்துக்குப் பின் இந்தத் தொழில் சற்றுத் தலை எடுத்தது. 1925-இல் மசூலிப்பட்டணத்திலும் ஏலூரிலும் சுமார் 5,000 நெசவாளிகள் இதில் ஈடுபட்டு வந்தார்கள். இவர்கள் வருஷம் ஒன்றுக்குச் சுமார் 30,000 சதுர கஜம் தயாரித்தார்கள்; ஓர் அங்குலத்துக்கு ஐந்து இழை நூல் இருந்தது.

1930-35-இல் வியாபார மந்தம் ஏற்படவே கூலி குறைந்தது; அன்றாடம் எட்டணாவாக இருந்த கூலி ஆறணாவாகக் குறைந்துவிட்டது. பிறகு மறுபடியும் இந்தத் தொழில் சற்றுத் தலையெடுக்கும் போல் இருந்தது. அந்தக் குறைந்த கூலிக்கும், பாவம், அநேகம் பேர் செய்து வந்ததால்தான் ஏதோ ஒரு விதமாக இந்தத் தொழில் நீடித்து வந்தது. நிலைமை சீர்படும் என்று தோன்றும் சமயத்தில் இரண்டாம் மகா யுத்தம் தொடங்கிவிட்டது. இதனால் ஆறணாக் கூலியும் ஐந்தணாக் கூலியாகக் குறைந்தது. ஆகவே, பல நெசவாளிகள் இந்தத் தொழிலையே விட்டு வேறு லாபகரமான தொழில்களில் ஈடுபடலானார்கள்.

யுத்தத்தினுல் வெளி நாட்டுக்கு ஏற்றுமதி செய்வது நின்ருலும், உள்நாட்டில் பிரிட்டிஷ் அமெரிக்கத் துருப்புக்கள் வந்தபோது இந்தத் தொழிலுக்கு மீண்டும் மவுசு ஏற்பட்டது. யுத்தம் முடிந்ததும் சொந்த நாடு திரும்பிய ஒவ்வொரு சோல்ஜரும் இந்த மாதிரி ஒரு கம்பளம் வாங்கிக் கொண்டு போனுன் . என்ருல் பாருங்கள்.

இன்னும் ஏலூர், மசூலிப் பட்டணம், சேலம், வாலாஜா, வாரங்கல், ஹைதராபாது, பங்களூர் இந்த இடங்களில் இந்தத் தொழில் நடந்துதான் வருகிறது. இங்கெல்லாம் கம்பளம், பருத்தி, சணல் நார் இப்படி மூன்றுவகைகளையும் உபயோகித்து நெய்கிருர்கள். குறும்பர்கள் என்ற ஒரு வகை ஆட்டிடையர்கள் வருஷத்தில் இரண்டு தரம் ஜூன், டிஸம்பர் இந்த மாதங்களில் ஆட்டு ரோமத்தைக் கத்தரித்து அங்கங்கே உள்ள நெசவாளிகளுக்கு விற்கிருர்கள். கான்பூரில் கிடைப்பதுபோல் உயர்ந்த ரகம் என்று இதைச் சொல்வதற்கில்லை. சிலர் தோல் பதனிடு சாலையிலிருந்து கிடைக்கும் செத்த ஆட்டு ரோமத்தையும் கலந்து உபயோகிப்பதால் மட்ட ரகமான கம்பளங்களே தயாரிக்க முடிகிறது.

சில சமயம் ஆட்டிடையர் வீட்டுப் பெண்களும் சில சமயம் நெசவாளிகள் வீட்டுப் பெண்களும் கம்பள நூல் தயாரிக்கிருர்கள். பெண்கள் எட்டு மணி நேரத்தில் 6 ராத்தல் நூல் தயாரிக்க முடியும்.

நிறந்தான் கீழ்நாட்டுக் கைத் தொழிலுக்குச் சிறப்பு அளித்து வந்தது. பழைய தொழிலாளிகள் தாவரச் சாயம் உபயோகித்து அற்புதமான சிருஷ்டிகளைத் தயாரித்தார்கள். இப்போதோ ரசாயனச் சாயந்தான் அதிகமாக உபயோகமாகிறது.

நம் பழைய நெசவாளிகள் பலர் தயாரித்த ரத்தினக் கம்பளங்கள் அற்புத வர்ண ஜாலங்களுடன் இருந்தன. ஒவ்வொன்றிலும் ஆத்மிகக் கருத்தும் அடங்கியிருந்ததால், இப்படித் தயாரிக்கும் கீழ் நாட்டாரைப்பற்றி வெளி நாட்டாருக்கு ஒரு வித உயர்ந்த அபிப்பிராயம் ஏற்பட்டது. இன்ன இன்ன நிறத்தை ஏன் உபயோகிக்க வேண்டும் என்பதற்கும் இன்ன தினுசை ஏன் தயாரிக்கிருர்கள் என்பதற்கும் ஒரு காரணம் இருந்தது. ஒவ்வொரு தினுசுக்கும் ஒவ்வொரு பெயர் உண்டு.

இப்போது பழையபடி பூப் போட்ட கம்பள வகையும் வேறு தினுசும் ஆக இரண்டு முக்கிய வகைகள் தயாரிக்கிருர்கள். பின்னது தரையில் விரிக்கப் பயன்படுகிறது. இவை இரண்டுக்குமே அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து இங்கிருந்தெல்லாம் 'ஆர்டர்'கள் ஏராளமாக வருகின்றன. சென்னை விக்டோரியா தொழில் நிலையம், இண்டஸ்டிரியல் மியூசியம் இந்த ஸ்தாபனங்களின் வாயிலாக வியாபாரம் நடந்து வருகிறது. இப்போது ஆட்டுரோமம், சாயம் இவற்றின் விலையும் கூலியும் ஏறிவிட்டதால், கம்பளங்களின் விலையும் அதிகமாகத்தான் ஆகிவிட்டது.

இந்தத் தொழில் நிலைக்க வேண்டுமானுல் மூன்று வகையில் இதற்காகப் பாடுபட வேண்டும்:

(1) கூட்டுறவு முறை: நூற்போரும் நெசவாளிகளும் மிகவும்

ஏழைகளாக இருக்கிறார்கள். பெருவாரியான லாபத்தையே நோக்கமாகக் கொண்டவர்களின் கையில் சிக்கி இவர்கள் அவதிப் படுகிறார்கள். நெசவாளிகளுக்குள் கூட்டுறவு ஏற்பட்டால், இந்த நிலை மாறி இவர்கள் மற்றவர்களோடு சரிசமமாக நின்று போட்டியைச் சமாளிக்க முடியும். இப்போது ஏலூரில் இப்படி ஒரு கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அது ஜூன் 1951-இல் ரூ. 3,415 மூலதனத்தோடு 119 அங்கத்தினர்களைக் கொண்டிருந்தது ஒரு வகையில் திருப்தி அளிக்கிறது. 1950-51-இல் ரூ. 26,000-க்கு உற்பத்தியும், ரூ. 65,000-க்கு விற்பனையும் ஆகியிருக்கிறது. ரூ. 17,000 சம்பளமாக அந்த வருஷம் விநியோகம் ஆகியிருக்கிறது. ஆகவே, இதே மாதிரி கூட்டுறவுச் சங்கங்களை அங்கங்கே தென்னிந்தியாவில் நிறுவ வேண்டும்.

(2) அரசாங்கமும் முன்னைவிட இந்தத் தொழிலை ஊக்குவதில் அக்கறை செலுத்த வேண்டும். இதைச் சிறைக் கைதிகளுக்குரிய ஒரு தொழிலாகவே பழைய அரசாங்கத்தார் மதித்து வந்தார்கள். ஏலூரில் இப்போது மிகுந்த சிரத்தை எடுத்துக் கொண்டு நம் சர்க்கார் இதை நடத்தி வருகிறார்கள். தரையில் விரிப்பாகப் பயன்படும் கம்பளங்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யச் சர்க்கார் நியமித்த போர்டார் பல முறை கூடித் திட்டம் வகுத்திருக்கிறார்கள். ஆட்டு ரோமம் சரியான விலையில் கிடைக்க வேண்டி, வாலாஜா, சேலம், பங்களூர், ஏலூர் இவை தவிரப் பிற இடங்களுக்கு ஆட்டு ரோமம் அதிகமாகப் போய் விடாதபடி, தொழில் அதிகாரி மூலம் 'பெர்மிட்' பெறும் முறையை அநுஷ்டித்து வருகிறார்கள். இந்த ரோமத்தைச் சுத்தம் செய்ய ஜோலார்பேட்டைக்கு அருகில் வீரணமங்கலம் என்ற ஊரில் ஒரு நிலையம் ஏற்படுத்தப் போகிறார்கள். இந்த மாதிரி ஊக்கமளிப்பதோடு சர்க்கார் பண உதவியும் செய்து இந்தத் தொழிலை முன்னுக்குக் கொண்டு வருவார்களென்று நம்புகிறோம்.

(3) வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்ய வேண்டுமானால், பிற நாட்டுத் தினுசுகளைக் 'காப்பி' அடிக்கக் கூடாது. ஆசாரமானவர்கள், குடும்பத்தார் இவர்கள் உபயோகிப்பதற்கேற்ற முறையிலும் கம்பளம் தயாரித்து வரவேண்டும். உள்நாட்டில் இதன் விலை மாறுபடாமல் இருக்கும்படி கவனித்துக் கொள்ள வேண்டும். அப்போது தான் பல பேர் இதை வாங்கி ஆதரிப்பார்கள்.

யந்திர உற்பத்தி பெருகியுள்ள இந்தக் காலத்திலும் சாதாரண நெசவாளிகள் அற்புதமாகக் கையால் நூற்கும் கம்பளங்களை வாங்க மேல்நாட்டார் தயாராக இருக்கிறார்கள்.

ஆகவே, இந்தத் தொழிலை அபிவிருத்தி செய்ய நாம் இன்னும் அதிக ஊக்கம் எடுத்துக்கொள்ள வேண்டும். அப்போது நம் நெசவாளிகளும் தொழிலாளிகளும் சுபிட்சமாக வாழ வழி ஏற்படும்.

என்னைக் கேளுங்கள்

காப்டன் என். சேஷாத்திரிநாதன்

வைத்தியம், சுகாதாரம், ஆரோக்கியம் இவைபற்றி 'மஞ்சரி' வாசகர்கள் கேட்கும் கேள்விகளுக்கு இயன்றமட்டில் பதிலளிக்க, இந்த டாக்டர் இசைந்திருக்கிறூர். வைத்தியத் துறையில் கல்வியும் அநுபவமும் நிறைந்தவர் இவர். முக்கியமாக, ரத்த பரிசோதனை நிபுணர். சிறிது காலத்துக்கு முன் வரையில் கிண்டி இன்ஸ்டிட்யூட் அதிகாரியாக இருந்தவர்.

வெ. நா. என்பவர் கேட்ட கேள்வி: ஃபாலிக் ஆஸிட் (அமிலம்) என்பது என்ன? அது எதற்குப் பயன்படுகிறது?

விடை: நோயாளிக்குச் சோகை என்ற சந்தேகம் வந்தவுடனே ஃபாலிக் ஆஸிட் என்னும் மருந்துடன், பி-12 என்னும் மருந்தையும் கொடுப்பார்கள். இதனுல் டாக்டருக்கு மதிப்பு; நோயாளிக்குப் பெருமை; மருத்தவ வியாபாரிக்கு லாபம். ஆனுல், இது தேவையேயில்லை. பால் வகைகளையும் கல்லீரல் சூப்பையும் கொடுப்பதால், வேண்டிய அளவு இந்த வைட்டமின்கள் அகப்படும். கிரகணி என்னும் நோய்க்கு ஃபாலிக் ஆஸிட் பயன்படுகிறது.

ஆ. கி.: தக்காளியில் உடம்புக்கு வேண்டிய பொருள்கள் என்ன என்ன இருக்கின்றன? தினந்தோறும் தக்காளி தின்பதால் என்ன குணமுண்டாகும்?

விடை: ஒரு வகையில் இந்தக் காலத்தை 'வைட்டமின் யுகம்' என்று சொல்லலாம். பொதுமக்களும் வைத்தியர்களும் வைட்டமின் உணர்ச்சி உடையவர்களாக இருக்கிறூர்கள். ஆகவே, கேள்வி கேட்ட நண்பர் எந்த மாதிரி வைட்டமின்கள் தக்காளியில் இருக்கின்றன என்பதை அறியவே விரும்புகிறூர் என்று நம்புகிறேன். தக்காளியில் ஸி-வைட்டமினைத் தான் அதிகமாய் எதிர்பார்க்க வேண்டும். அடுத்தபடியாகஏ-வைட்டமினும், பி-வைட்டமினும் ஏராளமாயிருக்கின்றன. வருஷத்தில் சில மாதங்களில் தக்காளி ஏராளமாயும் விலை குறைவாயும் அகப்படலாம். ஏழை மக்களுடைய வைட்டமின் பொக்கிஷம் என்றுகூடத் தக்காளியைச் சொல்லலாம். ஸி-வைட்டமின் அதிகமாய் உட்கொள்வதால் வாலிபத்தை வெகு நாள் காத்து வரலாமென்று சில நிபுணர்கள் கூறுகிறூர்கள்.

தா. நு.: என் வயிற்றிலிருந்து நெஞ்சு வரையில் ஒரு நாளில் பல தடவை உஷ்ண அலைகள் மேலும் மேலும் பரவுகின்றன. மோர் குடித்தால் கொஞ்சம் வசதியாக இருக்கிறது. இதற்குக் காரணம் என்ன? என்ன சிகிச்சை செய்ய வேண்டும்?

விடை: உங்களுக்குத் தோன்றும் நோயை 'உஷ்ண அலைகள்'

என்று வர்ணிப்பதைப் பார்த்தால், நீங்கள் ஒரு தமிழ் எழுத்தாளர் என்று தோன்றுகிறது. உங்கள் பொருளாதார நிலையும் அதனால் மோசமாய்த்தான் இருக்க வேண்டும் என்று தோன்றுகிறது. உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் தொந்தரவுக்கும் சாதாரணப் பசிக்கும் அதிக வித்தியாசமில்லை. மோர் என்பதை மருந்தாக நினைத்து அந்த அளவிலே உபயோகிக்கிறீர்கள். அதை ஏராளமாயும் அடிக்கடியும் உபயோகித்தால், இந்த நோய் மாறலாம். இதற்கு உங்கள் பொருளாதார நிலை அநுமதிக்குமோ, என்னவோ! அதை என்னிடம் கேட்பதில் பயனில்லை.

வ. ஜெ.: அறுபது வயதுக்கு மேல் குழந்தை பிறக்குமா?

விடை: 'பெண்களுக்கா? ஆண்களுக்கா?' என்று சொல்லவில்லையே! பெண்களுக்கானல், 'இல்லை; பிறக்காது' என்று கண்டிப்பாய்ச் சொல்லி விடலாம். ஆனல், உலகத்தில் எத்தனையோ அதிசயங்களைக் காண்கிறோம். இப்படி விருத்த நாரிக்குக் குழந்தை பிறக்கும் அதிசயத்தையும் ஒரு வேளை காண நேரலாம். அறுபது வயதானவர் ஆணுயிருந்தாலும், அவர் மனைவியின் வயதைப் பொறுத்திருக்கிறது புத்திர பாக்கியம். ஆண்களுக்கு வயது எண்பதுக்கு மேலுங்கூடக் குழந்தைக்குத் தகப்பனாகும் திறமையுண்டு.

சுந்தரி கோபாலன்: என் குழந்தைக்கு வயது நாலாகிறது. அதற்குள்ளே சொத்தைப் பல் ஏற்பட்டிருக்கிறது. இது என் என்று சொல்ல முடியுமா? இதற்குப் பரிகாரம் உண்டா?

விடை: சொத்தைப் பல் தோன்றுவதற்குக் காரணத்தை நிபுணர்கள் இன்னமும் தெளிவாக ஆராயவில்லை. வைத்தியர்களைக் கேட்டால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதம் விடை சொல்வார்கள். இப்போதைக்கிருக்கும் என் கொள்கையை இங்கே சொல்கிறேன். சர்க்கரை போன்ற பொருள்களை அதிக அளவு கொடுப்பது; ஒரு வயதாகு முன்பே சாதம் ஊட்டுவது; பழ வகைகளைக் குறைந்த அளவில் கொடுப்பது, அல்லது கொடாமலே இருப்பது- இந்தப் பழக்கங்களே சொத்தைப் பல் தோன்றுவதற்குக் காரணம் என்று சொல்வேன். பழ வகைகளின் மூலம் ஸி- வைட்டமின் ஏராளமாய்க் கிடைக்கும்; பற்களும் சொத்தையாகாமல் இருக்கும்.

ஆ. கி. ரா.: அஸ்கா சர்க்கரைக்கும் பூராச் சர்க்கரைக்கும் உள்ள வித்தியாசம் என்ன? ஜனங்கள் என் அஸ்கா சர்க்கரையை விரும்புகிறார்கள்?

விடை: 'சிவப்பு ஓர் அழகு. சூடு ஒரு ருசி' என்ற பழமொழியைக் கேட்டிருப்பீர்கள். கறுப்பு என்பதற்கு எதிராகச் சிவப்பு என்று சொல்லுகிறோம். கறுப்பு எப்போதும் அருவருப்பை எழுப்புகிறது. கண்கள் சர்க்கரை விஷயத்தில் நம்மை ஏமாற்றுகின்றன. நிற வேற்றுமை நம் உள்ளத்தில் ஊறியிருக்கிறது. பூராச் சர்க்கரையில் அவசியமான உப்புக்களும் வைட்டமின்களும் இருக்கின்றன. இவைகளை நீக்கித் தூய்மை செய்த பொருள் அஸ்கா சர்க்கரை. அஸ்கா சர்க்கரை ஸ்படிகம் ஸ்படிகமாக வெகு அழகாயிருக்கும். அழகைக் கண்டு ஏமாற வேண்டாம்.

இந்தியாமீது பாகிஸ்தான் பழி கூறுகிறதே, அது நியாயமா?

சிந்து நீர் விவகாரம்

★

பாகிஸ்தானில் உள்ள மேற்குப் பஞ்சாப், சிந்து ராஜ்யங்களின் வழியாக ஓடி அரபிக் கடலில் சிந்துநதி சங்கமமாகிறது. அதன் ஐந்து உபநதிகளில் எதுவும் பாகிஸ்தானில் உற்பத்தியாகவில்லை. சிந்து நதி திபேத்தில் உற்பத்தியாகிக் காஷ்மீர், பாகிஸ்தான் இவைகள் வழியாகக் கடலில் கலக்கிறது. ஜீலம் நதியோ இந்தியாவில் தோன்றிக் காஷ்மீர், பாகிஸ்தான் வழியாகக் கடலை நோக்கிச் செல்கிறது. சட்லெஜ், பியாஸ் என்ற அதன் உப நதி இரண்டும் இந்தியா, பாகிஸ்தான் இரண்டு நாடுகளின் வழியாகவும் செல்கின்றன. இரண்டு நாடுகளின் வழியாகவுமே ரவி நதியும் ஓடிக் கடலில் கலக்கிறது.

சிந்து நதியின் தண்ணீரை அது ஆரம்பிக்கும் இடத்திலேயே தடைப்படுத்தித் தன் நீர்ப்பாசன வசதிக்கு இந்தியா இடைஞ்சல் செய்து வருகிறது என்று, பாகிஸ்தான் சில மாதங்களாக உலகம் முழுவதும் பிரசாரம் செய்து வருகிறது. இப்படிப் பாகிஸ்தானுக்குச் சிந்து நதி நீர் பயன்படாமல் தடுத்துவிட வேண்டும் என்று இந்திய சர்க்கார் ஒருபோதும் எண்ணியதில்லை. பாகிஸ்தானால் மிகுந்த கஷ்டங்களை அநுபவித்து வரும் காஷ்மீர் சர்க்கார்கூட இந்த மாதிரி ஒரு யோசனையை நினைத்ததில்லை.

சிந்து நதியின் மற்றோர் உபநதியான சீனுப் என்ற ஆறு, காஷ்மீரில் உற்பத்தியாகிறது. தியான்கர் என்னுமிடத்தில் இந்த நதியின் போக்கைத் திருப்பி விடுவதற்கு இந்தியா முயல்வதாகப் பாகிஸ்தான் சர்க்கார் குற்றம் சாட்டுகிறது. தியான்கர் என்ற இடம் மலைப் பாங்கான பிரதேசத்தில் இருக்கும் ஒரு சிறிய கிராமம். அதில் சீனுப் நதியின் போக்கை மாற்ற வேண்டுமானால், எழுபது மைல் நீளத்துக்குப் பெரிய 'டன்னல்' ஒன்று வெட்ட வேண்டியிருக்கும். போக்குவரத்து வசதிகளும் தபால் வசதிகளும் இல்லாத இந்த மலைப் பிரதேசத்தில் இத்தனை பெரிய ஒரு 'டன்னல்' வெட்டுவது அசாத்தியமான காரியம்.

பாகிஸ்தான் வழியே செல்லும் நதிகளும் அவற்றின் உற்பத்தி ஸ்தானங்களும் தனக்கே சொந்தமாக இருக்க வேண்டும் என்று பாகிஸ்தான் கட்சி பேசுகிறது. அப்படியென்றால், காஷ்மீரை மட்டுமல்ல; சிந்து நதி உற்பத்தியாகும் திபெத், காபூல் நதி உற்பத்தியாகும் ஆப்கனிஸ்தானம் இந்த இரண்டு நாடுகளையுங் கூடப் பாகிஸ்தான் கைப்பற்ற வேண்டியதுதான்!

காப்பிரைட்: ஸ்வதந்த்ரா (ஆங்கிலம்; 7-3-'53), சென்னை.

தன் பிரதேசத்தின் வழியே ஓடும் நதிகளின் உற்பத்திஸ்தானங்கள் அயல் நாடுகளில் இருப்பது பற்றி, உண்மையில் பாகிஸ்தான் கவலைப்படவில்லை. அப்படிக் கவலைப்பட்டால், பெரிய பெரிய நீர்ப்பாசன வசதிகளையும் ஹைட்ரோ மின்சார உற்பத்தி வசதிகளையும் செய்துகொள்ளப் பிரமாதமான திட்டம் ஒன்றை அது வகுத்து வேலை செய்யுமா?

பாகிஸ்தான் கைக்கொள்ளப் போகும் பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களில் ஒன்றைப்பற்றி, 'இந்தியன் அண்ட் பாகிஸ்தான் ஈயர்புக்' என்ற பிரசுரத்தில் உள்ள ஒரு குறிப்புத் தெளிவாக்குகிறது:

"விவசாய அபிவிருத்தியில் மிகப் பெரிய திட்டம் 'லோயர் சிந்து பாரிஜ்' என்ற அணைக் கட்டு. இந்தத் திட்டம் நிறைவேறினால், இரண்டு கோடியே 90 லட்சம் ஏக்கர் நிலம் நீர்ப்பாசனத்துக்கு வரும். அணைக்கட்டு வேலை முடிந்ததும், உணவுப் பொருள்களைக் கிழக்கு வங்காளம் போன்ற பற்றுக்குறைப் பிரதேசங்களுக்கு வேண்டிய அளவு விநியோகம் செய்வதுடன், வெளி நாடுகளுக்கும் பாகிஸ்தான் ஏற்றுமதி செய்யலாம்."

எந்நேரமும் பயமும் சந்தேகமும் கொண்டு தவிக்கும் ஒரு சர்க்காரின் திட்டமா இது!

சிந்துவின் தண்ணீர் ஸப்ளையில் 80 சதவிகிதம் இந்த விதமாகச் சிந்து, ஜீலம், சீனுப் இந்த மூன்றின் மூலமும் பாகிஸ்தான் வசம் இருக்கிறது. காஷ்மீர் வழியே செல்லும் இந்தத் தண்ணீரில் சிறு அளவையும் இந்தியாவுக்குத் திருப்பி அனுப்புவது சாத்தியமில்லை.

பஞ்சப் பிரதேசங்களான கிழக்குப் பஞ்சாப், ராஜஸ்தான் இவைகளுக்குக்கூட வழங்காமல், சட்லெஜ், ரவி இந்த இரண்டு நதிகளின் தண்ணீரையும் பாகிஸ்தான் நீர்ப்பாசனத்துக்கு இந்தியா உதவுவதையும் இங்கே கவனிக்கவேண்டும். பஞ்சாப் எல்லைக் கமிஷனின் தீர்ப்புப்படி 1947 - ஆகஸ்ட் 15-ஆம் தேதி முதல், செழிப்பும் நீர்ப்பாசன வசதிகளும் நிறைந்த மேற்குப் பஞ்சாப் பாகிஸ்தானிடமும், வறண்ட கிழக்குப் பஞ்சாப் இந்தியாவிடமும் இருந்து வருகின்றன என்பதையும் இங்கே நினைவில் வைக்க வேண்டும்.

இந்த எல்லைப் பிரிவின்படி, பழைய 16 நீர்ப்பாசனக் கால்வாய்களில் 12 பாகிஸ்தானுக்குக் கிடைத்தன; 3 கால்வாய்களே இந்தியாவுக்குக் கிடைத்தன. ரவி நதிக்குக் குறுக்கே செல்லும் 'அப்பர் டோப்' கால்வாய் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் பொது என்றும் தீர்மானமாயிற்று. சிந்து நதிகளின் நீரால் பாசன வசதி பெற்ற மொத்தம் எட்டரைக் கோடி ஏக்கர் பிரதேசத்தில், நிறையக் கால்வாய்களும் ஏராளமான வசதிகளும் உள்ள நாலரைக் கோடி ஏக்கர் நிலங்கள் இப்போது பாகிஸ்தானுக்குச் சொந்தமாக இருக்கின்றன.

இந்திய எல்லைக்கு உள்பட்ட கிழக்குப் பஞ்சாப், ராஜஸ்தான் இரண்டு பிரதேசங்களிலும் உள்ள நாலு கோடி ஏக்கர் நிலங்களுக்கு சட்லெஜ் நதி, பியாஸ் உபநதி, ரவி நதி இவைகளிடமிருந்து கிடைக்கும் சிறிது தண்ணீரையே பயன்படுத்த முடிகிறது. இந்தப் பிரதேசங்களில் உள்ள இரண்டு கோடி ஜனங்களுக்கு இந்த நீர்ப்பாசன வசதிக் குறைவு மிகவும்

கஷ்டமாக இருக்கிறது. இந்தப் பிரதேசங்கள் முழுவதுமே பருவ கால மழையை எதிர்பார்க்க வேண்டிய நிலையில் இருக்கின்றன. அப்படியிருந்தும் நாலு கோடி ஏக்கர் நிலங்களில் அத்தனையையும் பாசனத்துக்குக் கொண்டுவர முடியவில்லை.

சிந்து நதி நீர்ப்பாசனத்திட்டத்தால் பாகிஸ்தானில் பத்துக் கோடியே எட்டு லட்சம் ஏக்கர் நிலங்கள் நீர்ப்பாசன வசதிகளைப் பெறுகின்றன. இந்திய எல்லைக் குட்பட்ட கிழக்குப் பஞ்சாபிலோ ஐம்பது லட்சம் ஏக்கர் நிலங்கள் மட்டுமே பாசன வசதிகளை அடைய முடிகிறது. ஜீலம் நதி, சிந்து நதி இந்த இரண்டின் மூலமும் கிடைக்கும் பாசன வசதி, சிந்து நதிகளின் மொத்த நீர்ப்பாசன வசதியிலேயே மூன்றில் இரண்டு பங்காகும்.

சிந்து நதிகளின் நீர்ப்பாசன வசதியைப்பற்றிக் 'காலியர்ஸ்' என்ற அமெரிக்கப் பத்திரிகையில் டேவிட் லிலியென்தால் என்பவர் எழுதியிருப்பது இது:

"சிந்து நதிகளில் பெருக்கெடுத்தோடும் அளவற்ற தண்ணீரில் 20 சத விகிதத்தைத்தான் இப்போது பாசனத்துக்குப் பயன்படுத்துகிருர்கள். சிந்து நதியின் உபநதிகளில் பெருக்கெடுத்தோடும் தண்ணீரில் பெரும் பகுதியும் அரபிக் கடலுக்குள் பாய்ந்து வீணுகி விடுகிறது. இப்படிக் கடலில் கலக்கும் நீரைத் திருப்பி விவசாயத்துக்குப் பயன்படுத்திஞல், இந்தியா-பாகிஸ்தான் இரண்டு நாடுகளின் உணவுப்பொருள் தேவையும் பூர்த்தியாகும். வீணுகச் செல்லும் இந்தத் தண்ணீரை எப்படித் தேக்கிப் பயன்படுத்துவது என்பதே இன்றைய கேள்வி. இந்த வேலை மத சம்பந்தமானது அல்ல; அரசியல் தொடர்புடையதும் அல்ல. இரண்டு நாடுகளின் எஞ்சினீர்களும் வர்த்தகர்களும் பங்கெடுத்துக்கொண்டு உழைக்க வேண்டிய பெரிய வேலை. இதைச் செய்து முடிக்க இரண்டு நாடுகளும் தனித்தனியாக உழைத்தால் போதாது. இரண்டு நாடுகளும் நன்ருகத் திட்டமிட்டு ஒற்றுமையுடன் செய்து முடிக்க வேண்டும். அமெரிக்காவில் ஏழு மாகாணங்களும் சேர்ந்து இயற்றி முடித்த டென்னஸி பள்ளத்தாக்கு அணைக்கட்டைப்போலவே, சிந்து நதிகளின் நீர்ப்பாசனத் திட்டமும் உருவாக வேண்டும்."

இந்த மாதிரி ஒரு திட்டத்தை உருவாக்கத்தான், இரு நாடுகளின் நிபுணர்களும் அடங்கிய கூட்டுக் கமிஷன் ஒன்றை நிறுவலாம் என்று ஆரம்பத்தில் இந்தியா ஒரு யோசனையைத் தெரிவித்தது. பஞ்சாப் பிரிவினைக்கு முன்னே, சிந்து நதியின் நீரைப் பாசனத்துக்குப் பயன்படுத்துவதில் ஹிந்து, முஸ்லிம், சீக்கியர் எல்லாரும் எவ்விதச் சச்சரவும் இல்லாமல் ஒற்றுமையாக வேலை செய்து வந்தார்கள். ஹிந்து, முஸ்லிம், சீக்கியர்களின் கூட்டு முயற்சியும் தொழில் திறமையும் சேர்ந்து உருவானது, பஞ்சாபில் இன்றுள்ள நீர்ப்பாசனத் திட்டம். மீண்டும் அவர்கள் ஒன்றுபட்டு வேலை செய்தால், இந்தியா-பாகிஸ்தான் இரண்டு நாடுகளும் அளவற்ற பயனைப் பெறலாம்; சிந்து நதிகளின் நீர்வசதியை இரண்டு நாடுகளும் பூரணமாகப் பயன்படுத்த முடியும். இதை எண்ணியே 1948-ஆம் வருஷம் ஜூலை

யில் 'கூட்டு டெக்னிகல் கமிஷன்' ஒன்றை அமைக்க வேண்டும் என்று இந்தியா விரும்பியது.

கால்வாய்த் தண்ணீர்த் தகராறு கள் சம்பந்தமாக இந்தியா-பாகிஸ்தான் பிரதிநிதிகள் அடங்கிய மகாநாடுகள் பல நடைபெற்றன. ஆனல், போதுமான அளவுக்குப் பாகிஸ்தான் ஒத்துழைக்காததால் அவை தோல்வி அடைந்தன.

பிரிவினையாவதற்கு முன்பே பிரோஸ்பூருக்கு அப்பால் ஹரீக் பாரிஜ் என்ற அணைக்கட்டை அமைக்கும் திட்டத்தை உருவாக்கு வதற்கு இந்திய சர்க்கார் யோசித்துக் கொண்டிருந்தார்கள். இந்தியா-பாகிஸ்தான் பிரிவு ஏற்பட்டதும் 1948-ஆம் வருஷம் மே மாதம், சட்லெஜ் நதியின் போக்கை மாற்றுவதற்காகவோ அல்லது சிபால்பூர் கால்வாயுடன் இணைப்பதற்காகவோ, பிரோஸ்பூருக்கு அப்பால் ஒரு புதிய கால்வாயை வெட்டப் பாகிஸ்தான் முயற்சி எடுத்துக்கொண்டது. பாகிஸ்தானின் இந்தத் திட்டம் நிறைவேறினல் பிரோஸ்பூர் அணைக்கட்டுக்கு இடைஞ்சல் ஏற்படுவதுடன் இந்தியாவில் ஏராளமான பிரதேசங்களுக்கு நீர்ப்பாசன வசதி குறைந்துவிடும் என்பதை எண்ணி, இந்திய சர்க்கார் ஹரீக் பாரிஜ் திட்டத்தைத் தொடங்கியது.

தன்னுடன் காஷ்மீர் சேர வேண்டும் என்ற கோரிக்கையையும் சிந்து நதி விவகாரத்தையும் பிணைத்தே இப்போதெல்லாம் பாகிஸ்தான் பிரசாரம் செய்து வருகிறது. இந்திய சர்க்கார் இப்படி ஒருபோதும் இரண்டையும் பிணைக்கவில்லை. அப்படிப் பிணைத்திருந்தால், 'பாகிஸ்தானுடன் காஷ்மீர் இணையுமாயின் மாதோபூரில் உள்ள சிந்து நதியின் அணைக்கட்டைப் பாகிஸ்தானுக்குப் பயன்படாமல் செய்வோம்' என்று இந்திய சர்க்கார் பலமாய் வாதித்திருக்க முடியும். ஆனல் கால்வாய்த் தகராறு விஷயத்தில் இந்தியா தன் நேர்மையை ஒரு சமயங்கூட இழக்கவே இல்லை.

சிந்து நதியின் தண்ணீர் விநியோகம், கால்வாய் அமைப்பு இந்த விஷயங்களில் சட்ட பூர்வமாகத் தனக்குள்ள பாத்தியதையை இந்தியா என்றும் வற்புறுத்தியதில்லை. தன் எல்லைக்குட்பட்ட ராஜஸ்தான், பஞ்சாப் இந்த இரண்டு வறண்ட பிரதேசங்களுக்கும்பாய்ச்சக்கூடிய சிந்துவின் தண்ணீரைக்கூடப் பாகிஸ்தானுக்காக இந்தியா தியாகம் செய்திருக்கிறது. பரஸ்பர உதவியும் சௌஜன்ய நிலையும் இரண்டு நாடுகளுக்குமிடையே நிரந்தரமாக நிலவ வேண்டும் என்பதே இந்திய சர்க்காரின் எண்ணம். இந்த விஷயத்தில் இரண்டு நாட்டின் தொழில் நுணுக்க நிபுணர்களும் கூடிக் கலந்து தங்களுக்குள் ஓர் உடன்பாட்டுக்கு வரவேண்டும். பாகிஸ்தான் கோருவது போல இதைச் சர்வதேசக் கோர்ட்டிடம் ஒப்படைப்பது சரியல்ல. என்றாலும், இந்த விவகாரத்தைச் சமரச முறையிலேயே தீர்த்துக் கொள்ளவேண்டும் என்பது இந்திய சர்க்காரின் எண்ணம். பாகிஸ்தான்-இந்தியா இரண்டு நாடுகளின் நீர்ப்பாசன வசதிகளையும் பூர்த்தி செய்யும் அளவுக்குச் சிந்து நதிகளில் ஏராளமாகத் தண்ணீர் இருக்கிறது. இதை ஒற்றுமையுடன் திட்டமிட்டுப் பயன்படுத்தினல், இரண்டு நாடுகளுமே சுபிட்சமடையும்.

கற்பனைத் தோழன்

ஃப்ளாரன்ஸ் பிட்மான் ஹாட்க்ஸன்

சிறுவர் மனத்தை ஆராய்வதில் ஈடுபட்டவர் இதை எழுதியவரின் கணவர். குழந்தைகள் சில சமயம் கற்பனையாகத் தோழர்களைச் சிருஷ்டித்துக்கொள்வலாம். அதைக் கண்டு பெற்றோர் அஞ்சக் கூடாது. காரணத்தை அறிந்துகொண்டு அநுதாபத்தோடு நடந்துகொள்ளவேண்டும். அதை விளக்கும் இந்த நிகழ்ச்சி உண்மையிலேயே இவர்கள் வீட்டில் நிகழ்ந்ததாம்.

எங்கள் கடைசிப் பையன் ராபின், எங்கள் வீட்டின் கொல்லைப்புற வழியாகக் கிளெண்டி என்ற ஒரு கற்பனைச் சிறுவனைத் தன்னுடன் அழைத்து வந்து இப்போது இரண்டு வருஷங்களுக்குமேல் இருக்கும். இரண்டு பேருக்கும் வயது மூன்றுதான். கிளெண்டியும் இனி எங்களுடன்கூட இருக்கப் போவதாக ராபின் கூறினன். அதன் விசேஷம் முழுவதும் எனக்கு அப்போது புலப்படவில்லை.

"அப்பாவின் கட்டிலில் கிளெண்டி படுக்கக்கூடாது என்ருல், என், அவன் அந்த ரகசிய அறையில் படுத்துத் தூங்கட்டுமே! அங்கே அவனுக்குப் படுக்கைகூடப் போட வேண்டாம்" என்று கிளெண்டிக்கு ராபின் படுக்க இடம் தயார் செய்தான்.

"ராபின், நீ இதற்கு முன் அழைத்து வந்த பையன்களையெல்லாம் இங்கே சிறிதும் வைத்துக் கொள்ள முடியவில்லையே! அவர்களைப் போல் பயமுறுத்தாமல், இந்தக் கிளெண்டியாவது சுமாராக இருப்பானு?" என்று கேட்டேன்.

"சேச்சே! கிளெண்டி அவர்களைப்போல் பயமுறுத்த மாட்டான். இவனிடம் எனக்குப் பயமே கிடையாது; என்னிடம் இவனுக்கு ரொம்ப ஆசை" என்ருன் ராபின் ஆவலோடு.

நான் காரட் தோல் சீவிக் கொண்டிருந்தேன். 'சரி; போனால் போகிறது. அந்த மட்டும் நல்லது தான். இதுவரை ஒரே பயம் என்று இருந்தது போல இல்லாமலிருந்தால் போதும்' என்று எண்ணிக் கொண்டேன்.

ராபின் அப்படி ஒன்றும் பயந்து நடுங்கிக்கொண்டிருக்கும் குழந்தை இல்லை. உற்சாகமாய் விளையாடி விட்டு வரும் மற்றெல்லாக் குழந்தைகளையும் போலத்தான் அவன் தோன்றினன். ஆனல், இப்படிப் பட்டவன் திடீரென்று செத்துப் போவதைப்பற்றிக் கவலைப்படுவது, வேண்டாதவற்றையெல்லாம் பற்றிப் பயப்படுவது, எதற்கெடுத்தாலும் அழுவது ஆகிய செயல்களில் ஈடுபட்டான்.

காப்பிரைட், பேரெண்ட்ஸ் மகஸீன் (ஆங்கிலம்; டிசம்பர் '52),
சிக்காகோ, ஐக்கிய அமெரிக்கா.

சாவைப்பற்றிக் கவலைப்பட்டது என்னவோ நியாயந்தான். ஏனென்ருல், இரண்டு மாதங்களுக்கு முன்புதான் என் தாய் திடீரென்று காலமடைந்தாள். எங்கள் பெரிய பையன் ஜாக்குக்கு வயது 15; ரிக்குக்கு வயது 11. பாட்டி செத்துப் போய்விட்டாள் என்று தெரிந்துகொள்ள அவர்கள் இரண்டு பேருக்கும் வயதாகிவிட்டது. ராபினே அப்படி இல்லை. பாட்டி போய்விட்டாள் என்ற செய்தியை அவன் நம்பினால் தானே! பேரனும் பாட்டியும் இணை பிரியாமலிருந்தவர்கள். இப்போது பாட்டி இருந்த இடம் சூனியமாகி விடவே, ராபினுல் அதைச் சகிக்க முடியவில்லை. அந்தச் சூனியமான இடத்தில் கண்ட கண்ட கற்பனைப் பிராணிகளும் வேண்டாத பயங்களும் வாசம் செய்யத் தொடங்கின.

கிளெண்டியைப்பற்றி ராபின் பிரமாதமாக வர்ணித்தான். அவன் படிப்பான் என்றும், அவன் போகாத இடமில்லை என்றும், அம்மா வயிற்றிலிருக்கும் போதே-அதாவது பிறப்பதற்கு முன்பே-எத்தனையோ மோட்டார் விபத்துக்காளாகியும் ஒரு சிறு காயமும் இல்லாமல் அவன் பிழைத்திருக்கிருனென்றும் சொல்லி, ராபின் எங்களை ஒரே அடியாய்த் திகைக்க வைத்தான். இவ்வளவு சாமர்த்தியமுள்ள 'பைய'னை யாராவது அலட்சியம் செய்ய முடியுமா? பெரிய பிள்ளைகள் வியப்பு மேலிட்டவர்களாக இந்த அதிசயமான கிளெண்டியைப்பற்றிக் கேட்கக் கேட்க, ராபின் மேலும் மேலும் கிளெண்டியை உற்சாகத்துடன் வர்ணிக்கத் தொடங்கினன்.

ராபின் இந்த மாதிரி பேசுவது புதிதல்ல. என் கணவருக்கு மூன்று வயதாயிருந்தபோது இப்படித் தான் டிக் விக்கென் என்ருெரு கற்பனைத் தோழன் அவருக்குக் கிடைத்தானும். அவர் அந்தப் பையனைப்பற்றி ரொம்பப் பேசுவாராம். இருபத்தைந்து வருஷங்களுக்குப் பிறகு எங்கள் மூத்த பிள்ளை ஜாக், இதே மாதிரி ஒரு துஷ்டன் தன்னைப் பின்பற்றி வருவதாக மூன்று வயதில் அடிக்கடி சொல்லிக்கொண்டிருந்தான். இப்போது ராபினுக்கும் அதே வயதில் இந்த அதிசயமான கிளெண்டி என்ற தோழன் ஒருவன் கிடைத்திருக்கிருன். விஷயம் ஒருவாறு விளங்கியதும், என் கணவர் புன்னகை புரிந்தார்.

இந்த விதமாகக் கிளெண்டி எங்கள் குடும்பத்தில் ஒருவனுக வந்து சேர்ந்தான். அவன் ஒரு கற்பனைப் பையனுகத் தோன்ருமல், மற்ற எல்லாரையும் போல் உயிரும் உடலும் உள்ளவனுகவே தோன்றினுன். எங்கள் குடும்ப விஷயங்களில் அவனுக்கு மிகுந்த சிரத்தை இருந்தது. அதிலும் ராபின் விஷயத்தில் கேட்கவே வேண்டாம். ராபின் கண்ணுல் காணுத பூச்சிகளை, கிளெண்டி ஒரே நிமிஷத்தில் கண்டு பிடித்துக் கொன்றுவிடுவான். கிளெண்டி துணையாக இருக்கிற தெம்பில் ராபினுக்கு முன்பிருந்த பயம் எல்லாம் போய்விட்டது. அவன் அருகில் எப்போதும் கிளெண்டி இருந்ததால், அவன் உற்சாகத்துக்குக் குறைவில்லாமலிருந்தது. சாவைப்பற்றிய கவலை ஒன்று தான் இன்னும் அவனை முற்றும் விட்டபாடில்லை. நல்ல வேளையாகக் கிளெண்டியின் பெற்ருேர்

இரண்டு பேரும் கார் விபத்தில் அகப்பட்டு இறந்து போனார்கள் என்ற செய்தி வந்தது. அதற்குப் பிறகு கிளெண்டியே எங்களை விட்டுக் கொஞ்ச நாள் விலகிப் போயிருந்தான். "அப்பா அம்மா இரண்டு பேரும் செத்துப் போய்விட்டால், கிளெண்டி அழாமல் இருப்பானா?" என்றான் ராபின். ஆனால் அந்தச் செய்தியைக் கேட்டு, ராபின் கொஞ்சமும் வருந்தவில்லை. ஏனென்றால், கிறிஸ்துமஸ் பண்டிகை அன்று காலையில் ஒரு ஜோடி புது அப்பா அம்மா பொம்மைகளை அவன் கிளெண்டிக்காக வாங்கி வைத்துவிட்டான்!

"மூன்று வயதாகும்போது குழந்தைகளுக்கு இப்படித்தான் யாராவது ஒரு தோழன் வேண்டியிருக்கும். அப்போது அவர்கள் தாமாகவே தமக்கு வேண்டிய தோழர்களைக் கற்பனை செய்து கொள்வார்கள்" என்றார் என் கணவர்.

"ஆனால் ஜாக்கின் தோழன் இருந்தானே, அந்தக் கற்பனை மனிதனைப்பற்றி என்ன சொல்லுகிறீர்கள்? அவனை வைத்துக் கொண்டு ஜாக் கொஞ்ச நாள் என்ன பாடு பட்டான்!" என்றேன்.

"அப்போது ஜாக்குக்கு ஒரு நண்பன் தேவையாக இல்லை; விரோதிதான் தேவையாக இருந்தான். நாம் இடம் மாற்றி இங்கே வந்தோம் இல்லையா? பழகிய இடம், ஆசையுள்ள தாத்தா பாட்டிகள் எல்லாரும் போய்விடவே, அவனுக்கு எதுவும் பிடிக்காமல் போய்விட்டது. அப்பாடா! அவன் ஒவ்வொரு சமயம் பிடித்த முரண்டும் பிடிவாதமும் பற்றி உனக்கு நினைவிருக்கிறதா? அவனுக்கு ஏதாவது பிடிக்காத போதெல்லாம் வைவதற்கும் பழி சுமத்துவதற்கும் யாராவது ஒருவர் வேண்டும் இல்லையா?" என்றார் கணவர்.

அந்தக் கற்பனைத் துஷ்டனால் ஜாக் பட்ட கஷ்டம் கொஞ்ச நஞ்சமல்ல. பீரோவின் இடுக்கில் ஒளிந்துகொண்டு ஜாக் தனியாக இருக்கும்போது, இரவில் அவனை அந்தத் துஷ்டன் பயமுறுத்துவான். அவனை எப்படி ஒழிப்பது என்று தெரியாமல் நாங்கள் விழித்தோம். கடைசியில் ஒரு நண்பரிடம் யோசனை கேட்டபோது, அவர் வெகு சாமர்த்தியமாய் ஜாக்கைக் கூப்பிட்டு, "இதோ பார், ஜாக், அந்த மனிதனிடம் உனக்கென்ன பயம்? நீ இல்லையா அவனுக்கு எஜமான்? அந்தத் தடியனை உள்ளே வரவிடாமல் விரட்டியடித்து விடு" என்று சொன்னார். ஜாக்குக்கு எங்கள் நண்பரிடம் ரொம்ப மதிப்புண்டு. அதுவும் 'விரட்டியடித்து விடு' என்று அவர் சொன்ன வார்த்தைகள் அவனுக்கு மிகவும் களிப்பையளித்தன. எங்கள் நண்பருடைய உபாயம் பலித்தது. அந்தத் 'துஷ்டன்' ஒரு வழியாய் எங்களை விட்டு ஒழிந்தான்.

"இந்தக் கிளெண்டியை எப்படி விரட்டுவது?" என்றேன்.

"எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான். தானே அப்புறம் போய் விடுவான்" என்றார் என் கணவர்.

ஆனால் வெகு நாள் வரையிலும் கிளெண்டி போகிற வழியாகத் தெரியவில்லை. என்றாலும், கிளெண்டி இருப்பது எங்களுக்கே சில சமயம் வேடிக்கையாகவும் உற்சாகமாகவும் இருந்தது.

சில காலத்துக்குப் பிறகுதான் கிளெண்டி நெடுநாள் வரைக்கும் எங்களை விட்டுப் போகாமல் இருந்ததன் காரணம் விளங்கிற்று.

ராபின் ஒரு நாள் தன் தோழன் ஒருவனைப் பார்க்கச் சென்றிருந்தான். பகலெல்லாம் அங்கேயே இருந்துவிட்டுச் சாயங்காலம் திரும்பியதும், "அம்மா" என்று கத்திக்கொண்டே என்னிடம் ஓடிவந்தான். "அம்மா, செத்துப் போவது என்றால் என்ன என்று நீ எனக்குச் சொல்லவே இல்லையே! புச் இருக்கிறானே, அவனுடைய அத்தை ரோஸ் செத்துப் போய் விட்டாளாம். அவளைப் பெட்டியில் வைத்திருந்தார்கள். அவள் அழகாய்த் தூங்குவது போலவே இருந்தாள். கொஞ்சங்கூட விகாரமாயில்லை. நம்ம பாட்டி செத்துப் போனபோதுகூட எப்போதும் போலவே இருந்தாளா? நீ சொல்லவே இல்லையே. அவளை நான் பார்ப்பதற்குக்கூட நீ விடவில்லையே! புச் வீட்டில் எல்லாரும் அழுதார்கள். நானும் அவர்களுடன் சேர்ந்து அழுதேன்" என்றான். என்னிடம் நெருங்கி வந்து உட்கார்ந்துகொண்டு, "ஏன், அம்மா? நானா பாட்டி செத்துப் போன போது நீ ஏன் அப்படி அவர்களைப் போல் அழவில்லை?" என்று கேட்டான்.

"ஏன்? நான் அழுதேனே!" என்றேன் மெதுவாய்.

"இல்லை; நீ ஒன்றும் அப்படி அழவில்லை. ஏன் என்னைக் கட்டிக்கொண்டு நீ அழவில்லை?" என்று அவன் திடீரென்று என்னைக் கோபித்துக்கொண்டான்.

எனக்கு இப்போது எல்லாம் விளங்கிவிட்டது. செத்துப் போவது என்றால் என்ன என்பதை அவனுக்கு நாங்கள் தெரியப்படுத்தவில்லை. அவன் எதிரில் அழாமலிருந்ததற்குப் பதிலாக ஓவென்று கதறி அழுதிருந்தால், அவனுக்கு ஒருவாறு அது விளங்கியிருக்கும்.

"பாட்டி செத்துப் போனாள் என்றால், நாம் அழ வேண்டாமா? அவன் எதிரில் நாம் ஒரு பொட்டுக் கண்ணீர்கூட விடவில்லையே! 'இறந்து போன பாட்டியை அவனும் கண்ணால் பார்க்கட்டும்' என்று நமக்கு ஏனோ தோன்றவில்லை. இந்தச் சிறு வயதில் பிணத்தைப் பார்ப்பதில் அவனுக்கென்ன பயம் தோன்றியிருக்கப் போகிறது?" என்று என் கணவரிடம் சொன்னேன்.

"உண்மை. இறந்து போனவர்களைக் குறித்துக் கண்ணீர் வடிப்பது நியாயந்தான். ராபினைக் காப்பாற்றுவதாக நினைத்துக்கொண்டு, நாம் பேசாமல் இருந்துவிட்டோம். அவனைத் தனியாக விட்டுவிட்டோம். அவன் மனத்துக்கு எப்படியிருந்திருக்கும், பாவம்!" என்றார் என் கணவர். இதனாலேதான் கிளெண்டியைப் போல் அவனுக்கு ஒரு கற்பனைத் தோழன் வேண்டியிருந்தான். இனிமேல் கிளெண்டி அதிக நாள் எங்களுடன் தங்க மாட்டான் என்று நான் மனம் தெளிந்தேன்.

சில நாள் கழித்து ஒரு நாள் ராபின் வெகு உற்சாகத்தோடு வெளியிலிருந்து திரும்பி வந்தான். ஆனால் சிறிது நேரத்துக்கெல்லாம் முகத்தில் வேதனைக் குறியுடன் என்னைத் தேடி வந்து, "அம்மா, ஒரு பயங்கரமான சமாசாரம் தெரியுமா? கிளெண்டி செத்துப் போய்விட்டான்" என்றான். இப்படிச் சொல்லிவிட்டுக் கவலையுடன் பேசாமல் நின்றான்.

எனக்கு என்ன சொல்வதென்று தெரியவில்லை.

"போனால் போகிருன். அதையே இப்போது நினைத்துக் கொண்டிருக்காதே! ஒருவேளை கிளெண்டி செத்துப் போகவே இல்லையோ என்னவோ, பார்க்கலாம்" என்றேன். இதைக் கேட்டவுடன், ராபின் மனம் தேறியவனாய்ச் சென்ருன். சிறிது நேரத்துக்கெல்லாம் திரும்பி வந்து உற்சாகத்துடன், "அம்மா, நீ சொன்னபடியேதான் கிளெண்டி நன்ருய்த் தூங்கிக்கொண்டிருந்தான்; அவ்வளவுதான். அவன் செத்துப் போகவே இல்லை" என்ருன். நான் தவறு செய்தேன் என்று தெரிந்தது. கிளெண்டி செத்துப் போய்விட்டான் என்று ராபின் ஒரு வழியாய் முடிவு கட்டியிருந்தான். நானும் அதை அப்படியே ஒப்புக்கொண்டு அதற்குத் தகுந்தபடி நடந்திருக்க வேண்டும். இனிமேல் அவன் மறுபடியும், 'கிளெண்டி! கிளெண்டி' என்று நச்சரிக்க ஆரம்பித்து விடுவானே!

மறுபடியும் ராபினும் கிளெண்டியும் இணைபிரியாத நண்பர்களானர்கள். கிளெண்டி எங்களுடனேயே இருந்தான். ஆயினும், சில மாதங்களுக்குப் பிறகு மீண்டும் கிளெண்டிக்கு ஏதாவது விபத்து நேர்ந்து செத்துப் போய்விட்டான் என்று ராபின் சொன்னாலும் சொல்லுவான். அப்போது நிஜமாகவே நாம் அவனுக்காக வருத்தப்பட்டுக் கண்ணீர் வடித்துவிட வேண்டியதுதான் என்று தீர்மானித்துக்கொண்டேன்.

க்விஸ் விடை

1. புதனும் சுக்கிரனும். 2. அண்டாரெஸ் என்னும் நட்சத்திரம். இது விருச்சிக ராசியில் இருக்கிறது. 3. முறையே இங்கிலாந்து, ருஷியா, பாகிஸ்தான், எகிப்து இந்த நாடுகளைச் சேர்ந்தவை. 4. தப்பு. செங்கடலையும் மத்தியதரைக் கடலையும் இணைப்பது சூயஸ் கால்வாய். 5. பாம்பின் கண்ணுக்குமேல் இமை கிடையாது. இதனால் தான் பாம்பு கண்ணை மூட முடியாது. 6. முறையே இங்கிலாந்து, ருஷியா, ஐக்கிய அமெரிக்கா - இந்த நாடுகளை. 7. முறையே லெனின்கிராட் என்றும், இஸ்தான்புல் என்றும் குறிக்கிறர்கள். 8. பாரதியாரின் 'குயில்' என்னும் சிறு காவியத்தில் வருகிறது. 9. ஆந்திரர்களுக்கு இப்போது சித்திரை மாதம் நடக்கிறது. அவர்களுடைய சித்திரை மாதப் பிறப்பு - அதாவது விஜய வருஷப் பிறப்பு - 16-3-53-ஆம் தேதி. அது நம்முடைய பங்குனி மாதம் 3-ஆம் தேதியே பிறந்துவிட்டது! 10. பங்குனிமாதக் கடைசியில். 11. பலா, அத்தி, ஆல் இந்த மூன்றும். 12. நயாகரா நீர்வீழ்ச்சி மாத்திரம் வட அமெரிக்காவில் இருக்கிறது. கெர்ஸெப்பா நீர்வீழ்ச்சி இந்தியாவில் இருக்கிறது. 13. இருபத்திரண்டு கஜம்.

இவரும் அவரும்

★

ஸோவியத் ருஷியாவின் பிரதம மந்திரியும் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசியுமாயிருந்த ஸ்டாலின் காலமானார். அவருடைய இரண்டு பதவிகளையும் முதலில் ஏற்று, பிறகு கட்சியின் பொதுக் காரியதரிசி பதவியை மட்டும், தம் வலது கையான தோழர் ஒருவருக்கு அளித்துவிட்டார் மாலன்காவ்.

காலமான ஸ்டாலின்

முழுப்பெயர்: ஜோஸஃப் விஸ்ஸாரியனேவிச் ட்ஜுகாஷ்வில். பின்னால் வைத்துக் கொண்ட மறுபெயர் 'எஃகு மனிதன்' என்று பொருள் தரும் 'ஸ்டாலின்' என்பது.

பிறப்பு: 1879 டிசம்பர் 2.

மரணம்: 1953 மார்ச் 5.

மூலம்: தந்தை செருப்புத் தைக்கும் தொழிலாளி. இடம் ஜார்ஜியா மாகாணத்தில் கோரி என்பது.

தேகவாகு: உயரம் ஐந்தடி நாலங்குலம். நிறை 150 முதல் 190 பவுண்டு.

குடும்பம்: முதல் மனைவி காலமானபின் இரண்டாவது மனைவி. அவளும் காலமாகிவிட்டாள். முதல் மனைவிக்குப் பிறந்த ஒரு மகன் உண்டு.

சிறுவயதிலே துறுதுறுப்பும் குறும்பும் மிகுந்தவர் ஸ்டாலின். தகப்பனார் சற்றுக் கோபக்காரர்; அடித்துவிடுவார்.

தாய்க்கு மிகவும் செல்லம். ஸோஸோ என்ற செல்லப் பெயரால்தான் இவரை அவள் அழைப்பாள்.

டிப்ளிஸ் நகரிலே பாதிரி பள்ளிக்கூடத்தில் படிக்க இவரை அனுப்பினார்கள். சாப்பாடும் வாசமும் அங்கேதான். நான்கு வருஷம் வெகு ஊக்கத்தோடு நாணயமாகப் படித்தார். குறும்பு என்பதே இல்லை; மிகுந்த பதவிசு.

ஜாரின் ஆட்சிக்கு விரோதமாய்ச் சதிகள் வலுத்தன. போலீஸ் அமல் வலுத்தது. டிப்ளிஸ் பாடசாலையிலிருந்து ஸ்டாலினின் சகாக்களான மாணவர் இருவரைப் போலீஸ்காரர் பரபர என்று இழுத்துச் சென்றார்கள். அந்தக் கொடுங்கோல் ஆட்சி ஸ்டாலினின் மனத்தைப் பெரிதும் கிளறிவிட்டது. மாணவர்களுக்குள்ளே இவர் ஒரு புரட்சிக் கமிட்டி அமைத்தார். அதற்குத்

தலைவரானார். பாடசாலை அதிகாரிகள், இவரை அடக்க முடியவில்லை; வெளியேற்றி விட்டார்கள்.

1897-இல் டிப்ளிஸ் நகரில் ரகஸ்யப் புரட்சிக்காரர்களுடன் இவர் சேர்ந்தார். தொழிலாளர் கிளர்ச்சியைத் தொடங்க ஒரு யுக்தி செய்தார். 20,000 தொழிலாளரைக் கொண்ட 'இருள் பஜார்' என்ற ஒரு தொழிற்சாலையில் வேலைக்கமர்ந்தார். ஒழுங்காக மூட்டை தூக்கிக் கூலி வாங்கினார். சில நாளைக்குள்ளே சம்பள உயர்வு கேட்டார். நெடு நாள் தொழிலாளிகூட அங்கே இப்படிச் சம்பள உயர்வு கேட்பதில்லை. இந்த அபாயமான ஆசாமியை நிர்வாகிகள் வேலையை விட்டுத் தள்ளினார்கள். தொடங்கி விட்டது வேலை நிறுத்தம். கடைசியில் அது வெற்றியும் பெற்றது.

புரட்சிச் செயல்கள் புரிந்ததற்காக, மூன்று வருஷகாலம் இவரை ஸைபீரியாவுக்கு அனுப்பினார்கள். தண்டனைக் காலம் முடியுமுன்பே அங்கிருந்து இவர் தப்பி ஓடிவிட்டார்.

1905-இல் பின்லந்தில் புரட்சிக்காரரின் ரகஸ்யக் கூட்டம் ஒன்று நடந்தது. ஸ்டாலினும் அதற்குச் சென்றார். அங்கேதான் புரட்சித்தலைவர் லெனினை, ஸ்டாலின் முதல் முதலாகச் சந்தித்தார். அவருடைய குள்ள உருவத்தைக் கண்டு இவருக்கு ஏமாற்றமாய்ப் போயிற்று. ஆனால், அவருடைய பேச்சைக் கேட்டதும், பிரமித்து அவரிடம் வசியமாகிவிட்டார்.

கட்சி நிதிக்காகச் சர்க்கார் பணத்தைப் பலமுறை இவர் கொள்ளையிட்டார்; பல முறை சிறைப்பட்டார். அநேகமாக ஒவ்வொரு தடவையும் தப்பியோடி விடுவார்.

'ப்ராவ்டா' என்ற பத்திரிகையை ஆரம்பித்து முதலில் நடத்தியவர் இவரே.

1917-இல் மலினோவிஸ்கி என்ற ஒரு துரோகி இவரைக் காட்டிக் கொடுத்ததால், ஆயுள் பரியந்தம் இவர் தீவாந்தர சிட்சை பெற்றார். இவரை ஸைபீரியாவுக்கு அனுப்பினார்கள். கடுமையான பனிச்சாரலில் நாலு வருஷம் வாடி வதங்கினார். இந்தத் தடவை தப்பித்தோடும் மார்க்கமே இல்லை.

உள்நாட்டுப் புரட்சியால், ஜார் முடி துறந்தார். புரட்சிச் சர்க்கார் ஸ்டாலினையும் பிறரையும் விடுவித்தது. ஆனால், அது கம்யூனிஸ்ட் புரட்சி இல்லை; ஜனநாயகப் புரட்சி.

லெனின் கோஷ்டியார் இன்னும் ஓயவில்லை. அவரும் அவர் கோஷ்டியார் பலரும் அஞ்ஞாதவாசம் புரிய நேர்ந்தது. ஸ்டாலின் மட்டும் உள் நாட்டிலேயே இருந்துகொண்டு சலியாது உழைத்தார். சரியான காலத்தில், லெனினும் பிறரும் மீண்டும் வந்து சேர்ந்துகொண்டார்கள். லெனினின் புரட்சி வெற்றி பெற்றது. ஸோவியத் சர்க்காரும் அமைந்தது.

அந்தச் சர்க்காரின் தலைவர் லெனின். ஸ்டாலினுக்குக் கட்சியின் பொதுக் காரியதரிசி பதவியை அவர் அளித்தார். லெனின் 1924-இல் காலமானார். அதற்குப் பிறகும் ஸ்டாலின் ஸோவியத் சர்க்காரில் 1941 மே வரைக்கும் பதவி எதுவும் ஏற்கவில்லை.

1941-இல் பிரதம மந்திரி பதவியை மாலடாவ் ராஜீநாமாச் செய்தார். பொதுக் காரியதரிசி பதவியோடு, பிரதம மந்திரி பதவி

யையும் ஸ்டாலின் ஏற்றுக்கொண்டார். இரண்டாவது யுத்த காலத்தில்தான் இவருடைய திறமையும் நவீன ருஷியாவின் வலிமையும் உலகத்துக்குப் புலனாயின. யுத்த வெற்றி பெற்ற பெருமையில் ஸ்டாலினுக்குப் பெரும் பங்கு உண்டு.

ஸ்டாலினைப்பற்றி, அமெரிக்கரும் பிறரும் இன்று குறை சொல்வதற்கெல்லாம் மனத்தாங்கலும் எரிச்சலுமே காரணம்.

டெஹ்ரான் மகாநாட்டில் ஸ்டாலினைச் சந்தித்த பின் சர்ச்சில் சொன்னதைப் பாருங்கள்: "அவரைப் பார்ப்பதற்கு முன், அவர் ருஷிய அரசாங்கத்தைக் கைப்பற்றிய ஒரு கொள்ளைக்காரர் என்றே நாங்கள் நினைத்திருந்தோம். அந்த நினைப்புத் தவறு. மிக உயர்ந்த அறிவாளி அவர். விரும்பினால் எவருடைய உள்ளத்தையும் கவரும் விதம் நடந்துகொள்ள அவருக்குத் தெரியும்."

"மொத்தத்தில் மதிப்புக்கு உரியவர்தான்" என்று சொன்னார் ஜனாதிபதி ரூஸ்வெல்ட்.

ஜனாதிபதி பதவிக்கு வரக்கூடியவர் என்று உலகெங்கும் மதித்த வெண்டல் வில்கி, ருஷியாவில் தாம் கண்டதை 'ஒரே உலகம்' என்ற நூலில் எழுதியிருக்கிறார். அதில் ஸ்டாலினைப்பற்றி உள்ள சில குறிப்புகளைக் கவனியுங்கள்:

"அவர் கடின உழைப்பாளி; பிடிவாதக்காரர்; பிறரை ஆட்டி வைக்கக் கூடியவர்.

"அவர் ஒரு பெரிய மனிதர்; பேடிசங்கள் இல்லாதவர்; பாசாங்குகள் செய்யாதவர். செயற்கையான வேஷங்கள் போட்டுப் பிறரை மயக்க அவர் முயலவில்லை. நகைச்சுவை மிகுந்தவர்."

ருஷிய மக்களுக்கெல்லாம் ஒன்றுமே தெரியாதபடி இருட்டடிப்புச் செய்து, அவர்களை அடிமைப்படுத்தி, ஸ்டாலின் குரூரமாக ஏதேச்சாதிகாரம் புரிந்தார் என்றெல்லாம் இன்று அமெரிக்கர் பிரசாரம் செய்கிறார்கள். இது உண்மையாகுமா?

ஸோவியத் ருஷியாவில் தாம் கண்ட அருமையான சில கலாசாலைகளையும் புஸ்தகசாலைகளையும் ஸ்டாலினிடம் வில்கி பாராட்டிச் சொன்னாராம். அப்போது, "மிஸ்டர் ஸ்டாலின், நீங்கள் இப்படியே ருஷிய மக்களுக்குத் தொடர்ந்து கல்வி புகட்டிக்கொண்டிருந்தால் முதலில் என்ன சங்கதி நடக்கும் தெரியுமா? உங்கள் பதவிதான் போய்விடும்" என்றார் வில்கி.

ஸ்டாலின் சிறிதும் கோபமோ, கலவரமோ அடையாமல், 'கலகல' என்று வாய் நிறையச் சிரித்தார்.

இது நடந்தது 1942-இல். இந்த 1953-இல் ஸ்டாலின் காலமாகும் வரையில் அவர் பதவி இழக்கவும் இல்லை; எண்ணற்ற ருஷிய மக்களுக்கு அவரிடம் இருந்த அன்பும் மதிப்பும் குன்றவுமில்லை.

உலக சரித்திரத்திலே பல காலம் பெயர் மங்காது ஒளி செய்துகொண்டிருக்கக் கூடிய சிலருள் ஒருவர் ஸ்டாலின்.

மற்றவன் குற்றம்

மற்றவனுடைய குற்றமும் அவனுடைய கார் விளக்கைப் போலவே மிகப் பிரகாசமாய் நமக்குத் தெரிகிறது.

—'தி ஃபோக்ஸ் - மான்'

முழுப் பெயர்: ஜியார்ஜி மாக்ஸி மிலனுவிச் மாலன்காவ்.

பிறப்பு: 1902 ஜனவரி 8.

மூலம்: காஸக் என்ற குதிரை வீர வம்சம். ஊரல் பிரதேசம்.

தேக வாகு: உயரம் 5 அடி 7 அங்குலம்; நிறை 250 பவுண்டு.

குடும்பம்: இரண்டாவது மனைவி ஒரு நடிகை. இரண்டு குழந்தைகள்.

முதல் உலக யுத்தம் நடந்த போது, இவருக்கு வயது 12. ருஷியப் புரட்சி நடந்தபோது வயது 15.

பதவியேற்ற மாலன்காவ்

ஜார் ஆட்சியை ஒழிக்க 1917 - இல் நடந்த புரட்சியிலோ, அதைத் தொடர்ந்த உள்நாட்டு யுத்தங்களிலோ இவர் கலக்கவில்லை. 1920-இல் ஊரல் பிரதேசத்தைப் புரட்சித் தலைவர் லெனினின் செஞ்சேனை பிடித்துக்கொண்டது. புரட்சியின் முடிவு தெளிவு என்ற நிலை ஏற்பட்டது. அப்போதுதான் இவர் கம்யூனிஸ்ட் கட்சியில் சேர்ந்தார். அன்று வயது 18. நல்ல வாலிபம்.

செஞ்சேனையில் 'பொலிட்டிக்கல் கமிஸார்' என்ற பதவி பெற்ருர். பிறகு, மாஸ்கோ நகர உயர்தர டெக்னிகல் கலாசாலையில் எஞ்சினீரிங் கல்வி கற்ருர். அதில் 1925-இல் தேறிப் பட்டம் பெற்ருர்.

1930-இல் மாஸ்கோ ஜில்லாவின் கட்சி அமைப்புக் காரியதரிசியாகப் பதவி அடைந்தார். ஆட்களைத் திரட்டி ஒரு காரியத்தை நிர்வகிப்பதில் நிபுணர். ககனேவிச் என்பவர்தான் இவருடைய திறமையை ஸ்டாலினுக்குத் தெரிவித்து, இவரை அவருக்கு அறிமுகம் செய்வித்தார் என்று சொல்லுகிருர்கள்.

1934-இல் இவரை ஸ்டாலின் தம் சொந்தக் காரியதரிசியாக அமர்த்திக்கொண்டார். அப்போது ஸ்டாலினின் பெட்டிச் சாவியும், கட்சியின் ரகஸ்ய தஸ்தவேஜிகளும் இவர் கையிலே இருந்தன. கடுமையாய் உழைத்தார்; நன்ருய்ப் படித்தார்; வாய் திறந்து ஒரு ரகஸ்யத்தையும் வெளியிட மாட்டார். ஸ்டாலினுக்கு இவரிடம் அபார நம்பிக்கை விழுந்தது; நன்மதிப்பு உண்டாயிற்று.

1939-இல் கட்சிக் காரியதரிசிகளுள் ஒருவராக நியமனம் பெற்ருர். இரண்டாவது உலக யுத்தத்தில் ருஷியா சிக்கியதும், கட்சியின் சர்வசக்தி வாய்ந்த தலைமை ஸ்தாபனமான போலிட் புரோ என்பதில் 'காண்டிடேட் மெம்பர்' என்ற உப அங்கத்தினராகப் பதவி அடைந்தார். ராஜ்பத் தற்காப்புக் கமிட்டியிலும் ஒரு மெம்பரானுர்.

உற்பத்தித் தொழில், போக்குவரத்து இவைகளை நிர்வகிக்கும் பொறுப்பை இவரிடம் ஒப்படைத்

தார்கள். உற்பத்தித் தொழிலை யுத்தத்துக்கு உதவியான முறை யில் மாற்றி, உற்பத்திகளை இவர் பெருக்கினர். ஏராளமான விமா னங்களைத் தயாரித்தார். 1946-இல் இவருடைய அந்தஸ்து உயர்ந்தது. இவரைப் போலிட் புரோவில் முழு அங்கத்தினராக உயர்த்திவிட்டார் கள்.

அந்த வருஷமே மந்திரிகள் கவுன்ஸிலின் டெபுடி சேர்மன் களில் ஒருவராக நியமனம் பெற்றார்.

ஸோவியத் அரசாங்கத்திலேயே ஸ்டாலினுக்கு அடுத்தபடி பெரு மையும் செல்வாக்கும் இவருக்கு ஏற்பட்டுவிட்டன.

ஸ்டாலினைத் தவிர மற்ற அரசி யல் தலைவர்களை ஸோவியத் அதிகாரிகள் அதிகமாக விளம் பரம் செய்வதில்லை. ஆனால், சென்ற சில வருஷங்களாக ஸ்டா லின் படத்தோடு இவர் படமும் அடிக்கடி ஸோவியத் பத்திரிகை களில் வெளிவந்தன. ஸ்டாலின் கையெழுத்தோடு இவர் கை யெழுத்தும் போட்ட உத்தரவுகள் வெளிவந்தன. ருஷியக் கம்யூ னிஸ்ட் கட்சியின் பத்தொன்ப தாவது காங்கிரசுக்கு அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பை, இவ ரிடமே ஒப்படைத்தார்கள். எப் போதும் ஸ்டாலின்தான் அதைச் சமர்ப்பிப்பது வழக்கம். தேக அசௌக்கியத்தால், அவரால் அது முடியவில்லை; இவர் செய்தார்.

சென்ற ஜனவரி ௲ ஒரு நாள் வானம் நிர்மலமாய்த் தெளிந் திருந்தது. மாஸ்கோ ரேடியோ ஒரு வாழ்த்து உரைத்தது: "லெனினுக்கு உண்மையான சிஷ்யரும் ஸ்டாலினுக்கு வீரத் தோழருமான எங்கள் அருமை ஜியார்ஜி மாலன்காவ் அவர் களே! உம்முடைய ஐம்பதாவது பிறந்த நாளான இன்று, நீர் நெடுங்காலம் ஆரோக்கியமாய் வாழ்ந்திருக்க வாழ்த்துகிறோம்."

மாலன்காவ் பெருமை ஏணி யின் உச்சியை எட்டிவிட்டார் என்பதே அதன் பொருள்.

கடவுளின் கை

"கடவுளை நான் காண முடியவில்லை; ஸ்பர்சிக்க முடிய வில்லை. எதற்காக அவரை நான் நம்பவேண்டும்?" என்றாள் ஒரு பெண்.

பக்கத்தில் இருந்த நண்பர், "அவரைப் பிரார்த்தி. உன்னைத் தொடும்படி வேண்டு. தொடுவார்" என்றார்.

பெண் அப்படியே கண்ணை மூடிக்கொண்டு பிரார்த்தித் தாள். அவளை ஒரு கை தொட்டதை உணர்ந்து கண்ணை விழித் தாள். தொட்ட கை நண்பருடையது என்று கண்டாள்.

"என்ன இது? உங்கள் கை இல்லையா?"

"உண்மை. என், அம்மா; கடவுள் பரமண்டலத்தில் இருக்கிறார். அவர் வெகு தூரம் கையை நீட்டுவதற்குள் நேர மாகி விடாதா? உன் பக்கத்திலிருந்த ஒரு கையை அவர் உபயோகித்துக்கொண்டார்" என்றார் நண்பர். —'க்வேக்'

ருஷியக் கதை:

அவன் மனைவி

மூலம்: **லியோனிட் ஸோபெலெவ்**
தமிழ்: **கே. எஸ். பி.**

சாதாரண வாழ்க்கைச் சம்பவங்களையும் பாத்திரங்களையும் வைத்துக்கொண்டே, அரிய உணர்ச்சிகள் பொதிந்திருக்குமாறு சிறு கதை எழுதுவதில் என்றுமே ருஷியர்கள் வல்லவர்கள். அதற்கு இந்த நவீனச் சிறு கதையும் ஓர் அத்தாட்சியாகும்.

லூபா அந்த வார்டுக்கு வந்ததிலிருந்தே எங்களுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. சிரிப்புத் தவழும் அவள் இதழும், ஒளிவீசும் முகமும் யாரையும் இன்பத்தில் ஆழ்த்தின. நடக்கும் சத்தம் காதில் விழாமல் அவ்வளவு ஒய்யாரமாக, நீலநிற பூட்சுடன் அவள் அந்த ஹாலுக்குள் நுழைவாள். அவளுடைய கன்னங்கள் பனிக்கட்டியின் பளபளப்பான ஒளியைப்போல இருந்தன. துருதுருவென்று நோக்கும் அவளுடைய கூரிய விழிகள் அறை முழுவதும் நடனமாடுவது போல இருக்கும்.

'பெண்ணின் கன்னம் ரோஜாவைவிட ஒளி மிகுந்தது; மென்மையானது; இல்லையா, லூபா?'' என்று நான் வேடிக்கையாகக் கேட்டால் அவள், "சந்தேகமென்ன?'' என்று பளிச்சென்று முத்து உதிர்க்கும் இதழ்கள் விரியப் பதில் சொல்லுவாள்.

இடுப்பிலே கையை வைத்துக்கொண்டு, அவள் சமையலறைக்கும் ஹாலுக்குமாக நடப்பாள். கையைத் தேய்த்துக்கொண்டே எங்கள் ஒவ்வொருவரிடமும் நின்று சற்றுநேரம் எல்லா விஷயங்களையும்பற்றி அவள் பேசுவாள். காலையில் பேபரில் வந்த செய்திகள் அனைத்தையும் அவள் கண நேரத்தில் ஒப்பித்துவிடுவாள். கூடவே, 'இன்று இன்ன சமையல், நேற்று இன்ன படம் தியேட்டரில் ஆரம்பமாயிற்று; அடுப்புக்கு விறகு இன்றுதான் வந்தது...' என்று அப்போதைய நிலையையும் எடுத்துச் சொல்வாள். இந்த உற்சாகமான சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டே, முன்பு ஈனஸ்வரத்தில் முனகிய நோயாளிகள்கூட இப்போது அவளைப் பார்த்துப் புன்முறுவல் பூப்பார்கள். அதுவரையில் நல்ல காற்றுக்கூட இல்லாமல் நாங்கள் அவதிப்பட்டுக்கொண்டிருப்போம்; லூபா பேசத் தொடங்கியதும் இளந்தென்றலும் கதிரவனின் கிரணங்களும் அறையை ஒளிமயமாக்கும்.

உடனே ஒய்யாரமாக அவள் கழுத்தைத் தடவிப் பார்த்துக்கொண்டே ஹாலை விட்டு நகருவாள்.

எல்லா வேலைகளையும் அவள் நிதானமாகவும் பதவிசாகவும் செய்து வந்தாள். நோயாளியின் தலையை அழகாகச் சிடுக்கை நீக்கி வாரிவிடுவாள்; இடையே எந்த நோயாளியின் நிலையாவது ஆபத்தாக இருந்தால் டாக்டருக்கு ஃபோன் செய்வாள். ஓய்வு இல்லாமல் இரவு முழுவதும் விழித்தவர்களைத் தூங்கப் பண்ணுவாள். உயிர் நீங்கும் சமயத்தில்கூட அந்த நோயாளிக்கு ஆறுதல் கூறி, அவனைத் தைரியப்படுத்துவதில் அவள் தவறுவதில்லை.

எங்கள் அனைவருக்கும் லூபாவைப் பிடித்துவிட்டது. சிடுசிடுப்பு என்பதை எங்கள் வார்டுக்குள் நுழைய வொட்டாமல் தடுத்தவள் அவளே. ஒழிந்த நேரத்தில் ஒரு கட்டுச் சீட்டுடன் அவள் சீட்டாட உட்கார்ந்து விடுவாள்.

அவளோடு சீட்டு விளையாடுவதில் எனக்கு மிகுந்த ஆசை. இரவெல்லாம் நான் தூங்காமல் விழித்திருப்பேன். காலையில் அவள் மலர்முகம் என்னை வரவேற்று, சோர்வை நீக்கும்.

இவ்வளவு சிறிய பெண் எப்படி எல்லார் மனத்தையும் கொள்ளை கொண்டுவிட்டாள் என்பதை நினைக்கும்போது எனக்கு ஆச்சரியமாக இருக்கும். காலையில் என்னை ஒரு பார்வை பார்த்துவிட்டு, மற்ற நோயாளிகளைக் கவனிக்க அவள் போய்விடுவாள். வேலை சற்று முடிந்ததும் கற்றைச் சீட்டுகளுடன் என்னெதிரே ஆஜராவாள். விளையாட வருவாளே தவிர, அவள் விளையாட மாட்டாள். வந்து உட்கார்ந்த சற்று நேரத்துக்கெல்லாம் அவள் குழந்தைபோல விக்கி விக்கி அழுவாள். ஒளி தாண்டவமாடும் அவள் விழிகளில் கண்ணீர் தேங்கி நிற்கும். சீட்டுக்கட்டு அநாதையாகக் கட்டிலின் ஓரத்தில் கிடக்கும். நான் மெதுவாக அவளுடன் பேச்சுக் கொடுப்பேன்.

லூபாவின் கணவன் ஒரு படைத் தலைவன். வீரத்தின் சின்னம் என்றே அவனைக் கூறலாம். ஏற்கனவே வீரத்தோடு சேனைகளைச் செலுத்தி, அவன் நல்ல புகழ் பெற்றிருந்தான். ஆனால் ஒரு மாதமாக அவனைப் பற்றிய ஒரு தகவலும் இல்லை; ஆளே காணவில்லை என்று பலர் பலவிதமாகப் பேசிக்கொண்டார்கள். லூபா பல இடங்களில் விசாரித்தும் தேடியும் பார்த்தாள். பலனில்லை. கடைசியில் இந்த வார்டில் நர்ஸாகிவிட்டாள்.

எப்போதும் நோயாளிகளின் முனகலும், 'ஐயோ' சத்தமும் ஓயாமல் கேட்டுக்கொண்டிருந்த எங்கள் வார்டில், புத்துணர்ச்சியையும் ஒளியையும் தான் வரும்போது தன்னோடு கூடவே கொண்டுவந்து விட்டாள் லூபா.

* * *

அன்று அவள் எதிர்பாராதவிதமாய் ஒரு பழைய தோழனைச் சந்தித்தாள். அவன் அவள் கணவனோடு கூடவே ஆபீசராக வேலை செய்தவன். அவன், "ஒன்றும் பயப்படாதே! தைரியமாக இரு. அவன் வந்துவிடுவான்" என்று சொல்லிப் போனான். பொறுமை என்பது ஒரு பெரிய கலை. அதை லூபா நன்கு கற்றிருந்தாள் என்று தான் சொல்லவேண்டும்.

அவளுடைய துயரத்தில் நான் என் துன்பத்தை மறந்தேன். என்னுடைய எழிலற்ற, வாடியிருந்த உடலால் அவளுக்கு நான்

ஒருவித நன்மையும் செய்ய முடிய வில்லை. அவள் சீட்டாடாமல் உட்கார்ந்திருந்தாள்.

அதற்குள், மரணப் படுக்கையில் விழுந்து கிடந்த ஒரு மேஜர் முனக ஆரம்பித்தான். அவள் குதித்துக்கொண்டே ஆவலோடு அவனிடம் ஓடினாள். மறுபடியும் அவள் கண்கள் நீரைக் கக்க ஆரம்பித்துவிட்டன. வார்டிலுள்ள யாருக்கும் அவளுடைய துன்பம் தெரியவில்லை.

மறு நாளே என்னை மற்றொரு வார்டுக்கு மாற்றினார்கள். ஆனால் அந்த வார்டில் இருக்க என் உடல் இசையவில்லைபோல் இருந்தது. என்னை இரண்டு வாரங்களுக்கெல்லாம் லூபா இருந்த பழைய வார்டுக்கே மாற்றிவிட்டார்கள். நான் முன்பு கண்ட பழைய நோயாளிகளில் பலர் உடல் குணமாகி வீடு சென்றுவிட்டார்கள். எனக்கு அடுத்த படுக்கையில் ஒரு போர்வீரன் பல பாண்டேஜுகளுடன் கிடந்தான்.

அவனுடைய முகமும் மார்பும் குண்டுபட்டுப் பலத்த காயமாயிருந்தன. மனிதனின் முகத்தை எப்படியெல்லாம் கெடுக்கலாமோ அப்படி யெல்லாம் கெட்டிருந்தது அவன் முகம். உருவற்று ஒரே ரணமாக இருந்த அவன் முகத்தைப் பார்க்க எனக்குச் சகிக்க வில்லை. அவனுடைய தலைமயிர், புருவங்கள், தாடை - எல்லாம் அரித்துப் போயிருந்தன. அவனுடைய விழிகளைக் கண்ணாடியால் மூடியிருந்தார்கள். அவன் யாரையும் கண்ணால் பார்க்க முடியாத நிலையில் இருந்தான். அவன் பேசுவதற்கென்று வாயருகில் ஒரு குழாய் இருந்தது. பேச வேண்டுமானால் அவன் அதன் மூலமாகத்தான் பேச முடியும்.

மெல்ல மெல்ல நான் அவனைப் பற்றி விசாரித்தேன். போரில் வேதனை தாங்காமல் அவன் தவதிப்பட்டானாம். குண்டு வீச்சுக்களை மார்பில் தாங்கி, அவன் தன் எழிலை அழித்துக்கொண்டான்.

பாண்டேஜை அவிழ்த்துப் புதிதாகக் கட்டும்போதெல்லாம் அவன் 'ஆ, ஆ' என்று கூச்சல் போட்டான். வாழ்வில் அவன் உறுதியான நம்பிக்கை வைத்திருந்தான் என்பதை நான் அறிந்தேன்.

அவன் என்னிடம் பேச விரும்பினான். உலகில் தனக்குக் கூட்டாளியே இல்லையென்று அவன் சொன்னபோது, எனக்கு வருத்தமாக இருந்தது. அவன் கட்டுப் போட்டிருந்த தன் வாயால் குழல் மூலம் பேச, அந்தக் குழலிலிருந்து வெளிவந்த சொற்கள் தெளிவற்றிருந்தன. ஒரு நாள் இரவில் நாங்கள் நண்பர்களாகிவிட்டோம்.

நான் காலையில் விழித்துக் கொண்டேன். மற்ற நோயாளிகள் சுகமாக நித்திரை செய்து கொண்டிருந்தார்கள். அன்று லூபாவுக்கு வேலையில்லை என்பது எனக்குத் தெரிந்தது. பென்யா என்ற மற்றொரு நர்ஸுக்குத்தான் அன்று முறை. அவள் சற்றுச் சோம்பேறி நர்ஸ். நாற்காலியில் சாய்ந்துகொண்டே அவள் கொட்டாவி விடுவாள். சற்று நேரத்துக்கெல்லாம் அயர்ந்து தூங்கிவிடுவாள். சிகரெட் குடிப்பதற்காக நான் ஹாலை விட்டு வெளியே நடந்துவந்தேன். நான் நகர்வதைப் பார்த்த என் நண்பன்,

"தாகம்" என்று கூவினான். 'தாகம்' என்ற சொல் 'ஆகம்' என்று தெளிவற்று அந்தக் குழல் மூலம் எனக்குக் கேட்டது.

பக்கத்திலிருந்த கூஜாவிலிருந்து தம்ளரில் தண்ணீர் மொண்டு நான் அவன் வாயில் ஊற்றினேன். இரண்டு சொட்டுத் தண்ணீர் தவறி அவன் கட்டுகளில் விழுந் தது. எனக்கு என்னவோபோல இருந்தது. மன்னிப்புக் கேட்டேன்.

அவன் லேசாக நகைத்துக் கொண்டே, "பரவாயில்லை. என் மனைவி இருந்தால்...! அவளுக்குத் தான் சொகுசாகத் தண்ணீர் கொடுக்கத் தெரியும், சிந்தாமல் கொள்ளாமல்; நீங்கள் ஆண் தானே!" என்றான்.

எனக்கு என்னவோபோல இருந்தது. அவனுடைய மனைவி யைப்பற்றி அறிய எனக்கு ஆவ லாக இருந்தது.

அதற்குள் அவனே தன் கதையை ஆரம்பித்தான்: "எனக்கு ஓர் இளம் மனைவி; அவளை நான், 'கண்ணே!' என்று செல்லமாக அழைப்பதுண்டு!"

ஒருவேளை லூபா தான் இவன் மனைவியோ என்று நான் எண் ணினேன்.

அவன் தன் மனைவியைப்பற்றி மிகவும் புகழ்ச்சியாகப் பேசினான். அவளுடைய அழகான முகம், துருதுருவென்ற கண்கள், சிரிப் புத் தவழும் இதழ்கள் - எல்லா வற்றையும்பற்றி அவன் விவரித் தான். தீனக்குரலில், "அவ ளுடைய கூந்தல் எப்படி இருக்கும் தெரியுமா? அழகாகப் பாம்புபோல நெளிந்து நெளிந்து..!" என்றான். அவன் அவள் கைகளைப்பற்றிய வர்ணனையை ஆரம்பித்தான், "எவ் வளவு மிருதுவானவை, அன்பா னவை" என்றெல்லாம் அவன் என்ன என்னவோ சொல்லிப் புகழ்ந்தான். பின்பு போரில் ஈடு பட்டு அவளைப் பிரிய நேர்ந்த தையும், வாழ்வில் அவள் அன்பை இழந்துவிட்டதையும் பற்றிச் சொன்னான்.

அவனுக்கு நைப்பாசை விட வில்லை. "எப்படியாவது அவளை நான் பார்த்துவிடுவேன் ஸார், விரைவிலேயே!" என்றான்.

மறு கணம் லூபாவே எதிரே நிற்பதைப்போல் எனக்குத் தோன் றிற்று. சற்றுக் கம்பீரமான குரலில் அவன், "நாளைக்கு ஸர்ஜன் சொல்றேன்னு சொன்னார்; நாளைக் குத்தான் தீர்மானம் ஆகுமாம், என் கண்ணைப்பற்றிய செய்தி" என்றான். கண் சரியானால் தன் மனைவியைப் பார்த்துவிடலாம் என்று அவன் மகிழ்ந்தான்.

நான் லூபாவைப்பற்றி எண் ணினேன்: 'அவள் தன் கண வனைப்பற்றி ஓயாமல் பேசுகிறாளே. போர்முனையில் தன் கணவன் இருக்கிறான் என்று அவள் சொல் கிறாள். அவன் உருமாறி இருப்பான் என்றுகூட அவள் சொல்லுகிறாள். அவள் கணவன்தான் இவன்! இவனோ முகத்தை இழந்திருக் கிறான். அவள் ஆருயிர்க் கண வனைப் பிரிந்திருக்கிறாள். இந்த மாதிரி முகத்தோடு இவன் வாழ் வானேன்? சாவதே நல்லது!'

அவன் தன் கதையை ஆரம்பித் தான்: "அவள் என்னிடம் சொல்லியிருக்கிறாள், 'உன் முகத் துக்கு என்ன ஆனாலும் எனக்கு அதைப்பற்றிக் கவலை இல்லை. நான் உன்னைக் காதலிக்கிறேனே தவிர, உன் முகத்தை அல்ல' என்று! புரிகிறதா, ஸார்!"

அவன் விம்மலானான். அவனுடைய மார்பு விம்மிப் பருத்தது. தொந்தரவு செய்வானேன் என்று நான் பேசாமல் கொள்ளாமல் படுக்கையில் சாய்ந்தேன். லூபாவைப்பற்றிய நினைவு மீண்டும் என்னைக் கவர்ந்தது; 'அவள் விதி இப்படியா இருக்கவேண்டும்? இது உண்மையான அன்பா? அவள் கணவன் முகமிழந்து தவிக்கிறானே, அவளுக்கு இவனைப் பிடிக்காதோ என்னவோ!'

காலையில் நான் எழுந்திருக்கும்போது அதிக நேரமாகிவிட்டது. வழக்கப்படி நர்ஸுகள் முறை மாற்றிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அங்கே லூபாவைக் காணவில்லை. நான் என் பக்கத்துப் படுக்கையிலிருந்த நண்பனை நெருங்கி, "எப்படி இருக்கிறது?" என்றேன்.

"தேவலை!"

"நர்ஸ் வந்தாளா?"

"உடை கொண்டு வரப் போயிருக்கிறாள் அவள்! சர்ஜன் சொன்னதைப்பற்றி ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. முகக் கட்டை இன்று அவிழ்க்கிறார்களோ இல்லையோ; நான் பார்க்க முடியுமோ இல்லையோ?"

அவனுடைய உடலில் சற்றுத் தெம்பு வந்திருந்தது.

"நர்ஸை நீ பார்த்திருக்கிறாயா? நல்ல அழகியாமே அவள்!" என்றான் அவன்.

"ஆமாம்!" என்றேன் நான்.

மறுபடியும் அவன் ஆரம்பித்தான்: "நான் இன்று அவளைப் பார்ப்பேன்!"

'டக் டக்' என்ற பூட்ஸ் ஓசை கேட்கவே, அவன் படுக்கையில் புரண்டான். முகத்தில் கட்டுப் போட்டிருந்தும் பூட்ஸ் ஓசை அவன் காதில் எப்படி விழுந்தது என்பது எனக்குப் புரியவில்லை. அவனுடைய காது கூரியதோ என்னவோ!

"அதோ அவள், என் கண்ணு" என்றான் அவன்.

நான் ஆச்சரியத்தோடு திரும்பிப் பார்த்தேன். லூபாவா என்று மகிழ்ச்சியோடு திரும்பிய எனக்கு அதிருப்திதான் காத்திருந்தது. அங்கே பென்யா நின்றிருந்தாள்.

"என்ன பென்யா, லூபா எங்கே?" என்று நான் விசனத்தோடு கேட்டேன்.

"அவள் ஆஸ்பத்திரியை விட்டுப் போய்விட்டாள். தன் கணவனை அவள் கண்டுபிடித்துவிட்டாள்!"

எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. கூடவே, "பாவம், சின்னப் பெண்! நல்ல வேளை, கணவன் கிடைத்தானே!" என்று நான் லூபாவை நினைத்து மகிழ்ந்தேன்.

பென்யா அவன் பக்கத்தில் அமர்ந்தாள்.

"கண்ணு!" என்று அவன் கூவினான்.

"உடையை மாற்றிக்கொள்ளுங்கள், நேரமாச்சு!' என்று அவள் துரிதப்படுத்தினாள்.

அவன் தன் கையை அவளிடம் நீட்டினான்; அவள் சட்டையை மாட்டினாள்.

பென்யா உடனே அழ ஆரம்பித்தாள். அவளுடைய அழுகை எனக்கு ஆச்சரியத்தை உண்டாக்கியது. அவளுடைய கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடியது. அவள் தலையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டே விம்மினாள்.

"என்ன, கண்ணு!"

பென்யா உற்சாகத்தோடு எழுந்தாள். கன்னங்களில் வழிந்த

கண்ணீர் கீழே சிந்தியது. அவள் அவனுடைய உடலை நன்ருக உற்றுப் பார்த்தாள்!

அவள் கண்கள் கதவைப் பார்த்து விழித்தன. அவளுடைய பார்வையிலேயே நான் லயித்திருந்தேன். எனக்கு ஒன்றும் புரியவில்லை. அவளுடைய கண்ணீரைப் பார்த்ததும் எனக்கு ஒருவாறு விஷயம் விளங்கியது.

அவனை வேறு கட்டிலில் டாக்டரும் அவளும் படுக்க வைத்தார்கள். அவள் அழுதுகொண்டே ஹாலை நோக்கி ஓடினுள்.

நான் அவளைப் பின்தொடர்ந்தேன். அவள் அறையை நெருங்கியதும் 'ஓ' என்றே கதறிவிட்டாள்.

அவள் தோளில் கையைவைத்து, "என், என்ன செய்தி! அந்த நோயாளிக்கும் உனக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டேன்.

"ஆ, அவர் என் கணவர்! சர்ஜன் சொன்னுர், சர்ஜன்..!"

"என்ன சொன்னுர்!"

அவளால் பேசவே முடியவில்லை. நான் புரிந்துகொண்டு விட்டேன். "பென்யா, வருந்தாதே! அவர் விரைவிலேயே உன்னைப் பார்ப்பார். கண் பார்வை அவருக்குத் திரும்பிவிடும்! அவர் உன்னைப் பார்க்க மாட்டார் என்றுதானே அழுகிருய்?" என்றேன்.

"ஆமாம்! அவர் என்னைப் பார்க்க வேண்டுமே! நான் பெண்ணுயிருந்து என்ன பயன், அவர் முகத்தைப் பார்க்காமல்! என்னை விடுங்கள்!" என்று சொல்லிக்கொண்டே அவள் சற்று ஒதுங்கி நின்ருள்.

அதற்குள் அங்கே சர்ஜன் வந்தார்.

"என்ன, கணவரைப் பார்த்தாயா? முதல் தடவை அவ்வளவு போதும்! இன்னும் ஒரு வார மானதும் அவர் கண் சரியாய்ப் போய்விடும். நன்ருகப் பார்க்கலாம் நீ அவரை! அப்புறம் கூடிக் கொஞ்சி மகிழலாம்!"

டாக்டரின் ஹாஸ்யத்தைக் கண்டதும், எனக்குச் சிரிப்பு வந்தது. நாணத்தால் பென்யாவின் முகம் குப்பென்று சிவந்தது.

நான் படுக்கைக்கு வந்தேன். 'லூபா தன் கணவனைத் தேடிக் கண்டுபிடித்து விட்டாள்! பென்யாவும் தன் கணவனைக் கண்டு விட்டாள். ஆச்சு, இன்னும் ஒரு வாரத்தில் அவன் கண் சரியானதும் அவள் அவனேடு வாழச் சென்றுவிடுவாள்!" என்று நான் நினைத்தேன்.

லூபாவின் கணவன் என்று நான் யாரை நினைத்தேனே, அது தவருயிற்று; என் பக்கத்துப் படுக்கைக்காரன் பென்யாவின் கணவன். லூபா பிரிந்து சென்றது எனக்கு வருத்தமாக இருந்தது.

ஒரு மாதத்தில் அவனும் பென்யாவும் நகரத்தில் தங்கள் வாழ்வைத் தொடங்கச் சென்றுவிட்டார்கள். நான்தான் இன்னும் 'டிஸ்சார்ஜ்' ஆகாமல் அந்த ஆஸ்பத்திரியிலேயே இருக்கிறேன்!

EDITED, PRINTED AND PUBLISHED BY N. RAMARATNAM,
FOR MANJARI AT THE M. L. J. PRESS, MADRAS-4.
MANAGING EDITOR: T. J. RANGANATHAN.

குடிசையும் மனிதனும்

மலையுச்சியில் குடிசை கட்டிக்கொண்டு ஒரு மனிதன் வாழ எண்ணினான். அதற்குப் பெருஞ் செலவும் பிரயாசையும் பிடித்தன.

குடிசையைக் கட்டி முடித்து உள்ளே நுழைந்தானோ இல்லையோ, பிரமாதமான புயல் அடிக்கத் தொடங்கிவிட்டது. குடிசை முன்னும் பின்னும் கடகடவென்று ஆடிற்று. 'இதென்னடா இது! குடிசை விழுந்து விடுமோ?' என்று மனிதன் பயந்தான்.

வாயு பகவானை ஸ்மரித்து, "பகவானே, என் குடிசை நாசமாகாமல் காப்பாற்ற வேண்டும்" என்று மிக்க விநயமாகப் பிரார்த்தித்தான்; திரும்பத் திரும்பப் பிரார்த்தித்தான்.

குடிசையின் ஆட்டம் நிற்கவில்லை.

'வாயுவின் புத்திரன் ஹநுமான்' என்ற விஷயம் அவனுக்கு ஞாபகம் வந்தது. "ஸ்வாமி, இது ஹநுமந்த விலாஸம்; தங்கள் திருக்குமாரனை ஹநுமானுடையது இந்தக் குடிசை" என்று மனிதன் சிறிது தந்திரமாய் வேண்டினான்.

காற்று அப்படியும் கேட்கவில்லை.

"அடடா! இது ஸ்ரீ ராமபிரானின் பஜனை மடம், ஸ்வாமி. தங்கள் திருக்குமாரனின் பிரபு இல்லையா ராமன்?" என்று மறுபடியும் உருட்டி மிரட்டிப் பார்த்தான் மனிதன்.

அதுவும் பலிக்கவில்லை.

"இந்தக் குடிசை நாசமாய்ப் போகட்டும்! இதைக் காப்பாற்றுவது என் கையில் இல்லை. என் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள இப்போது சத்தியாக முடியும்" என்று சொல்லிக்கொண்டே, குடிசையை விட்டு மனிதன் வெகு துரிதமாய் வெளியே ஓட்டம் எடுத்தான்.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.